2018

HAPPY NEW YEAR

ஆண்டு சஞ்சிகை: விச்சு – 04

14.01.2018 - 15.01.2019

வாலையூர் வாலிபரின்...

# நேத்திரம்





## கோலாகல நிறைவுகண்டது ஆண்டு விழா



பெற்றோரிடம் பெற்ற கடன் தீர்ப்போம்
சைவப்புலவர் சு. செல்லத்துரை



தைத்திருநாள் வாழ்த்துக்கள்

வாலையூரின் தங்கமகள் "ஹரினா"
ஓர் நேர்காணல்

நேரிய உண்மையின் நேத்திரமாய் நீடூழி வாழி!
இளவாலையூர் இராசநாயகம்

தடம் மாறுகிறதா இளைஞர் சமுதாயம்?
ஜே. மேரிநிறஞ்சிகா



பெண்ணென்று பிறந்து விட்டால்
ம. கேஜயா

- வெளியீடு : இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் -

இளவாலை வருத்தப்படாத வாலிபர்
சங்கத்தின் வெளியீடான

நேத்திரம்

வீச்சு : 3 14.01.2018

தலைமைக்காரியாலயம்
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்
சித்திரமேழிச் சந்தி,
இளவாலை

தொலைபேசி : 0750416493, 0750416476
0773992478

இணையம் : WWW.ivvsangam.com

முகநூல் : WWW.Facebook.com/ivvsangam

நூலாசிரியர் திரு.க.கபிலன்
(இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்)

காப்பாளர் திரு.செ.அன்ரன்
தலைவர்
(இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்)

ஆலோசகர் திரு.நா.சுகந்தன்
உறுப்பினர்
(இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்)

அட்டைப்படம் திரு.ந.கிரிஷாந்
உறுப்பினர்
(இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்)

மலர்குழு திரு.கு.லக்ஷன்
திரு.நி.கஜானன்
திரு.இ.கௌரிவானுசன்

அச்சுப்பதிப்பு : வைரஸ் பிறிண்டேர்ஸ்
இணுவில்

நேத்திரத்தின் அடுத்த வீச்சு : 14.01.2018

# நேத்திர வீச்சினுள் .....

**இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பயணச் சுவடுகள்**
தொகுப்பு IV
பக்கம் -07

**லுமாலா சைக்கிள்**
உவன் உள்ளூர் சுருளன்
பக்கம் -45

**இராவணாயணம்**
கௌரி
பக்கம் -82

**ஓசோன் படலத்தின் முக்கியத்துவம்**
திருமதி.வி.சிறீபத்மாவதி
(ஓய்வுநிலை அதிபர்)
பக்கம் -76

**மது போதையற்ற கிராமத்தை உருவாக்குவோம்**
பாலசுப்பிரமணியம் தர்சா
பக்கம் -93

**இலங்கையின் உள்ளூராட்சி சபைகளின் தோற்றமும் வளர்ச்சியும்**
வி.கு.வின்சன் ஞானதயாளன்
பக்கம் -112

# இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்ககீதம்

**இராகம் : பிருந்தாவனசாரஸ்கா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

வருத்தப்படாத வாலிபர் சங்கம் நாம்
வருத்தப்படுவார்க்கு நல்ல வாழ்வளிக்கும் சங்கம்

**அனுபல்லவி**

அல்லற்பட்டாற்றாது அவலப்படுவோரின்
தொல்லை துயர் களைந்து துவளாமல் காக்கும் சங்கம்

**சரணம்**

மது புகை போதை மனதிலும் நினையோம்
மாண்புனு மனிதராய் மதிப்புடன் திகழ்வோம்
சாதி மத வர்க்க வேதமெலாம் கடந்து
நீதி நெறி நின்று நித்தம் உதவிடுவோம் - வருத்தப்படாத வாலிபர் சங்கம்

பாரம்பரிய கலை பண்பாடு போற்றிடுவோம்
பார்புகழ் கல்வியும் ஒழுக்கமும் வளர்ந்திடுவோம்
தொழில் வளம் பெருகிட சுகவாழ்வு சிறந்திட
எழிலான ஊராக இளவாலையை மலரவைப்போம் - வருத்தப்படாத
வாலிபர்சங்கம்

பாடல் ஆக்கம் : சைவப்புலவர் செல்லத்துரை
இசையமைப்பு : சங்கீத கலாவித்தகர்
திருமதி .பா.மரியதாஸ்

# தலைவரின் உள்ளத்திலிருந்து....



எமது இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமானது நான்காம் ஆண்டினை வெற்றிகரமாக நிறைவுசெய்து ஐந்தாம் ஆண்டில் காலடிபதிக்கும் இவ்வேளையில் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் தலைவராக இக்காலப்பகுதியில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது.

வாலையூர் வாலிபரின் நேத்திரம் 4வது சஞ்சிகையினை வெளிப்படுத்துவதில் தலைவர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கலை கலாச்சாரம் பண்பாட்டு விழுமியங்களை பேணக்கூடிய வகையிலும் பல அரசியல் சூழல் மாற்றங்களை எதிர்கொண்டு பல்லின சமூக சூழலொன்றில் பிற சமூகங்களுடன் உறவை பேணுவதுடன் தமிழர் தம் பண்பாட்டு அடையாளங்களை காத்து நிற்கின்ற வகையில் எம்மவர்களின் திறமைகளுக்கு களம் அமைக்கும் நோக்கத்தோடும் எமது செயற்பாடுகளையும் சேவைகளையும் உலகிற்கு எடுத்துக்காட்டவும் இச் சஞ்சிசையினை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வாலையூர் வாலிபரின் நேத்திரம் பல பெரியவர்கள் வாழ்ந்து மறைந்த இளவாலை மண்ணின் பெருமைகளை உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றது.

எமது செயற்றிட்டங்களான "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டம், "அரும்பு" செயற்றிட்டம் போன்றவற்றிற்கு உதவி புரிந்து கொண்டு இருக்கின்றார்கள். இவர்களுடைய உதவி தொடர்ந்தும் எமது சங்கத்திற்கு கிடைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டு அதற்கு மேலாக என்னோடு தோளோடு தோள் நின்று சேவையாற்றும் சங்க உறுப்பினர்கள், சிரேஸ்ட உறுப்பினர்கள், ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், எமது கிராமத்தவர்கள், வர்த்தகர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இந்நேரத்தில் நினைவு கூறுவதோடு இச் சஞ்சிகையினை குறுகிய காலத்தில் வெளியிட ஆக்கங்கள், அனுசரணைகள் வழங்கியவர்களுக்கும் முக்கியமாக சிறப்பான முறையில் வெளியிட்ட சஞ்சிகையின் மலர்க்குழுவிற்கும் எமது சங்கம் சார்பான நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து எமது சேவைப் பயணம் தொடர்ந்தும் நல்ல முறையில் தொடர உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் எதிர்பார்த்து எமது சேவைப் பயணத்தை தொடர்கின்றோம்.

நன்றி

செ.அன்ரன் செல்வக்குமார்

# நூலாசிரியரின் உள்ளத்திலிருந்து....



4 ஆண்டுகளை நிறைவு செய்து 5 ஆம் ஆண்டில் எமது சங்கம் கால்பதித்திருக்கும் இந்த வேளையில் எமது வாலையூர் வாலிபரின் "நேத்திரம்" சஞ்சிகை உங்கள் கைகளில் தவள்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இச்சஞ்சிகையின் நூலாசிரியராக செயற்பட்டமை எனக்கு பெருமை கொடுக்கிறது. எமது இளவாலை வாழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் கவிஞர்களிற்கு களம் அமைத்துக் கொடுக்கவும், எமது கிராமத்தின் பெருமைகளை எடுத்துக்கூறும் வகையிலும் கடந்த ஆண்டுகளை காட்டிலும் இந்த ஆண்டில் 4வது வீச்சாக வெளியாகி இருக்கும் நேரத்தில் அழகுற வடிவமைக்கப்பட்டு இருக்கும் என எண்ணுகிறேன்.

மேலும் இச்சஞ்சிகை அழகுற உதவிய மலர்க்குழு உறுப்பினர்கள் மற்றும் ஆக்கங்களை தந்துதவிய மாணவர்கள், பெரியவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நேத்திர வீச்சின் வீச்சு எல்லை இன்னும் பரந்து இனிவரும் காலங்களிலும் சிறந்து விளங்க பிரார்த்தித்துக் கொண்டு உங்கள் விமர்சனங்கள், ஆலோசனைகளை எதிர்பார்த்து நிற்கின்றேன்.

நன்றி


க.கபிலன்
நூலாசிரியர்.

# நேரிய உண்மையின் நேத்திரமாய் நீடூழி வாழி

மறைகள் இரண்டினதும் மணியோசை நிதம்கேட்டு
மருதமொரு நெய்தல் மயங்கிக் களித்திணைந்து
நிறை வளங்கள் எல்லாம் நித்தம் குவிவதனால்,
நீடு புகழ்உடுத்த நிலத்தாயே இளவாலை!
முப்பது ஆண்டுகாலம் மூண்ட இருட்போர் நடுவே
மூச்சுத் திணறியபின் மீண்டும் மூச்சயிர்த்து
"எப்படியும் என்மக்கள் என்னைத் தேற்றிடுவார்"
என்ற துணிவுடனே எழுந்து நிற்கின்றாள்.
போர் விதியை ஏற்காது புலம்பெயர்ந்தோர் மத்தியிலும்
புயவலிசேர் வாலிபர்கள் புலம்பெயராது என்மடியில்
ஆர்வமுடன் கூடி அரும்பணிகள் ஆற்றிடுவார்
ஆற்றிதேற்றிடுவர் அஞ்சேன் நான் இளவாலை - எனும்
தாயின் கருத்துணர்ந்த தனயர் இளம் வாலிபர்கள்
தாங்கி முடிப்பதுமே தம்கடனாய் ஏற்றெடுத்தார்
சேயர் பலர் ஒன்றாய்ச் சேர்ந்த பலத்துடனும்
செம்மை உளத்தூய்மை செறிஉளத் துணிவுடனும்
"வருத்தப்படாத இளம் வாலிபர்கள் சங்கம்" என்ற
வரலாற்றை வியக்க வைக்கும் வண்ணமாம் பெயர்சூட்டி
திருத்தமுடன் இனம் வாழத் தவப்பணிகள் பலபலவாய்
தினம்தினமும் ஆற்றி, திகழ் புகழில் ஒளிர்கின்றார்.
புலம் பெயர்ந்த சோதங்கள் பேர்ந்த நாடுகளுடனே
புத்தம் புதிதாகப் பொற்பாசப்பாலங்கள்
நலம் பெருக ஆக்கி நவநவமாம் பலைகள்
நாள்தோறும் ஏற்று நலிந்தோரைக்காக்கின்றார்
வறுமையிலும் போரினிலும் வாடித் தவித்தேன்
வருத்தப்படாதிருக்க வருத்தப்படாதுழைக்கின்றார்.
தற்பெருமைஇல்லாத் தரமான பணிகளால்
தவிர்ப்போர்க்கு ஆற்றுகின்ற தவப்பணிக்குக் கைகொடுக்க
நற்கொடை வல்லோரை நாடி இணைத்து அவர்க்கு
நேர்த்தியாய்க்காட்ட நேத்திரம் ஆம் எழுத்திதழை

வெளியீடு செய்கின்றார். வரவேற்போம், வாழ்த்துவோம்
நேத்திரமே நற்பணியின் நேர் ஏடே நல் இதமே!
நேரிய உண்மையின் நேத்திரமாய் நீடூழி வாழி!
நெஞ்சு இனிக்க, காட்டும் பணி இனிக்க, சொல்லும் தமிழ் இனிக்க
தாய் மண்ணில் எங்கள் வாழ்வு இனிக்க வெற்றி இதழாய் நீடூழி வாழி!

கவிஞர் இளவாலை இராசநாயகம்



# இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்க செயற்திட்ட அறிக்கை
# (29.10.2016 – 17.10.2017)

**2016 - 2017 சங்க நிர்வாகம்**



எமது சங்கத்தின் நிர்வாகமானது ஆண்டுதோறும் புதிதாக சங்க உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த 12.11.2016 அன்று தெரிவு செய்யப்பட்ட நடப்பாண்டு நிர்வாகமாக.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | நடராஜா கிரிஷாந் |
| செயலாளர் | : | நாகேந்திரன் சுகந்தன் |
| பொருளாளர் | : | சிவபாலசுந்தரம் ரிஷாந்தன் |
| உபதலைவர் | : | முருகையா நிறஞ்சன் |
| உபசெயலாளர் | : | மங்களேஸ்வரன் மரியநாயகம் |

ஆகியோர் செயற்பட்ட வண்ணம் உள்ளனர். மேலும் மொத்தமாக 44 உறுப்பினர்களும் 6 ஆலோசனைக் குழு உறுப்பினர்களும் 15 சிரேஷ்ட உறுப்பினர்களான இயங்கி வருகின்றது எமது சங்கம். சங்க உறுப்பினர்களுக்கு சிலபடியான கட்டுக் கோப்புகளும் விதிமுறைகளும் விதிக்கப்பட்டுள்ளது. அவற்றை மீறுவோர் மீது நிர்வாக நடவடிக்கை எடுக்கப்படும் இவற்றில் பிரதானமானவை.

01. சங்கஉறுப்பினர்கள் மதுபாவனை புகைத்தல் என்பவற்றை நிறுத்தவேண்டும் அல்லது முற்றாக குறைக்க வேண்டும்.
02. சங்கத்தின் பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் எந்தவொரு செயற்பாடுகளிலும் ஈடுபடக் கூடாது.
03. தமது பிறந்த தினத்தின் போது உறுப்பினர்கள் வீண் ஆடம்பர செலவுகளைக் குறைத்து பொருளாதாரம் நலிவான குடும்பங்களை சேர்ந்த மாணவர்களின் கற்றலுக்கு இயன்ற உதவிகளை முன்னெடுக்க வேண்டும்.

# செயற்றிட்டங்களும் சேவைகளும்

## உயர்த்தும் கரங்கள் செயற்திட்டம்

அன்ரன் செல்வக்குமார் தலமையில் இயங்கிவரும் இந்த செயற்திட்டத்தின் மூலமாக உள்நாட்டு யுத்தத்தினாலும் இயற்கையினாலும் பாதிக்கப்பட்டு பொருளாதார நலிவுடன் இருக்கும் குடும்பங்களுக்கு அவர்களின் குடும்ப நிலையை ஓரளவேனும் உயர்த்திவைக்க எம்மால் பெறக்கூடிய நிதிவளங்களை திரட்டி உதவிகளை மேற் கொள்கிறோம். இந்த சேவை கடந்த காலங்களில் வடமாகணத்திலேயே முன்னெடுக்கப்பட்ட போதிலும் இந்த ஆண்டு கிழக்கு மாகாணத்திலும் உதவித்திட்டங்களை முன்னெடுத்து செயற்திட்டத்தை விஸ்தரித்துள்ளோம்.

எமது சேவைகளை பத்திரிகை, ஊடகங்கள் மூலமாக பார்வையிட்டு தினந்தோறும் எமக்கு ஏராளமான உதவி வேண்டுகோள்களும் விண்ணப்பங்களும் கிடைக்கின்றது. அவற்றை சேகரித்து அவற்றின் தன்மையினையும் உண்மைத்தன்மையினையும் நேரில் சென்று உறுதிப்படுத்தி தேவையின் அவசியத்தை உணர்ந்து தரப்படுத்தி, பயனுள்ள வகையில் உதவிகளை நேரில் கொண்டு சேர்ப்பதில் மிகவும் உணர்வுடன் செயற்படுகிறது இந்த உயர்த்தும் கரங்கள் செயற்குழு.

இந்த உதவித்திட்டங்கள் பெரும்பாலும் வெளிமாவட்டங்களிலேயே முன்னெடுக்கப்படுவதனால் இதன் போது ஏற்படுகின்ற பயணசெலவுகள், வாகன செலவுகள் செயற்திட்ட நிதியில் இருந்தோ சங்க நிதியில் இருந்தோ பெறப்படுவதில்லை. மாறாக உறுப்பினர்களே தமது சொந்த நிதியினையும் சொந்த வாகனத்தையும் பயன்படுத்துகின்றனர்.

### வாழ்வாதார உதவிகள்

வலிவடக்கு மீள்குடியேற்ற பகுதிக்குட்பட்ட கட்டுவன் மேற்கு பகுதியி் வாழ்ந்து வரும் தந்தையுட்பட்ட 2 பிள்ளைகள் மாற்று திறனாளிகளாக கொண்ட குடும்பம் ஒன்றின் பொருளாதார நலிவான சூழலை கருத்தில் கொண்டு நாளொன்றுக்கு 10 போத்தல் பால் வழங்கத்தக்க ரூபா 100,000 பெறுமதியான பசுமாடு ஒன்று

வழங்கப்பட்டது. இதற்கான நிதியினை நோர்வே நாட்டை சேர்ந்த அன்பர் ஒருவர் வழங்கினார்.

முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுரம் பகுதியை சேர்ந்த போரினால் தந்தையை இழந்த பெண் தலமைத்துவ, முன்னாள் போராளியை கொண்ட குடும்பத்திற்கு அவர்களின் நலிவான பொருளாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு ரூபா 45,000 பெறுமதியான தையல் இயந்திரம் ஒன்றினை வழங்கி வைத்தோம். இதனை எமது உறுப்பினர்கள் நேரில் சென்று வழங்கி வைத்தனர்.

## கற்றல் உபகரணங்கள் வழங்குதல்

போரில் தாயை இழந்து தந்தையின் போதிய உதவியின்றி பொருளாதார நெருக்கடிகள் மத்தியிலும் கல்விகற்று பல்கலைகழக தொழில்நுட்ப பீடத்திற்கு தெரிவான மாணவி ஒருவருக்கு அவரது கல்விச் செயற்பாட்டுக்குத் தேவையான ரூபா 55,000 பெறுமதியான மடிக் கணினியொன்று எமது சங்க உறுப்பினர்களால் நேரில் சென்று வழங்கப்பட்டது.

சிறுப்பிட்டி கிராமத்தில் வசித்துவரும் பொருளாதார நலிவான குடும்பங்களை சேர்ந்த 8 மாணவர்களுக்கு தலா ரூபா 2,000 வீதம் கற்றல் உபகரணங்கள் பாடசாலை காலணிகள், புத்தகப்பைகள் வழங்கிவைக்கப்பட்டது. இதற்கான நிதி உதவியை தமது குழந்தையின் 2வது பிறந்த நாளை முன்னிட்டு கனடா வாழ் இளவாலை கிராம அன்பர் ஒருவர் வழங்கினார்

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சி கிராமத்தை சேர்ந்த தாய் அல்லது தந்தையை இழந்த 30 மாணவர்களுக்கு ரூபா 50,000 பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் பாடசாலை காலணிகளும் வழங்கப்பட்டது. இதற்கான நிதியினை சிங்கப்பூர் வாழ் அன்பர் ஒருவர் வழங்கியிருந்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி கருணை இல்ல மாணவர்கள் 20 பேருக்கு பாடசாலை புத்தகப்பைகள் வழங்கினோம். இதற்கான நிதியினை சிங்கப்பூர் வாழ் அன்பர் ஒருவர் வழங்கியிருந்தார்.

யாழ் நுனாவில் பகுதியில் இருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் தாய் அல்லது தந்தை இழந்த 15 மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு தேவையான பாடசாலை கற்றல் உபகரணங்கள், பாடசாலை காலணிகள் என்பன வழங்கப்பட்டது.

கிளிநொச்சி வட்டகச்சி பகுதியை சேர்ந்த போரினால் தாய் தந்தைஇழந்த 7 மாணவர்களுக்கு சுமார் 20,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் நேரில் சென்று வழங்கப்பட்டது. இதற்கான நிதி எமது அதிஷ்டலாபச்சீட்டு இலாபத்தில் இருந்து ஒதுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டம் மூதூர் படுகொலை இடம்பெற்ற குமாரபுரம் பகுதியைச் சேர்ந்த தாய் அல்லது தந்தையை இழந்த சுமார் 40 மாணவர்கள் எமது சங்கத்திற்கு விடுத்த வேண்டுகோளினை அடுத்து அதன் உண்மைத்தன்மையினை உறுதி செய்து திருகோணமலை மாவட்டத்திற்கு நேரில் சென்று குறித்த மாணவர்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள், பயிற்சிப்புத்தகங்கள் என்பவற்றை வழங்கி வைத்தது "உயர்த்தும் கரங்கள்" விஷேட செயற்குழு.

எமது இளவாலை கிராமத்தில் உள்ள வலித்தூண்டல் றோ.க.த.க பாடசாலை அதிபர் கேட்டுக் கொண்ட வேண்டுகோளுக்கு இணங்கவும் அப்பாடசாலையில் கற்றுவரும் மாணவர்களில் அதிகமானோர் நலிவான குடும்ப பொருளாதார சூழலில் இருப்பதனாலும் அப்பாடசாலை மாணவர்கள் 40 பேருக்கு தேவையான கற்றல் உபகரணங்களை கையளித்திருந்தோம்.

இதற்கான நிதியினை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அன்பர் ஒருவர் வழங்கியிருந்தார்.

எமது இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் அவர்கள் எமது சங்கத்தை தொடர்பு கொண்டு தமது பாடசாலையில் அதிகளவான மாணவர்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக பாடசாலை காலணிகள் அணிந்து வருவதில்லை. அவர்களுக்கு தங்களால் இயன்ற உதவிகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு அமைய மெய்கண்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு பாடசாலை காலணிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டம் வெள்ளாங்குளம் பகுதியைச் சேர்ந்த பொருளாதார வளக் குறைவான குடும்பங்களைச் சேர்ந்த தாய் தந்தை இழந்த 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியினை புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் அன்பர் ஒருவர் வழங்கியிருந்தார்.

இளவாலை மாரிசன்கூடல் R.C பாடசாலை அதிபர் அவர்கள் எமது சங்கத்தை தொடர்பு கொண்டு தமது பாடசாலையைச் சேர்ந்த 22 மாணவர்கள் சற்று நலிவான குடும்பச்சூழலை கொண்டுள்ளனர், அவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பெற்றுத்தருமாறு கேட்டுக் கொண்டதற்கமைய அப்பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள் என்பவற்றை பாடசாலை அதிபரிடம் கையளித்தோம்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய் தமிழ் பாடசாலை நகர்ப்புறத்தில் இருந்து வெகு தொலைவில் உள்ளது. போரின் பாதிப்புகளுக்கு உள்ளாகி ஆசிரியவளம் மிகக்குறைந்து காணப்படுகிற இப்பாடசாலைக்கு யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் சிலரே சென்று மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை நடத்தி வருகின்றனர். எனவே அப்பாடசாலையில் இருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் க.பொ.த சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவர்களுக்கான கடந்தகால வினாத்தாள்கள் உள்ளடகங்கிய ரூபா 20,000 பெறுமதியான 40 புத்தகங்களை பெற்று கையளித்துள்ளோம். இப்புத்தகங்கள் பாடசாலையில் வைக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பயன்படுத்த உள்ளதாக பாடசாலை அதிபர் உறுதியளித்துள்ளார். இதற்கான நிதியினை யாழ் இந்துக்கல்லூரியின் 2009 உயர்தரப்பிரிவு நண்பர்கள் வழங்கினார்கள். அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறி நிற்கின்றோம்.

## மருத்துவ உதவிகள்

போர்க் காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் பிறந்த 9வயதுச் சிறுவன் ஒருவருக்கு சுவாசப்பையில் ஏற்பட்டிருக்கும் துவாரம் காரணமாக அவருக்கு தொடர்ச்சியாக செயற்கை சுவாசம் ஏற்றினால் மாத்திரமே உயிர் வாழக்கூடிய நிலைமை உருவாகியது. மாவிட்டபுரம் நல்லிணக்கபுரம் வீட்டுத்திட்டத்தில் நலிவான

பொருளாதாரத்தை கொண்டு வாழ்ந்துவரும் குறித்த குடும்பத்தினர் தொடர்ச்சியாக சுவாசம் ஏற்றும் இயந்திரத்தை கொள்வனவு செய்ய போதிய பணமின்றி எம்மை தொடர்பு கொண்டனர். அச் சிறுவனின் மருத்துவத் தேவைக்காக ரூபா 35,000 பணத்தினை எமது சங்கத்தினால் வழங்கி வைத்தோம். இதற்கான நிதியை புலம்பெயர் உறவு ஒருவர் முகநூல் மூலமாக எமை தொடர்பு கொண்டு உதவினார்.

மாவிட்டபுரம் நல்லிணக்கபுரம் வட்டுத்திட்டத்தை சேர்ந்த மற்றுமொரு சிறுவன் பிறப்பில் இருந்தே மலவாய் இன்றி வயிற்றின் மூலமாக மலம் வெளியேற்றும் அவலநிலையை சந்தித்தமையால் அவருடைய சத்திரசிகிச்சைக்கு அதிகளாவன பணம் தேவைப்பட்டபோதும் அக்குடும்பத்தால் திரட்ட இயலாமையினால் எமது சங்கத்தை தொடர்பு கொண்டு கேட்டதற்கு இணங்க ரூபா 15,000.00 பணத் தொகையை அவரது மருத்துவ பராமரிப்பு, போஷாக்கான உணவு என்பவற்றுக்காகவும், மற்றும் மருத்துவ தேவைக்காகவும் வழங்கப்பட்டது. இதற்கான நிதியை எமது கிராமத்தை சேர்ந்த அன்பர் ஒருவர் வழங்கினார்.

## மாதாந்த உதவிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விபயின்று வரும் போரில் தந்தையை இழந்த மாணவி ஒருவருக்கு கடந்த ஒருவருடகாலமாக ரூபா 2500 வீதம் மாதாந்த உதவி வழங்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றுவரும் போரில் தந்தையை இழந்த மாணவன் ஒருவனுக்கு கடந்த ஒருவருட காலமாக ரூபா 2500 வீதம் மாதாந்தம் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட இரு உதவிகளையும் பெயர்குறிப்பிட விரும்பாத எமது சங்கத்தின் நலன்விரும்பி ஒருவர் வழங்கி வருகின்றார்.

தெல்லிப்பளையில் வசித்து வரும் தந்தையை இழந்த யாழ் பல்கலை மாணவி ஒருவருக்கு மாதாந்தம் ரூபா2000 வீதம் கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்பட்டு வருகின்றது.

கீரிமலைப் பகுதியைச் சேர்ந்த தந்தையை இழந்த மகாஜனாக் கல்லூரியில் கல்விகற்கும் மாணவி ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 1500 வீதம் வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்குறிப்பிட்ட இரு உதவிகளையும் எமது சங்க உறுப்பினர்கள் தமது பிறந்தநாள் பணத்தில் வழங்குகின்றனர்.

தந்தை காணாமல் போகச் செய்யப்பட்ட அரியாலைப்பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 1000 கற்றல் செலவுகளுக்காக வைப்பிலிடப்படுகின்றது. இதற்கான நிதியை எமது சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் வழங்கி வருகின்றார்.

## ஏனைய உதவித்திட்டங்கள்

புத்தாண்டினை முன்னிட்டு எமது சங்க உறுப்பினர்கள் விஷேட வாகனங்கள் மூலமாக கிளிநொச்சி மாவட்டம் சென்று அங்குள்ள காந்தி சிறுவர் இல்ல சிறார்களுக்கான அன்றைய நாளுக்கான மூன்று நேர விடே உணவை வழங்கி அவர்களுடன் காலை உணவருந்திவிட்டு பின்னர் முல்லைத்தீவு அன்பு இல்லம் சென்று அவர்களிற்கும் மூன்று நேர உணவு வழங்கி அவர்களுடன் கதை பேசி மகிழ்ந்தோம். இதற்கான நிதியை சிங்கப்பூரைச் சேர்ந்த அன்பர் தமது குழந்தையின் பிறந்த தினத்தை முன்னிட்டு வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்டம் கருனை இல்லத்தை சேர்ந்த சிறார்களுக்கும் சிறப்பு தேவையோர்க்கும் மூன்று நேர உணவினை வழங்கியிருந்தோம். இதற்கான நிதியினை அவுஸ்ரேலியா வாழ் அன்பர் ஒருவர் வழங்கியிருந்தார்.

உயரப்புலம் சிறிமுருகன் பாலர் பாடசாலையினர் விடுத்த வேண்டு கோளிற்கிணங்க, பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கென சுமார் 50 மாணவர்களுக்குரிய பரிசில் பொதியினை வழங்கி வைத்தோம்.

கடந்த மே மாதம் 19ம் திகதியன்று முல்லைத்தீவு அன்பு இல்லத்தை சேர்ந்த சிறார்களுக்கு மூன்று நேர உணவினை எமது சங்க உறுப்பினர்கள் நேரில் சென்று

வழங்கிவைத்தனர். இதற்கான நிதியை மானிப்பாயைச் சேர்ந்த அன்பர் ஒருவர் தனது பிறந்தநாளை முன்னிட்டு வழங்கியிருந்தார்.

கிளிநொச்சி காந்தி இல்லச் சிறார்களுக்கு கடந்த ஆனிமாதம் மேலுமொருநாளுக்கான மூன்று நேர உணவினை வழங்கியிருந்தோம் இதன் போது அச்சிறார்களுடன் எமது உறுப்பினர்களும் இரவு உணவில் கலந்து கொண்டு அவர்களை மகிழ்வித்தனர். இதற்கான உணவினை தமது குழந்தையின் பால்பருக்கு தினத்தை முன்னிட்டு எமது கிராமத்தைச் சேர்ந்த சிங்கப்பூர் வாழ் அன்பர் ஒருவர் வழங்கியிருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்கால் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் அவர்கள் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் அப்பிரதேசத்தைச் சேர்ந்த அங்கவீனமாக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் தமது சுய தேவைகளை ஒருவருக்கொருவர் இணைந்து பூர்த்தி செய்வதற்காகவும், அவர்களின் அவர்களின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் "சுய உதவிக்குழு" எனும் அமைப்பை அவ் உறுப்பினர்களின் மாதாந்த மற்றும் அரச நிதி மூலமாக பெற திட்டமிட்டபோதும் அவர்களின் வங்கிகணக்கை ஆரம்பிக்க ஒரு தொகைப்பணம் தேவைப்பட்டது இதனை பிரதேச செயலாளர் ஊடாக அனுப்பி வைத்தோம் இதற்கான நிதியை சிங்கப்பூர் வாழ்பொறியியளாளர் வழங்கியிருந்தார்.

## துவிச்சக்கர வண்டி வழங்கப்படாமை

கிளிநொச்சி மாவட்டம் நகரப்பகுதியில் இருந்து வெகு தூரத்தில் இருக்கும் சோழ நிலா எனும் குக்கிராமத்தில் வசிக்கும் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்காக சுமார் 6கிலோமீற்றர் வரை பயணம் செய்ய வேண்டிய தேவை இருப்பதனால் அக்கிராமத்தைச் சேர்ந்த பொருளாதார நலிவான குடும்பங்களைச் சேர்ந்த 2 மாணவர்களுக்கு பாடசாலைக்கு செல்வதற்காக துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த போரில் தாய் தந்தையை இழந்த 3 மாணவர்களுக்கு அவர்கள் பாடசாலை செல்வதற்காக 3 துவிச்சக்கர வண்டிகள் எமது "உயர்த்தும் கரங்கள்" செயற்குழு நேரில் சென்று

வழங்கி வைத்தது. இதுற்கான நிதியை எமது கிராமத்தவரான அமெரிக்காவில் வசித்து வரும் அன்பர் ஒருவர் வழங்கினார்.

போரினால் தந்தையை இழந்த கிளிநொச்சி மாவட்ட வட்டகச்சி பகுதியை சேர்ந்த மாணவன் ஒருவன் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க குடும்ப பொருளாதார நிலைமையை உறுதி செய்து எமது சங்கத்தினர் நேரில் சென்று துவிச்சக்கர வண்டியை வழங்கினார். இதற்கான நிதி எமது அதிஷ்டலாபச்சீட்டிழுப்பு இலாபத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் போரில் காணாமல் போகச் செய்யப்பட்ட தந்தையைக் கொண்ட இருவேறு குடும்பத்தைச் சேர்ந்த 2 மாணவர்களுக்கு அவர்களின் குடும்ப நிலைமையை கருத்தில் கொண்டு மடு பிரதேச செயலரின் உறுதிப்படுத்தலோடு 2 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டது. இதனை நேரில் சென்று வழங்கியிருந்தோம். இதற்கான நிதியினை எமது கிராமத்தைச் சாராத லண்டன் வாழ் அன்பர் ஒருவர் வழங்கியிருந்தார்.

கிளிநொச்சி மாவட்டம் அம்பாள்குளம் பகுதியை சேர்ந்த போரில் தந்தை, தாய் இருவரையும் இழந்து பாட்டியின் அரவணைப்பில் வாழ்ந்துவரும் மாணவி ஒருவருக்கு அவரது பொருளாதார சூழலை உறுதி செய்து பாடசாலை செல்வதற்காக துவிச்சக்கர வண்டி ஒன்று வழங்கியிருந்தோம். இதற்கான நிதியை புலம் பெயர்ந்து வாழும் அன்பர் ஒருவர் வழங்கினார்.

## மருத்துவ முகாம் செயற்திட்டம

ஆண்டுதோறும் நடாத்திவரும் இலவச மருத்துவ முகாம் வரிசையில் இந்த ஆண்டும் தொற்றா நோய்களை ஆரம்பத்தில் கண்டறிவதற்கான "இலவச மருத்துவ முகாம்" ஒன்றினை கடந்த சித்திரை மாதம் முற்பகுதியில் நடாத்தினோம். இம் மருத்துவ முகாமானது வைத்திய நிபுணர் திரு.பேரானந்தராஜா அவர்களின் வழிகாட்டல் ஆலோசனையுடன் இடம்பெற்றது. இதில் பல வைத்தியர்கள், மருத்துவபீட மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு சேவையாற்றினார்கள். இம்முகாமில் சுமார் 200 பயனாளிகள் கலந்து கொண்டுபயனடைந்தனர்

## தூய்மையான இளவாலை செயற்திட்டம்

எமது இளவாலை கிராமத்தை தூய்மைப்படுத்தும் நோக்குடன் மக்கள் அதிகம் பயன்படுத்தும் பொது இடங்கள், வீதி ஓரங்களில் பற்றை செடிகள், கொடிகள் காணப்படுவதனால் அதனை தூய்மைப்படுத்தும் நோக்கில் இளவாலை கிராமத்தின் ஒவ்வொரு பிரதேசங்களையும் ஒவ்வொரு உறுப்பினரின் பொறுப்பின் கீழ் வழங்கி கிராம மக்களையும் இணைத்து இந்த சிரமதான செயற்றிட்டத்தை முன்னெடுத்தோம். இதில் கிராம மக்கள் பாரியளவில் எமக்கு ஒத்துழைத்து எம்முடன் இணைந்து சிரமதானப்பணிகள் மேற்கொண்டு சிற்றுண்டிகள் வழங்கி ஊக்குவித்தனர்.

## தென்னிலங்கையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப் பட்டோருக்கான உதவித்திட்டம

தென்னிலங்கையில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த உறவுகளுக்காக, மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் இளைஞர் கழகம் கந்தரோடை மக்கள் முன்னேற்றகழகம் ஆகிய எமது சகோதர இளைஞர்களுடன் இணைந்து சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், கிளிநொச்சி கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் தோறும் சென்று விஷேட வாகனங்கள் மூலமாக உலர் உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் சேகரித்து இளைஞர் சம்மேளன வாகனமூடாக நேரில் சென்று அவற்றை வழங்கி வைத்தோம்.

## இரத்ததான முகாம்

எமது சங்கத்தால் தொடர்ச்சியாக குருதிக்கொடை முகாம் எமது கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது அந்த வகையில் கடந்த குருதிக் கொடை முகாம் *13.11.2016* திகதியன்று கலைமகள் படிப்பகத்தில் சுமார் *50* குருதிக் கொடையாளர்களுடன் சிறப்பாக இடம்பெற்றது. அடுத் இரத்ததான முகாம் எதிர் வரும் கார்த்திகை மாதம் முதல் வாரத்தில் நடாத்துவதற்கு திட்மிட்டுள்ளோம். இதுவரை *8* இரத்ததான முகாம்களில் *400*ற்கு மேற்பட்ட குருதிக் கொடையாளர்கள் கலந்து தமது குருதிகளை வழங்கியுள்ளனர். இதில் எமது கிராம கிராமத்தவர்கள்,

காவல்துறையினர், இராணுவத்தினர், அயற்கிராமத்தவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## அரும்பு கல்விச்செயற்திட்டம்

எமது சங்கத்தின் கல்விக்கான செயற்திட்டமாக அரும்பு செயற்திட்டம் சங்க உறுப்பினர் செல்வன் துரந்திரன் தலமையில் சிறப்பாக இயங்கி வருகின்றது. இதன் கீழ் பல்வேறு பிரிவிகளைக் கொண்ட செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்

## புலமைப்பரிசில் மாணவர்களுக்கானது

எமது இளவாலைக் கிராமத்தில் உள்ள 8 பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு யாழின் பிரபல ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களுடன் 4 தொடர் பரீட்சைகளும் மற்றும் பிரபல ஆசிரியர்களை வளவாளர்களாக கொண்டு இரண்டு கருத்தரங்குகளும் கடந்த ஆண்டுகளைப் போல் மிகச் சிறப்பாக இந்த ஆண்டும் நடாத்தப்பட்டது, இதில் சுமார் 200 மாணவர்கள் வரை கலந்து கொண்டார்கள். அண்மையில் வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகளின் படி கருத்தரங்கில் கலந்து கொண்ட 13 மாணவர்கள் சித்தியடைவார்கள். அவர்களுக்கான கௌரவிப்பானது இன்றைய விழாவில் இடம்பெற உள்ளது. இச் செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கான நிதியை எமது கிராமத்தைச் சேர்ந்த சிங்கப்பூரில் உள்ள பொறியியளாளர் வழங்கி வருகின்றார்.

## கா.பொ.தா சாதாரன தர மாணவர்களுக்கானது

கடந்த 2016ம் ஆண்டு கா.பொ.தா சாதாரணதரப் பரிட்சையில் தோற்றிய இளவாலை, மற்றும் அயற்கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களை உள்ளடக்கி கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்களுக்கான கருத்தரங்கு 2016ம் ஆண்டு கார்த்திகை மாதம் நடாத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டு 5A பெறுபேறுகளுக்கு மேற்பட்ட பெறுபேற்றினை பெற்ற எமது கிராம பாடசாலை மாணவர்களுக்கான கௌரவிப்பும் சென்ற தீபாவளி அன்று நடந்தது. இந்த செயற்திட்டத்திற்கான நிதியினை எமது கிராமத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவர் வழங்கியுள்ளார்.

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

ஆண்டு தோறும் மார்கழி, கார்த்திகை மாதங்கள் அதிகளவான மழைக்காலமாக காணப்படுவதனால் டெங்கு, மலேரியா பரவுவதற்கான அபாயம் அதிகரித்து காணப்படுகின்றது. எனவே இதனையடுத்து எமது சங்கத்தினரால் ஆண்டுதோறும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் கடந்த மார்கழி மாதம் 03.12.2016 திகதியன்று கிராமத்தில் இருக்கும் வீடுகள் தோறும் உள்ள டெங்கு நுளம்பு பெருக ஏதுவான மழை நீர் தேங்கும் கழிவுப் பொருட்களை சேகரித்து பொதியிடுமாறு நகரும் ஒலிபெருக்கி வாயிலாக அனைவருக்கும் அறிவித்தல் வழங்கிபின்னர் எமது சங்க உறுப்பினர்கள் வலிவடக்கு பிரதேச சபையின் குப்பை ஏற்றும் வாகனங்களினூடாக வீடுகள் தோறும் சென்று அப் பொதிகளை சேகரித்து உரிய முறையில் அப்புறப்படுத்தி டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

## தைப்பொங்கல் விழா

எமது சங்கத்தினால் ஆண்டு தோறும் தமிழர் திருநாளாம் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை வெகுவிமர்சையாக கொண்டாடி வருகின்றோம். அந்த வகையில் இந்த ஆண்டும் பொங்கல் தினத்தன்று அதாவது 14.01.2017 அன்று காலை 9.00 மணி தொடக்கம் காங்கேசன்துறை வெளிச்சவீட்டருகே மாபெரும் பட்டம் ஏற்றல் போட்டியும் பின்னர் மதியம் 2.30மணியில் இருந்து சறுக்குரம் ஏறுதல், தலையணைச்சண்டை கயிறிழுத்தல் தயிர்முட்டி உடைத்தல் எனும் பாரம்பரிய விளையாட்டுக்களுடன் கலைகலாசார நிகழ்வுகளும் நடாத்தி பொங்கல் தினத்தில் இப்பிரதேச வாழ் மக்கள் அனைவருமே திரண்டு ஒன்றுகூடி மகிழும் திருநாளாய் நடாத்தியிருந்தோம்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் கௌரவ அங்கயன் இராமனாதன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இதற்கான நிதியினை அனுசரனைகள் மூலமாகவும் கிராமத்தவரின் நிதிப்பங்களிப்பிலும் பெற்றிருந்தோம்.

## சித்திரைத் திருவிழா நிகழ்வு

இந்த ஆண்டு முற்றிலும் மாறுபட்ட ஒரு "சித்திரைத் திருவிழா" நிகழ்வினை கிளிநொச்சி "மகாதேவா ஆச்சிரமத்தில்" வெகு சிறப்பாக நடாத்தினோம். சுமார் 400 சிறார்களைக் கொண்ட இந்த ஆச்சிரமத்தில் காலையில் இருந்து அவர்களை மகிழ்வூட்டும் விளையாட்டுநிகழ்வுகள், போட்டி நிகழ்வுகளை நடாத்தி அவர்களுக்கு அன்றைய தினம் விசேட மதிய உணவினையும் வழங்கியிருந்தோம். மாலை 4.00 மணி தொடக்கம் ஆச்சிரமத்தில் விசேட கலை நிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வுகள் நடாத்தி "குக்கூ" இசைக்குழுவின் இசைக்கச்சேரியை நடாத்தி ஆச்சிரம சிறார்களை மகிழ்வித்தோம். இதன் போது எமது கிராமத்தவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளும்வகையில் விஷேட வாகனங்களையும் ஒழுங்குபடுத்தியிருந்தோம். இந் நிகழ்வு சங்க உறுப்பினர் திலக்ஷன் தலமையில் இடம்பெற்றது.

## நவராத்திரி கொண்டாட்டம்

கலைகளின் தேவியாக இருக்கும் கலைவாணிக்கு உரிய நாட்களாக இருக்கும் நவராத்திரி காலத்தில் எமது கலைமகள் படிப்பகத்தில் வீற்றிருக்கும் "கலைமகள் திருவுருவப்படத்தை" வீதியுலாவாக எடுத்து வந்து பூஜைகள் செய்து கிராமத்தவர்களும் தமது வீடுகளின் முன்னே பூரண நிறைகுடம் வைத்து கலைவாணியை வரவேற்க நவராத்திரி கொண்டாட்டத்தை பக்திபூர்வமாக நடாத்தி முடித்தோம்.

## கிறிஸ்மஸ் கரோல் கொண்டாட்டம்

புனிதர் யேசு பிறாந்தார் என கிறிஸ்தவர்கள் மகிழ்ந்து கொண்டாடும் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் எமது சங்க உறுப்பினர்கள் நத்தார் தாத்தாக்களாக வேடமிட்டு வீடுகள் தோறும் சென்று குழந்தைகளுக்கு பரிசில்களையும், இனிப்புகளையும் வழங்கி பாடல் பாடி ஆடி மகிழ்வித்தோம்.

## மெய்கண்டான் பாடசாலைக்கான சமயலறைக் கட்டடம்

எமது சங்கத்திடம் இளவாலை மெய்கண்டான் பாடசாலை அதிபர் அவர்கள் பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச உணவினை சமைப்பதற்கான சரியான சமயலறை இல்லை எனவே சமயலறைக் கட்டடம் ஒன்றினை பெற்றுக் கொடுக்கும் வண்ணம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க தேவையின் அவசியத்தை அறிந்து கிராமமக்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகளிடம் எமது சங்க உறுப்பினர்கள் நிதி சேகரித்தும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் ஒரு பகுதி நிதியினைப் பெற்றும் சுமார் 15 லட்சம் பெறுமதியான சமயலறைக்கட்டடத்தினை நிர்மாணம் செய்து 06.09.2017 அன்று பாடசாலை நிர்வாகத்தினரிடம் கையளித்தோம். இந்நிகழ்வில் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் திரு.சிவஸ்ரீ அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இச் செயற்திட்டம் சங்க உறுப்பினர் மதியழகன் தலமையில் இனிதே பூர்த்திசெய்யப்பட்டது

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி

எமது சங்கத்தினால் ஆண்டு தோறும் தமிழர் தம் வீர பாரம்பரிய விளையாட்டான மாட்டுவண்டிச் சவாரியினை நடாத்துவது வழமை. அந்த வகையில் இந்த ஆண்டும் கடந்த 24.09.2017 ஞாயிற்றுக்கிழமை தங்கப்பதக்கத்தினை பரிசாகக் கொண்ட மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி ஒன்றினை வட்டுக்கோட்டை சவாரி விடந்தையில் நடாத்தினோம். இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் என வெளி மாவட்டங்களில் இருந்தும் மொத்தமாக 54 மாட்டு வண்டில்ச் சோடிகள் கலந்து கொண்டு போட்டியிட்டது. இச்செயற்திட்டம் சங்க உறுப்பினர் திவாகரன் தலமையில் இடம்பெற்றது.

## மின்னொளியில் மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

எமது சங்கத்தினால் ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு விளையாட்டுத்துறைசார் செயற்திட்டத்தினை முன்னெடுப்பது வழமை. அந்த வகையில் இந்த ஆண்டு யாழ் மாவட்டத்தில் கரப்பந்தாட்டத்தில் தலைசிறந்த 8 அணிகளை தெரிவு செய்து அவர்களிடையே விலகல் முறையிலான போட்டியை

நடாத்தினோம். இச் செயற்திட்டத்தினை அமரர் சிவகுருநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தியிருந்தோம். இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த 24.09.2017 இரவு மின்னொளியில் இடம்பெற்றது. சங்க உறுப்பினர் பிரணவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கலந்து கொண்டார். 1ம் இடத்தைப் பெற்றுக்கொண்ட ஆவரங்கால் மத்தி அணிக்கு 15,000 ரூபா பணப்பரிசிலும் 2ம் இடத்தை பெற்றுக்கொண்ட ஆவரங்கால் இந்து அணிக்கு 10,000 ரூபா பணப்பரிசிலும் வழங்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு போட்டிகளிலும் சிறந்த ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## நேத்திரம் ஆண்டுச் சஞ்சிகை

எமது கிராமத்தின் எழுத்தாளர்களிற்கும் கலைஞர்களுக்கும் களம் அமைக்கும் வகையிலும் கிராமத்தின் பெருமைகளை எடுத்தியம்பும் வகையிலும் எமது சங்கத்தினால் "வாலையூர் வாலிபரின் நேத்திரம்" எனும் சஞ்சிகை ஆண்டு தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. அந்த வகையில்இந்த ஆண்டும் சங்க உறுப்பினர் குகலக்'ன் அவர்கள் நூலாசிரியராக செயற்பட சஞ்சிகையின் 3வது வீச்சினை கடந்த பொங்கல் விழாவன்று (14.01.2017) வெளியிட்டு வைத்தோம். அடுத்த சஞ்சிகைக்கு எமது கிராமத்தை சேர்ந்த எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் கலைப்படைப்புக்கள் வரவேற்கப்படுகிறது.

## விளையாட்டுத்துறை

எமது சங்கத்தின் விளையாட்டுத்துறை சங்க உறுப்பினர் நவராஜா தலைமையில் மிகச்சிறப்பாக இயங்கி வருகிறது. மயிலங்கூடல் பகுதியில் மைதானம் ஒன்றினை பெற்று மாலை நேரங்களில் துடுப்பாட்ட பயிற்சியில் ஈடுபட்டு வரும் இவர்கள் சமீபமாக நடைபெறும் பிரதேசமட்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டிகளில் முதலிடம் பெற்று வெற்றிக்கிண்ணம் சுவகரித்து வருகின்றனர். சமூக சேவை மட்டுமல்லாது விளையாட்டுத்துறையிலும் நாம் பிரகாசிக்கின்றோம் என்பதை பெருமையுடன் இந்த இடத்தில் கூறிக் கொள்கின்றோம்.

## ஊடகத்துறை

எமது சங்கத்தின் ஊடகத்துறை சங்க செயலாளர் சுகந்தன் தலைமையில் செயற்பட்டு வருகின்றது. எமது சங்கத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளமாக **www.ivvsangam.com** மற்றும் முகநூல்பக்கமாக **www.facebook.com/ivvsangam** என்பன செயற்பட்டுவருகின்றன. ஊடகம் எமது வெற்றிக்கு பிரதான முதுகெலும்பாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## நிதித்துறை

எமது சங்கத்தின் நிதித்துறை பொருளாளர் ரிசாந்தன் தலைமையில் செவ்வனே கையாளப்பட்டு வருகின்றது. எமது வங்கி நடவடிக்கையினை இலங்கை வங்கியில் மேற்கொள்கின்றோம். எமது செயற்திட்டங்களுக்கான நிதியினை அதிகளவாக புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் உறவுகள் வழங்குகின்றனர். விழாக்களுக்கான நிதிகள் பெரும்பாலும் நிறுவனங்களின் அனுசரனைகள் விளம்பரம் மூலமாகவே பெற்றுக்கொள்கின்றோம். போரால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான வெளிமாவட்ட உதவித்திட்டங்களில் எமது கிராமத்தைச் சாராத வெளி பிரதேசங்களைச் சேர்ந்த அன்பர்களும் எமது சேவையினை அறிந்து தாமாகவே எம்மைத் தொடர்பு கொண்டு நிதியுதவிகள் வழங்குகின்றனர்.

ஆயினும் போரினாலும், இயற்கையினாலும் பாதிக்கப்பட்ட ஏராளமானோர் இன்னமும் சரியான எந்த உதவிகளையும் பெறாது வாழ்ந்து வருகின்றனர். அவர்களையும் தமது அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொள்ள வைக்க ஒரு உயர்த்தும் கரம் தேவைப்படுகின்றது. அதனை தாங்களும் தங்களால் இயன்ற சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதோ அல்லது வெளிநாடு உறவுகளிடமிருந்தோ எமது சேவைகளுக்கான நிதியினை வழங்கியுதவும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு

மேற்குறிப்பிட்டவாறு எமது நிதித்துறைக்கு பணத்தை சேகரித்து எமது சேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக இந்த ஆண்டு எம்மால் அதிஷ்ட இலாபச் சட்டிழுப்பு ஒன்று நடாத்தப்பட்டது. இதில் அதிகளவாக பரிசில்களை நிறுவனங்களின் அனுசரனையின் மூலமாக பெற்றுக் கொண்டதுடன் இதன்மூலமாக சுமார் *1* இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதியினை இலாபமாக பெற்றுக் கொண்டோம். இச்சீட்டிழுப்பு கடந்த தைப்பொங்கல் தினத்தன்று *(14.01.2017)* இடம்பெற்றது.

### நிறைவாக நன்றிகள்

எமது சேவைகளுக்கு நிதியினை வழங்கிவரும் புலம்பெயர் உறவுகள் கிராமத்தவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் நிறுவனங்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது சங்கம் சிறப்பாக இயங்கிவர எம்மை ஆதரித்து ஊக்குவித்து நிற்கும் எமது கிராமத்தவர்கள், உறுப்பினர்களின் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்.


எமது செய்திகளை ஊடகங்களில் வெளிவரச் செய்கின்ற விஷேடமாக அச்சு ஊடகங்களில் வெளிவரச் செய்த உதயன் பத்திரிகை, தினக்குரல் பத்திரிகை, வலம்புரி பத்தரிகை ஊடக உறவுகளுக்கும் எமது நன்றிகள். இதன் மூலமே எம்மை பலரும் அறிந்து மேலும்மேலும் நிதி கொடைகளைவழங்குகிறார்கள்.

எமக்கு பல சந்தர்பங்களின் போதும் உதவி வருகின்ற எமது கிராமத்தைச்சேர்ந்த ஏனைய பொது அமைப்புக்கள், கழகங்கள், பாடசாலைச்சமூகங்கள், காவசல்துறையினர், பிரதேச செயலகத்தினர், பிரதேச சபையினர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

மேலும் இந்த ஆண்டில் சங்கம் இனிதே பயணிக்க உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை இந்த இடத்தில்கூறிக் கொள்கின்றேன்.

இனிவரும் காலங்களிலும் எமது பயணங்கள் மேலும் பலஉச்சங்களை தொட எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொண்டு 4ஆண்டுகளை இனிதே நிறைவு செய்த நாம் உங்கள் ஆசிகளுடன் 5ம் ஆண்டில் நம்பிக்கையுடன் கால்பதிக்கின்றோம்.

நா.சுகந்தன்
செயலாளர்
வருத்தப்படாத வாலிபர் சங்கம்
இளவாலை.



# கல்வியே அழியாச் செல்வம்..........



பொய்யாமொழிப் புலவரின் சிந்தையிலும்
பொழில் நிறை கவிஞர்களின் வரிகளிலும் - என்றும்
பொய்க்காத புதுமைகளை பூண்டு வாழும்
பொக்கிஷங்களின் பொக்கிஷமே கல்வி.....

செல்வத்துள் சிறந்த செல்வம் - என்றென்றும்
செழிப்புக்கள் மிகுந்த செல்வம்
செய்யுள்களால் செகுத்த முடியா செல்வம்
செங்கதிரவன் போலான செல்வம் கல்விச் செல்வம்.....

கனலினால் அழிக்க முடியாதது
கள்வனால் கன்னமிடவும் முடியாதது கல்வி......
கலையில் சிறந்தோர் கண்ணாய் போற்றுவதும்
கவின் மிக்க கனிப்பானதும் கல்வி.......

தேடலுள்ளவர்களின் தேடும் புதையலாகவும் - எங்கும்
தேறுதலானவர்களின் தாயினை போன்றும்
தேறல் ஒப்ப இனிமையாகவும் - இன்று
தேற்றமான தேகி போன்றதே கல்வி.....

காவியங்களையும் கலைப்படைப்புக்களையும்
கான குயிலின் இசை போன்ற கவிகளையும்
காதலுடன் பூண்டுள்ள மாதவளே
காலமெல்லாம் போற்றக் கூடியவளே கல்வி....

திராதலத்தின் திசையெங்கும் - கற்றோர்
திறமையுடன் மதிக்கப்படவும்
திரமுடன் வாழ்ந்திடவும் - அவர்களின்
தின்மையற்றதோர் வாழ்வின் அடி நாதனமானதே கல்வி......

எச் செல்வம் பெற்றினும் - கல்வி

எனும் செல்வம் இல்லையேல்

எப்பயனும் மானிடர்க்கில்லை

எக் காலத்திலும் புகழுமில்லை மாண்புமில்லை......

என்றும் அழியாத அழிக்க முடியாத செல்வம்

எங்கள் கல்வியெனும் அழியாச் செல்வம்.....

மானுகா.கிருஸ்ணவசீகரன்

தரம் : 09

யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி



# ஊக்கமது கைவிடேல்

மானிடராய் மண்ணில் மலர்ந்திட்ட நாளில்
மனங்கள் மகிழும் உறவுகள் பூரிக்கும்
மட்டில்லா ஆனந்தம் மகவொன்று பிறந்ததில்
மனிதனாய் பிறப்பது அரிதென்று காரணத்தால்

இணையற்ற இளமைக்காலம் பயமறியாது என்றும்
இணைந்திட்ட நட்பும் இகமதில் துணையாக
இயங்கிடும் பொழுதெல்லாம் எண்ணற்ற தடைகள்
இலட்சிய வாழ்வினில் ஏனே சோர்வுகள்

துள்ளித் திரிந்த பள்ளிப் பருவங்கள்
துணிவுடன் நடை போட்ட இனிய காலங்கள்
துவண்டு விடச் செய்திடும் ஏராளம் முட்டுக்கட்டைகள்
துரோகங்கள், ஏமாற்றங்கள் தோல்விகள் வீழ்ச்சிகள்.

எழுந்திட முடியாதபடி அடுக்கடுக்காய் தோன்றிடும்
எதிர்பார்ப்புக்கள் எல்லாம் காணாமல் போய்விடும்
எண்ணங்களில் சிதைவுகள் ஏற்றங்கள் இல்லாமல்
எண்ணிய கருமங்கள் போலியாக மாறிடும்.

உள்ளம் வாடிடும் உவகை ஓடிடும்
உறவெல்லாம் வேஷமாய் உருவமில்லாமல் மாறிடும்
உண்மையான முகங்களினை உயிராய் தேடிடும்
உற்சாகம் காணாமல் பிறந்தே போய்விடும்

ஆயிரம் இருந்தாலும் வாழ்வென்பது சிலகாலம்
ஆறாத மனங்களையும் ஆற்றிட வேண்டும்
ஆசைகள் ஆர்வமாய் ஊக்கமாய் வேண்டும்
ஆளாகிடத் துடிக்கும் ஆணவம் வேண்டும்

தடைகளை எதிர்கொண்டு தளராத நடைபோடு
தடுமாற்றம் களைத்திங்கு உளமாற்றம் கொண்டிரு
தலைநிமிர்ந்திட எழுப்பிடு ஊக்கமதைக் கொண்டிரு
தலையே போனாலும் ஊக்கமாய் இயங்கிடு
மனதில் வீறாப்புடன் நம்பிக்கையுடன் வாழ்ந்திட
மலையே வந்தாலும் ஊக்கமதைக் கைவிடாதே.....

ஜீன் ஜஸ்மின் ஜெறாட் ஜெயந்தன்
08
யா/இளவாளை கன்னியார் மடம் மகா வித்தியாலயம்



# வா நண்பா!

வானம் பாடிபோல்
வா நண்பா வா - வாஞ்சையுடன்
வாழ்க்கை எனும் வானவில்லை
வர்ணம் தீட்டி அலங்கரிக்க

கருவறை முதல் கல்லறை வரை
கானகம் போல் தொடர்ந்திடும் நட்பு
காலமெல்லாம் காத்திருப்பேன்
காதல் செய்ய நீயும் வாடா

மண்ணிலுள்ள உயிரினமெல்லாம்
மாண்டிடும் முன் உன்னைப்போல்
உறவாட சிறுவயதே உத்தமனை அறிந்து - அவன்
உள்மனதில் நிலவொளியாய் தெரிந்திடுவர்

நட்பென்னும் வலையில் சிக்கி
நன்றியுடன் வாழ்ந்து தன்
நண்பனுக்காக உயிர் கொடுத்த
நல்லவரும் உள்ளனர் உலகினில்

நாட்டிற்கு கிடைத்த பெயர் காக்க
தாங்க முடியாத தடைகளை தன்
தலையினில் தாங்கிடும் உறவுகள்
இன்னும் உள்ளனர் உலகினில் உன்னைப்போல்

பாரபட்சமில்லா நட்பது உலகை வென்ற உறவது
உறவு முறை இல்லா உறவது - நான்
உள்ளதனாய் நிகழ்ந்திட
உயிர் கொடுக்கும் உறவுது

எனக்காய் நீயும் உனக்காய் நானும்
வாழ்வதில் உள்ள இன்பம்
உலகத்தில் எதிலிருக்கு
உண்மையில் அவ் இனிய நட்பைப் போல
வாலை மண்ணில் வாலைகளும் சிறகாளும்
வருத்தமில்லா வாலிபரும் தந்தையரும்
நல்ல நட்பை தேடி
நட்பின் அவசியத்தை உணர்ந்திடுங்களே!

வந்திடும் என் தடைகளை
வா ஆசையுடன் தகர்க்க உன் உதவி வேண்டும்
வா நண்பா வா : மீண்டும் என் வாழ்வில் - உன்
வருகையால் பூப்போல் மலர்ந்தது என் வாழ்க்கை

யா/இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்
தரம் : 09
யாழினி செபநாதன்



# கல்விச் செல்வம்

நிலையில்லா உலகமதில் நிலையான ஒன்று
அதுவே கல்விச் செல்வம்
எதற்கும் ஈடு இணையில்லாச் செல்வம்
மானிடர் நம் மடமை இருள் அகற்றி - வையகமதில்
பெருமையுற செய்யும் செல்வம்

அழிவேதுமில்லாச் செல்வம் - மாந்தர் எம்மை ஆளம் செல்வம்
ஆறிலும் சேர்க்கலாம், அறுபதிலும் சேர்க்கலாம் - சேர்த்துவிட்டால்
காலத்தால் அழிவதுமில்லை, தீர்ந்துவிடுவதுமில்லை, என்றும் குறைவதுமில்லை
கேடில் விழுச்செல்வம் என்றார் வள்ளுவர்.....

கெடுதலில்லை, அழிதலில்லை - உலகத்தை
உயர்த்தும் செல்வம் கல்விச் செல்வம் ஆகையால்
தேவைக்க பல செல்வம் புவிதனில் தோன்றிடினும் - நாம்
பயன்பல பெற்று பெருவாழ்வு வாழ - வழிகாட்டும் செல்வம்
கல்விச் செல்வமன்றி வேறேதும் செல்வம் உண்டோ

கல்விச் செல்வமதை நாம் தேடியே சேர்த்திட்டால்
இயற்கையில் அழிவதுமில்லை
கயவரால் களவாட முடிவதுமில்லை
அழிவென்பதே இல்லாத செல்வம் - நம்மையெல்லாம்
அழகாய் மாற்றிடும் செல்வம்

செல்வங்களுக்குள் தலையாய செல்வம் கல்விச் செல்வம் - நம்மை
தலைநிமிர செய்யும் செல்வமும் கல்விச் செல்வமே
உலகத்தின் உயர்வுச் செயற்பாடுகளுக்கு உயர்வான
ஒரேயொரு செல்வம் என்றும் அழியாத
கல்விச் செல்வமே

கொடுக்கக் கொடுக்கக் கூடும் செல்வம்
தேடல் அதிகரித்தால் அதிகமாகும் செல்வம்
இதைச் சேர்த்து வைத்தால் என்றும் அழியாதது
அது ஒரேயொரு செல்வம் தான்
எதற்கும் ஈடு இணையற்ற கல்விச் செல்வம்

மாணவ சமுதாயமே விழித்தெழு
கல்வியை பெற முயற்சி செய்
தேடியே நாம் பயன் பெறுவோம்
வாழும் காலமதில் பெருமையாய் வாழ்வோம்.



கல்வியே என்றும் அழியாதது.
கல்வியே என்றும் தீர்ந்துவிடாதது.
பெறுவோம் கல்வியை மகிழ்வுடனே
வாழுவோம் வாழ்வில் செழிப்புடனே.

## அழகிய தருணம் நண்பா ......

எம் கல்லூரிப் பயணத்தின்
இறுதி நாட்களில்
உனக்காக எழுதிய
உனது பக்கங்களை
நான் வாசிக்கும் போது
அழகிய நினைவுகளை
எனக்கு பரிசளிக்கிறாய்........
இதழோரம் மலரும் புன்னகையும்
இமையோரக் கண்ணீர்த்துளியும்......
உன் பரிசின் அடையாளங்கள்
பக்கங்களை படித்து முடித்தும் ......
உன் இன்மையை உணர்கிறேன்......

க.ஜீவதர்சினி

# எமது அழகான கிராமம்



எனது கிராமம் மாரீசன் கூடல் ஆகும். இக்கிராமம் இலங்கைத்தீவின் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ளது. இங்கு இந்து மற்றும் கிறிஸ்தவ மக்கள் வசித்து வருகின்றனர். எனது கிராம மக்களின் வாழ்வாதார தொழில்களாக விவசாயம் மற்றும் கடற்தொழில் காணப்படுகிறது. இக்கிராமத்தில் அண்ணளவாக நூறு குடும்பங்கள் வரை வசித்து வருகின்றனர். இங்கு அருண்மிகு முருகமூர்த்தி ஆலயமும், புனித கயித்தார் தேவாலயமும் அமைந்துள்ளன. சனசமூக நிலையம் என பல நிறுவனங்கள் காணப்படுகின்றன. வயல் நிலங்கள், கடல் என பல இயற்கை எழில் கொஞ்சும் அம்சங்களும் எனது கிராமத்தில் உள்ளன. பனை மரங்களினது. காவோலைகள், சங்கீதமீட்டி எனது கிராமத்தை மென்மேலும் அழகாக்கின்றன. மேலும் எனது கிராமத்தில் கற்றறிந்த கல்விமான்களும் கலை ஆர்வம் கொண்ட கலைஞர்களும் வாழ்ந்து வருகின்றமை எமது கிராமத்தை மேலும் அழகு சார்ந்து அழகாக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எ.றோமி
தரம் - 04
யா/மாரீசன் றோ.க.த

# நான் விரும்பும் தொழில்




இன்றைய உலகில் பல்வேறு தொழில்கள் உள்ளன. அவற்றுள் மனிதனை மனிதன் ஆக்குவது, அறிவுள்ளவன் ஆக்குவது ஆசிரியத் தொழிலே ஆகும். அத்தொழிலே நான் விரும்பும் தொழிலாகும். ஒரு சிறந்த ஆசிரியன் தெய்வத்திற்குச் சமனாக மதிக்கப்படுகின்றான். ஆசிரியன் தான் சமூகத்தின் அத்திவாரம். மரத்தின் ஆணிவேர் போல் வாழ்வின் அடிப்படையாக அமைபவர் ஆசிரியர்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. குருவைத் தெய்வமாக மதிக்கும் பண்பு நமது சமூகத்திற்கு உண்டு. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற கூற்றும் இதனையே உணர்த்துகிறது. ஆசிரியத் தொழில் மன நிறைவைத் தரும் தொழிலாகும். கல்விச் செல்வத்தை மற்றவருக்கு இல்லை என்னாது அள்ளிக் கொடுக்க இத்தொழில் வழிசெய்கின்றது. ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், என்ற பேதம் எதுவுமின்றி அனைவருக்கும் உதவி செய்யக்கூடிய தொழில் ஆசிரியத் தொழில், இதன் காரணமாகவே இத்தொழிலை நான் பெரிதும் விரும்புகின்றேன்.

நமது அன்னை தரும் அன்னத்தை உண்ட போதிலும், மீண்டும் பசி எடுக்கிறது. அப்பா தரும் பொருட் செல்வமும் நாளடைவில் அழிந்து போகிறது. ஆனால் ஆசிரியர் தரும் அறிவுச் செல்வம் என்றுமே அழியாது நம்மைத் தொடர்கிறது. இத்தகைய புனிதமான தொழிலுக்கு நிகரான தொழில் வேறு எதுவுமே இல்லை எனலாம். படிப்பவர் எல்லோரும் முன்னேறி மருத்துவர் ஆகலாம் பொறியியல் வல்லுனராகவும் விஞ்ஞானி ஆகலாம்.

அமைச்சர் ஆகலாம். ஆனால் ஆசிரியர் ஏணி போல் இருந்து எல்லோரையும் ஏற்றிவிடும் ஏணியாகத் திகழ்கின்றார். மாணவர்களின் எதிர்கால வாழ்வு மலரக் காரணமாக இருக்கிறார். ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் உள்ளங்களிலும் நிலைத்து நிற்கிறார். பாடசாலையோடு அவர் கற்பிப்பது நின்றுவிடலாம். ஆனால் அவர் கற்பிப்பது மாணவரின் வாழ்வில் இறுதிவரை நிலைத்து நிற்கிறது. இதுவே இத்தொழிலின் சிறப்பு ஆகும்.

ஆசிரியப் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்த பணி. உயிருள்ள பிள்ளைகளுடன் ஊடாடுவது ஒவ்வொருவருக்கும் வாழ்வில் உயரும் சந்தர்ப்பங்களை ஆசிரியரால் மட்டுமே வழங்க முடியும். ஆசிரியர் உணர்வுகளில் ஊக்கியாக விளங்குகின்றார். மாணவர்களின் மனங்களில் அறிவுப் பொறிகளைப் புகுத்துபவர்களாக திகழ்கிறார். ஆசிரியர் தனது பொறுப்பை, தர்மத்தை மறந்தால் எதிர்காலம் தெருவில் அலையும் என்கிறார். புதுக்கவிதையாளர் ஒருவர் அவரது கவிதைகள் இதுதான்

- ★ வழக்கறிஞரின் தவறுகள்
- ★ தூக்கில் தொங்கும்
- ★ மருத்துவரின் தவறுகள்
- ★ மண்ணில் புதையும்
- ★ ஆசிரியரின் தவறுகள்
- ★ தெருவில் அலையும்

இதன் மூலம் ஆசிரியப் பணி எத்தகு பொறுப்பு வாய்ந்தது என்பது நன்கு புலனாகும். இத்தொழில் ஆன ஆசிரியத் தொழிலையே நான் விரும்பும் தொழில் ஆகும்.


அ.மேரிடிலக்சிகா

8B

# நாதியற்ற உறவு

உயிரின் தேடல் உறவு
உறவின் தேடல் பாசம்
பாசத்தின் முடிவில் வேசம்
இதுதான் வாழ்க்கை பயணம்

புரிந்தும் ஏற்க மறுப்பவர் சிலர்
தெரிந்தும் விலகாதிருப்பவர் பலர்
அறிந்தும் உணரமறுப்பவர் நாம்
இழந்தால் விலகும் உறவுக்காய்



இருந்தது குறைந்தால் பந்தம் நிற்காது
குறைந்தது இழந்தால் அயலும் மதிக்காது
இழந்தது பெற்றால் உலகம் மறக்காது
நடந்ததை மறந்தால் வாழ்வின் பொருளேது

தன்னலம் பேணும் உறவுகளே
உங்கள் நெஞ்சகம் உள்ள வஞ்சகத்தால்
உம் நலம் காக்கும் எம்மவரை
குப்பையில் எறிவது சரிதானோ

V.Thusi

# என்னுயிர் தோழா

உயிர் கொடுத்த
உன் கரங்களில்
இன்னும் ஓராயிரம்
ஜென்மங்கள் எடுத்தாலும்
போதாது என்னுயிர் தோழா

என் மனதிலும்
இதயத்தின்
உயிர்நாடியிலும்
உனதன்பின் முகம்
ஒன்றே மூச்சாய் போதும் தோழா

அன்று என் விழிக்குள் இருந்து
ஒளியாய் வழிகாட்டியதால்
பனி கூட உருகியது
உன் பேச்சால் தோழா
அழகான குடும்பத்தின்
ஆணி வேராய் இருந்தாய்
விதி வழியே அன்று
சாதி தொடர்ந்தால்
உனை இழந்து நிர்க்கதி ஆனேன்
தோழா

மறைந்தாலும் மங்காத
உனதன்பின்
பாசப்பிணைப்பால் இன்று
ஒவ்வொரு பூக்களுக்கும்
புன்னகைக்கின்றன தோழா

எம்மோடு நிழலாகத்தான்
என்றென்றும் தொடர்ந்து
வருவீர்கள் நம் வாழ்வில்
உயிர்காக்கும் ஒரு
கவசமாகத்தான் தோழா

யூ டொறினாமேரி
8A

**நீ ஒருவனை மாற்றி
விட்டதால் அவனை முட்டாள்
என்று நினைக்காதே,
நீ மாற்றியது அவன்
உன் மேல் வைத்த
நம்பிக்கையை...**

# வா நண்பா

வா நண்பா வா
வாசலிலே வசந்தம்
வரவேற்க காத்திருக்குவா
வா நண்பா வா வாழ்க்கை
வாழ்வதற்கே என்ற வாசகத்தை மெய்ப்பிப்போம் வா

வா நண்பா வா
எண்ணுவ தெல்லாம் உயர்வாய் எண்ணி
ஏற்றம் பெறலாம் வா
எதிர்காலம் உன்னைகயில்
ஏந்திக் கொள்ளவா

வா நண்பா வா
திறமைகளை எல்லாம் தீட்டிக் கொண்டு
திட்ட மிட்டுச் செயற்படலாம் வா
திருப்பங்கள் எல்லாம் உனக்கே
விருப்பம் கொண்டு வா

வா நண்பா வா
வாழ்வின் வகை தெரியாதவர்களை
வளமாக்கலாம் வா
வாலையூரின் வாலிபர் கை
பிடித்து வாழ்வை அர்த்தமுள்ள தாக்கலாம் வா

வா நண்பா வா
ஏங்கும் இதயங்களின் துயர்துடைத்து
இதமாக்கலாம் வா
வீங்கும் உள்ளங்களின்
தாங்கும் கரமாய் நின்று
எதற்கும் தயாராகலாம் வா

ஜெ.டிலான்ஷன்
தரம் - 09

# அன்னை

உதிரத்தை பாலாக்கி
உயிர்தனை தினம் தந்து
குழந்தைகள் வாழ்வுக்காக
தினம் தன்னைத் தியாகம் செய்பவள்

பகல் முழுவதும் அடிப்படியில் புழவாக
வெந்து
இரவு முழுவதும் விளக்கமாக
விழித்திருந்து
குழந்தையின் மகிழ்வில் மகிழ்ந்திருப்பாள்



பிரம்மாவின் அவதாரமாக உலகில்
உதித்தவள்.
அன்பின் வடிவமாக மண்ணில் வாழ்பவள்
தியாகத்தின் உச்சக்கட்டமாக மிளிர்பவள்
அதுதான் தாய் எனும் உறவு




உலகம் வெறுத்து ஒதுக்கினாலும்
உறவுகள் விட்டு விலகினாலும்
வறுமை வந்து வாட்டினாலும்
நமக்காய் உயிர்வாழும் தெய்வம் தாய்.

மனிஷா
தரம் : 05
யா/மணீசன் கூடம் RCTM

# கல்வி

வளமான விடியலின் இன்றைய அஸ்திவாரம் எம் கல்வி
வருங்காலத்தை ஒளிமயமாக்கும் பெறுமதிப் பொக்கிஷம்
தினம் செய்யவேண்டியது மறக்காமல் கற்க வேண்டும்
திண்டாடுகின்றது கற்காதவனின் வாழ்க்கை

உண்ண மறுப்பவன் உயிரை துறக்கிறான்
கற்க மறுப்பவன் வாழ்வை தொலைக்கிறான்
யாரைப் போலவும் பெரிதாய் கற்க வேண்டாம்
வாழ்வை கொண்டு செல்ல பிரயோசனமாய் கற்றுவிடு

ஆடம்பரத்திற்காய் கற்காதே அறிவிற்காய் கற்றுவிடு
ஆசைகளுடன் கற்காதே இலட்சியத்துடன் கற்றுவிடு
பணத்திற்காக கற்காதே நற் பண்பிற்காய் கற்றுவிடு
சினத்துடன் கற்காதே சிந்தனையுடன் கற்றுமுடி

கல்வியை நேசி பின்பு அது உன்னை நேசிக்கும்
கற்றவரை பாராட்டு உலகம் உன்னை சீராட்டும்
இளமையில் கல் இமையம் உன் கையில் வரும்
உண்மையாய் கல் உழைப்பு உன்கையில் வரும்

க.கபிலன்

# அன்னை

அன்னை என்பவள் தெய்வம் - நாம்
அவனியில் அவதரிக்க கருவியானவள்
மூலக்கருதனில் முன்னூறு நாள் சுமந்து
மூச்சு முதல் வழி பொருள் தந்தவள்



அன்னை என் உலகு - பக்குவமாய்
அரவணைத் தென்னை வளர்த்திட்டவள்
பசி நோக்காது பட்டினிகிடக்காது
பாலகலென்னை பக்குவமாய் பார்த்தவள்

நடைபயின்று உடையணிந்து - பள்ளிக்கு
நல்மாணவனாய் நான் செல்ல உதவுவாள்
கல்விகளைக் கற்று நல்ல பிரசையாக - அவள்
கண் அஞ்சாது எனக்கு அறிவூட்டுவாள்

அன்னை இல்லாது நான் இல்லை
அன்னை இல்லை உலகு இல்லை
அன்னை இல்லாது அன்பு கிடையாது
அன்னை மடிதேடி ஓடுவோம் - அவள்
பாதம் போற்றி புகழ்வோம்

பி.சிவப்பிரியா
தரம் : 04
யா/மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலை

# பெற்றோரிடம் பெற்ற கடன் தீர்ப்போம்

நாம் பிறக்கும் போது நிர்வாணமாய் அழுதழுது கொண்டு தான் பிறந்தோம். உடனே எங்கள் தாய் எங்களைப் பெற்ற பிரசவ வேதனையைக் கூட மறந்து சிரித்து மகிழ்ந்து தூக்கித்துடைத்துத் தன் அமுதத்தை எமக்கு ஊட்டி எங்கள் அழுகையைத் தீர்த்தாள். தந்தையோ எமக்கு வேண்டிய துணிமணி சட்டை எல்லாம் வாங்கித் தந்து, தாயிடமிருந்து எம்மை வாங்கித் தாலாட்டிச் சீராட்டி மகிழ்ந்தார்.

ஒன்றுமில்லாமல் நிர்வாணமாய் அழுதழுது பிறக்க எம்மைத் தங்கள் பெருஞ் செல்வமாகப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தார்கள். நாம் கிடந்தபடியே மலசலம் கழிக்க அதற்குச் சற்றும் அருவருக்காமல் உடனே தூக்கிக் கழுவித் துடைத்து புத்தாடை அணிவித்து பார்த்து மகிழ்ந்தார்கள்.

எங்கள் அழுகைக்குரல் கேட்டால் போதும் தங்கள் எல்லா வேலைகளையும் ஒதுக்கிவிட்டு ஓடிவந்து அழுகை மாற்றி மகிழ்ந்தார்கள். எமக்கு நோய் வந்தால் தாமே விழித்திருந்து பட்டினி கிடந்து பத்தியம் காத்துக் தமக்கு வந்த நோயினும் பெரிதாகக் கருதி நோய் தீர்க்க வேண்டியதெல்லாம் செய்தார்கள்.

குழந்தைப்பருவம் முதல் குமரப்பருவம் வரை எமக்கு உணவு தந்து, உடை தந்து, கல்வி தந்து, கலைகள் பயிற்றி எங்களைச் சாதனையாளர்களாக்கி கண்டு பேரானந்தப்பட்டார்கள். நமக்கு உத்தியோகம் தேடித்தந்து உழைக்கவழிகாட்டித் திருமணமும் செய்து வைத்து எங்கள் மங்கல வாழ்வில் தாங்கள் மகிழ்ந்தார்கள்.

இத்தனையும் எமக்குச் செய்ததோடு விட்டார்களா? எங்கள் வாழ்வுக்குத் தாங்கள் தேடிவைத்த சொத்துக்களை முதுசமாகவும், சீதனமாகவும் தந்து வாழ வைத்தார்களே. இது மட்டுமோ எங்கள் உடலும், அறிவும் குணநலன்களும் அவர்களது உயிர் அணுமூலம் அவர்கள் எங்களுக்குத் தந்தவையல்லவா. இதைத்தானே நவீன விஞ்ஞானத்தில் மரபணுத் தொடர்பு என்று சொல்லப்படுகிறது.

எங்களுக்கு எல்லாம் தந்து வாழவைத்த எங்கள் பெற்றார் முதுமை அடைந்து தளர்ந்து நோயுற்ற போது அவர்களிடம் நாம் பெற்ற உதவியை, கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டாமா? மனித வாழ்வு பிறந்து, கிடந்து, புரண்டு, தவழ்ந்து, நடந்து,

ஓடியோடி வாழ்ந்த இளமை வாழ்வு முதமையில் ஓட முடியாமல் தளர்ந்து மெல்ல நடந்து அதுவும் முடியாமல் தவழ்ந்து புரண்டு படுக்கையில் கிடந்து இறப்பில் முடிகிறது. தொடக்கமும் முடிவும் ஒரு சுற்றுவட்டத்தில் முடிவது தானே இயற்கை. இதற்கு யாரும் விதிவிலக்காக முடியாது.

வாழ்வின் தொடக்கத்திலும் உதவி தேவை முடிவிலும் உதவி தேவை. தொடக்கத்தில் பெற்றார் உதவி செய்தார்கள் அது போல் முடிவில் பிள்ளைகள் செய்வது தானே முறை. அது தானே கடமை. பிள்ளைப் பருவத்தில் பெற்றோரிடம் பெற்ற கடனை அவர்களின் முதமைக் காலத்தில் வாலிபமாயிருக்கும் பிள்ளைகள் திருப்பிச் செய்யாமல் பட்டகடனைத் தீர்க்காமல் விடலாமா?

இன்று எம்முடன் நிற்கும் பல பிரச்சினைகளில் மிகப் பெரிய பிரச்சினை பெற்றாரை - மூத்தோரைத் பராமரித்தல். பிள்ளைகளை வாழ வைத்த பெற்றோர் முதுமையில் தாம் வாழ வழியின்றி இருக்க இடம் இன்றிச், சீரான பராமரிப்பின்றி, முதியோர் இல்லங்களிலும் அகதி முகாம்களிலும் மற்றவர்களுக்குச் சுமை போல வருந்தி, வருந்தி இறக்கும் நாளை எதிர்பார்த்துக்கொண்டு கிடக்கிறார்களே!

பிள்ளைகளே தங்களைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோரைத் தமக்குச் சுமையெனக் கருதி விட்டு விலகுவதும் அவர்களை அநாதைகளாக்கிக் கைவிடுவதும் தகுமா? இதேநிலை தமக்கும் வரும் தம் பிள்ளைகளும் தாம் பெற்றோர்க்குச் செய்ததைப் பார்த்திருந்து தமக்கும் அதையே செய்வார்கள் என்பதை நினையாதிருக்கலாமா?

நாட்டில் வயோதிபர் இல்லங்களும் அநாதைகள் இல்லங்களும் இருப்பது எமக்கு எவ்வளவு அவமானம்.

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்றும் “தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை” என்றும் “தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை” “பெற்றோரைப் பேணுவோம்” என்றெல்லாம் படித்த நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுத்த நாங்கள் அதை மறந்து அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல் எனக் கருதி விலங்குகள் போல அவர்களை விரட்டி விடுவது எவ்வளவு அவமானம்.


எல்லார்க்கும் முதுமை வரும் என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் எங்கள்

எங்கள் பெற்றோரைப் பேணுவோம். பெற்றோரிடம் பெற்ற கடனைத் தீர்த்தலே முதற்கடமை என்பதையுணர்ந்து செயற்படுவோம்.

நாம் பெற்ற கடனைத் தீர்த்தால் தான் எம்மிடம் பெற்ற கடனையும் திருப்பிப் பெற முடியும் என்பது தானே உண்மை. நாம் பெற்றோர்க்குச் செய்ய வேண்டியது கடமை என்பதை மறந்தாலும் நாம் முதுமைக் காலத்தில் நமக்குத் தற்காப்பு வேண்டியாவது பெற்றோரைப் பேணுவோம். நம் பிள்ளைகளும் அதைப் பார்த்துத் தம் பெற்றார் ஆகிய எம்மைப் பேணுவார்கள்.

நம் கடமையை நாம் மறந்தால் நமக்கும் அதே கதி தான். ஆதலால் பெற்றோரிடம் பெற்ற கடனைத் தீர்த்தால் தான் எங்கள் முதற் கடமை என்பதை உணர்த்துவோம்.

கலாபூஷணம்.சைவப்புலவர்
சு.செல்லத்துரை
(ஓய்வு நிலை அதிபர்)



சிந்திக்கத் தெரிந்தவனுக்கு
ஆலோசனை தேவையில்லை,
துன்பங்களை சந்திக்கத்
தெரிந்தவனுக்கு வாழ்க்கையில்
தோல்வியே இல்லை...

# 'லுமாலா சைக்கிள்'

என்னதான் BMW காரில போனாலும் ஊரில மண் றோட்டில சைக்கிள்ள போற சுகம் கோடி குடுத்தாலும் வராது பாருங்கோ. முதன் முதலா எனக்கு நல்ல ஞாபகம் "சைக்கிள்" என்டா எங்கட அப்பு வைச்சிருந்த "கீறோ" சைக்கிள் தான் நினைவுக்கு வருது.

நான் அறிய எங்கட ஊரில *1995, 1996* களில் (அப்ப நான் பால்குடி, இருந்தாலும் நினைவு இருக்கு) எங்கட ஊரில விரல் விட்டு எண்ணுற ஆக்கள் தான் சைக்கிள் வைச்சிருந்தவை. அதில எங்கட அப்பாவும் ஒருத்தர். (பெருமை பேசுறன் எண்டு நினையாதிங்கோ)



அந்த மனிசன் அந்த சைக்கிளை விடியக்காலமை எழுந்தவுடனே ஒரு சிரட்டையில மண்ணெண்ணையும் தேங்காய் எண்ணையும் கலந்து அதை ஒரு சீலத்துணியால கம்பிகள் எல்லாம் துடை துடை எண்டு துடைக்கும். அம்மம்மா தான் இந்த துளவாரங்களையெல்லாம் செய்து குடுக்கும். போதாக்குறைக்கு எங்களைக் கூப்பிட்டு துடைக்க விடும். எங்களுக்கும் வலு சந்தோசம். காரணம் அந்த கொஞ்ச நேரம் எண்டாலும் சைக்கிளை தொடலாம். ஸ்ராண்டில நிப்பாட்டி இருக்கும் சில்லை சாட மாடையா சுத்திப்பார்ப்போம்.

அப்பு தன்னை தவிர ஆரையும் சைக்கிளை தொட விடாது. தொட்டா மரண கலகம் நடக்கும். அந்த கோதாரிக்காக ஒருத்தரும் தொடுறது இல்லை. ஆனால் ஆரேனும் சுகமில்லை எண்டா மட்டும் சைக்கிளைத் தரும். ஏனென்டா அப்ப பஸ் வசதியோ மினிபஸ் வசதியோ இல்லை. ஊரில தம்பித்துரை இளையய்யாவின் வானும், தம்பு அப்புவின்ர வானும் மட்டும் தான் லைன் ஓடினது. அதுவும் சுன்னாகம் சந்தைக்கும் தின்னவேலி சந்தைக்கும் எண்டு ஒரு ஞாபகம். (அது பெரிய கதை... அதை பிறகு சொல்லுறன்) தெல்லிப்பழை ஆசுப்பத்திரி எங்கட ஊரில இருந்து 20 மைல் இருக்கும். அப்ப ஆரேனுக்கும் பிள்ளை பிறக்கபோறதெண்டாலோ, இல்லை

சரியான சுகமில்லை எண்டாலோ அப்புவிட்ட ஆக்கள் வந்து உதவி கேப்பினம். அதுக்கொண்டா நேர காலம் பாக்காம ஆசுப்பத்திரிக்கு கொண்டே விட்டிட்டு வரும்.

சைக்கிள் எண்டா ஒரு பெரிய கரியல் இருக்கும். அது அவையவையின்ர தேவையளைப் பொறுத்து சின்னதா இல்லை பெரிய கரியலோ இருக்கும். மீன் சந்தை போற ஆக்களின்ர கரியல் பெரிய கரியல். ஏனென்டா பெரிய மீன் பெட்டி கட்டவேணுமல்லோ. அதிலையும் பாருங்கோ கரியலில சமாந்தரமா பெரிய தடி இரண்டை கட்டி வைச்சிருப்பினம். அதில நாங்கள் சுன்னாகம் போறதெண்டா சாரத்தையோ இல்லை சின்ன தலகணியையோ குண்டிக்கு வச்சுக்கொண்டு இருக்க வேணும். இல்லையென்டா தூரபயணங்களுக்கு குண்டி வெட்டிப்போடும். சைக்கிள்ள முன்னுக்கும் இருந்து போகலாம். எனக்கு பின்னுக்கு இருந்து போக வெக்கம். மாதிரி ஏனெண்டா என்னோட படிக்கிற பிள்ளையள் ஆரம் பாத்தா பிறகு பழிப்பார்கள்

சைக்கிள்ள முன்னுக்கு இருந்து போக அப்பா விடமாட்டுது. ஏனெண்டா நான் முன்னுக்கு இருந்து கான்டில இறுக்கிப் பிடிச்சுப் போடுவன். பிறகு திருப்பைக்குள்ள ஆட்டிவிட்டிடுவன். கன நாள் அடியும் வாங்கி இருக்கிறன். நான் மட்டும் இல்லை அம்மாவும் வாங்கியிருக்கிறார்.

பொதுவாக எங்கட ஊரில பிள்ளையை முன்னுக்கும் மனிசியை பின்னுக்கும் தான் சைக்கிள்ள ஏத்திக்கொண்டு போவினம். மாறி ஏத்தினா சனம் ஒரு மாதிரிப்பாக்கும். கலியாணம் கட்டின புதிசில முன்னுக்கு மனிசியை ஏத்திக்கொண்டு போவினம். அதை சனம் பாத்து கொடுப்புக்குள்ள சிரிக்கும்.

கடைசி காலத்தில் தன் சைக்கிளை அப்பு எங்கட பெரியண்ணாட்டத்தான் குடுத்தவர். அவன் உந்த ஊரெல்லாம் ஓடி ஊத்தையா கொண்டு வருவான். அப்பு கத்தி கத்தி பாத்து பிறகு ஒண்டும் சொல்லுறது இல்லை. இடைக்கிடை அப்பு தானே துடைக்கும்.

அண்ணா அங்கின இங்கின போறதெண்டா என்னையும் ஏத்திக்கொண்டு போவான். முன்னுக்கு கவட்டை விரிச்சும் இருக்கலாம். சைற்றாவும் இருக்கலாம். பொதுவாக சின்னவயசில ஆம்பிள்ளைப் பிள்ளையளும் பொம்பிளைப் பிள்ளையளும் கவட்டை விரிச்சு தான் இருந்து போவினம். கொஞ்சம் வளர சைற்றாத்தான் இருந்து போவினம். முன் பாறுக்கு வயர் சுத்துறவை கதிர பின்னுற

வயரால சுத்தலாம். பொதுவா கறுப்பு, நீல வயர் தான் சுத்துவினம். பிறகு கொஞ்ச நாளால அதுக்கெண்டு குஞ்சம்விட்ட கவர் வந்திட்டுது.

பின் கரியலில தனிய ஒரு ஆளை ஏத்திக்கொண்டு ஓடுறது கொஞ்சம் கஸ்ரம். ஏனென்டால் சைக்கிள் உலாஞ்சும். அதிலையும் ஆரேனும் பெண்டுகளை ஏத்தினா துலைஞ்சுது கதை ஒண்டு காலை சில்லுக்குள்ள குடுக்குங்கள் இல்லையெண்டா சீலைத் தொங்கலை சில்லுக்குள்ள குடுக்குங்கள். இப்பிடி நடந்து கன புரசன் பொஞ்சாதி மார் நடுறோட்டில நிண்டு கடிபட்டு சண்டை பிடிக்கிறதை கனதரம் கண்டிருக்கிறேன்.

சாமத்தியப்பட்ட புதிசிலேயே இல்லை சாமத்தியப்படபோற வயசு வந்தாலே பொம்பிளைப்பிள்ளைகளை முன்னுக்கு இருத்தாமல் பின் கரியலில தான் ஏத்திக் கொண்டு போவினம். இது எங்களப் போல பொடியளுக்கு வலு வசதி. ஏனெண்டா தேப்பனுக்கு தெரியாமல் பின்னால இருக்கிற பிள்ளையோட பகிடிவிட எங்களுக்கு லேசு. கனபேருக்கு உந்த லவ்சு ஆரம்பிச்சதே உப்பிடித்தான்.

சைக்கிள் பெல் ஆரம்ப காலத்தில ஒரு பெரிய ரவுண்டா இருந்திச்சு. விரலால இழுத்து அடிக்கிறதே கஸ்ரம். சின்னப் பொடியள் அடிக்கேலாது. வலு கஸ்ரம். இருந்தாலும். அதை கஸ்ரப்பட்டு அடிச்சு அப்புவிட்ட கன நாள் சாத்து (அடி) வாங்கியிருக்கிறோாம். ஏனெண்டா அடிச்சா "கிறீங் கிறீங்" எண்டு பெரிய சத்தம் வரும். முந்தி ஐஸ்பழக்காரர் பாட்டு போட்டு வாறயில்லை. உந்த காண்டாமணி பெல்லை அடிச்சுக்கொண்டு தான் வருவாங்கள். கடிதகாரனும் அந்த பெல்லைத் தான் வீட்டு வாசல்ல வந்து அடிப்பான். பெல் சத்தம் கேட்டா முந்திப்பயம். ஏனெண்டா கடிதகாரன் எந்த இழவு செய்தியை கொண்டுவாறான் எண்டு பயப்படுவினம்.

பெல் அடிக்கிறதிலையும் ஒரு ரெக்னிக் இருக்கு. சில பேர் தாங்கள் சுத்துற பிள்ளையின்ர வீட்டடியால கடக்கையில ஒரு வித்தியாசமா பெல் அடிப்பினம். அது அந்தப் பிள்ளைக்கு மட்டும் விளங்கும். இவர் அடிச்சுப்போட்டு ஒரு சுத்து சுத்திவர இவா நைசா வேலியால எட்டிப்பாப்பா. இல்லையெண்டா சும்மா சாத்திக்கிடக்கிற படலையை திரும்பவும் சாத்துற சாக்கில அவரைப்பாத்து ஒரு சிரிப்பு சிரிப்பா கொஞ்ச நாளால ஒண்டு தாய் கண்டு பிடிச்சுடுவா இல்லையா தேப்பன் கண்டு பிடிச்சிடும். அதுக்கு பிறகு உந்த பெல் அடிக்கிற வேலை சரிவராது.

சில ஆக்கள் செயினுக்கு கிறீஸ் போடாட்டி 1 மைலுக்கு அங்கால வரவே "கிறீச்சு கிறீச்சு" எண்டு சத்தம் போடும். செயின் தொஞ்சாலும் அது மக்காட்டில் முட்டி சத்தம் வரும். வாழ்க்கையில மிகப்பெரிய கஸ்ரம் செயின் கழண்டா வரும் அதை கைபடாமல் (ஏனெண்டா கிறீஸ் கையில ஒட்டினா கை கறுப்பா ஊத்தையாயிடும்) ஒரு தடியால ரெக்னிக்கா எடுத்து சரியா போடவேணும். முதல்ல பின்னுக்கு முழசாப் போட்டிட்டு பிறகு முன்னுக்கு கொஞ்சம் போட்டு பின் சில்லை சுத்தவேணும். ஆனா பாருங்கோ பொம்பிளப்பிள்ளையள் சரியா கஸ்ரப்படுவினம். இதைச்சாக்கா வைச்சு செயின் போட்டுக்குடுத்து லவ்வை டெவலப் பண்ணின ஆக்கள் கனபேர். அந்த நேரம் தடிகிடி ஒண்டும் பாவிக்கமாட்டோம். வெறும் கையால தான் விளையாட்டு காட்டுவம். ஏனெண்டா அப்பதானே அவா ஜோசிப்பா பாருங்கோ இந்த பொடியன் எனக்காக கையில கறீஸ் பிரழ பிரழ உதவி செய்யுது எண்டு.

மழையில சைக்கிள் நனைஞ்சா கட்டாயம் கிறீசோ இல்லை மண்ணெண்ணையோ செயினுக்கு விடவேணும். இல்லையென்டா கண்டிப்பா சத்தம் வரும். எனக்கு ஆண்டு 6 இல தான் சைக்கிள் அப்பா வாங்கித்தந்தவர் அதுவரையும் பள்ளிக்கூடத்துக்கு நடை தான். சைக்கிள் வாங்கி தந்ததும் முதல்ல செய்த வேலை கோயிலுக்கு கொண்டு போய் அதுக்கு திருநீறு பூசி சந்தணப்பொட்டு வச்சு கண்ணன் ஐயாட்ட ஒரு திருநூல் வாங்கி காண்டில்ல கட்டிவிட்டது தான் அதுக்கு பிறகு

புதுசீற், கவர், சில்லுக்கு புது பூ இரண்டு, புது பெல் ..... மாயாவி ஸ்ரிக்கர் (அது மக்காட்டில ஒட்டுது) எண்டு கன சாமான் வாங்கின நினைவு. அதில வேற இரவு நாலஞ்சுதரம் எழும்பி எழும்பி மூத்திரம் பெய்யுற மாதிரிப் போய் தொட்டு தொட்டு பாத்திட்டு வந்தன். அடுத்த நாள் பள்ளிக்கூடத்துக்கு நேரத்தோடையே போனன். காரணம் பெடியளிட்ட காட்டவும், தேமா மர நிழல்ல முன்னுக்கே இடம் பிடிக்கவும் தான்.

அட .... சைக்கிள் பழகின கதையை சொல்ல மறந்திட்டன். முதன் முதலா பவா அக்கா சைக்கிள் ஓடையுக்க அவளுக்கு சைக்கிளை பிடிச்சு விட்டு விட்டுத்தான் ஆரம்பிச்சன். சைக்கிள் இடையுக்குள்ளால ஒரு காலை ஒட்டி ஒரு கையை சீற்றில வச்சு மற்ற கையால காண்டிலப்பிடிச்சு கெந்தி கெந்தித்தான் ஓட பழகினன். அதுவும் அப்பா சைக்கிள் தரமாட்டார். அவர் எங்கயாவது போய் வந்து ஸ்ராண்டில் விடுற நேரம் அப்பிடியே சத்தம் போடாம நைசா உருட்டிக்கொண்டு ஓடிடுவன்.

முதல்ல எங்கட ஊர் பிள்ளையார் கோவிலில தான் ஒளடுறது. சும்மா தார் றோட்டு மாதிரி புல் இருக்கும். தற்சமயம் விழுந்தாலும் காயம் வராது. அப்பிடியே கவட்டுக்கால ஓடி ஓடி ஒரு நாள் காலைத் தூக்கி பாறுக்கு மேலால போட்டு ஓடினா அது பெரிய வெற்றி. சீற்றில இருக்கேலாது. ஏனெண்டா உயரம் காணாதல்லோ. இப்பிடியே கனதூரம் எங்கட ஊரில இருந்து பன்னாலைக்கு ஓடி எனக்கு சவட்டில் வெட்டி காயமும் வந்திருக்குது. எனக்கு மட்டுமில்ல கனபேருக்கு உந்த நிலமை தான்.

ஆனா என்ன தான் சொன்னாலும் சைக்கிள்ள போறத போல ஒரு சுகம் என்னதான் ஆயிரக்கணக்கில காசு குடுத்து மோட்டார் சைக்கிள் வாங்கி ஓடினாலும் வராது. வெளிநாட்டில் இருந்து ஊருக்குப்போறவை சோட்டைக்கு ஒருக்கா எண்டாலும் சைக்கிள் ஓடிப்பாக்காம வரமாட்டினம். சாறத்தை கட்டிக்கொண்டு மனிசியை முன்னுக்கு ஏத்திக்கொண்டு சைக்கிள்ள போனா ஒரு சுகம் தான். அது சொல்லிப் புரியாது. அனுபவிச்சாத்தான் தெரியும்.

ரியூசனுக்கு சைக்கிள்ள போகையுக்க செய்யுற கூத்துக்கள் பொடியளோட இரண்டு மூண்டு பேர் எண்டு கை பிடிச்சுக் கொண்டு பரவலா பொற அநியாயங்கள் வாத்தியின்ர சைக்கிள் ரயருக்கு வட்டவரியால குத்தின குசும்பு, பெட்டையளின்ர சீற்றில மை தெளிச்சு விடுற வம்பு, சைக்கிள் துறப்பை துலைச்சுப் போட்டு கல்லால குத்தி உடைச்ச கெட்டித்தனங்கள், ஏதொ தேய தேய என்ர நண்பனின் காதலுக்காய் இளவாலையில் இருந்து அளவெட்டிக்கு ஒவ்வொரு நாளும் ரியூசன் முடிய ஓடிய நினைவுகள் அவளின் சைக்கிள் கூடைக்குள்ள கடிதம் போட அதை அவளின்ர தாய் பாத்து கிழிய கிழிய வாங்கி கேவலங்கள் ... இப்பிடி கனக்க கனக்க சைக்கிள் கதைகள் இருக்கு.

உங்களிண்ட சைக்கிள் கதையளையும் நினைச்சுப் பாருங்கோ .........

உவன் உள்ளூர்
சுருளன்

# பெண்னென்று பிறந்து விட்டால்

இரும்புக் கட்டிலில் தலைவைத்துப் படுத்திருப்பது போன்று உணர்வு மனதை திசை திருப்பாமல் படுத்து இருந்தேன். பழைய நினைவுகள் கனவாக வந்தது. கட கட வென ஒரு சத்தம் கேட்டது. என்னடா ரெயில் வீட்டுக்குள்ளேயே வந்து விட்டது என நினைத்து திடீரென்று கண் விழித்தேன். அது ரெயிலின் சத்தமல்ல அப்பாவின் சைக்கிள் சத்தம் நேரத்தைப் பார்த்தேன். ஆறு மணி விடியற்காலையல்ல மாலை "சுவேதா ரியூசனுக்கு நேரமாச்சு" என்று அம்மாவோட சத்தமும் அப்பாவோட சத்தமும் காதுக்குள் சேவல் கூவியது போல இருந்தது. ரியூசனுக்கு வெளிக்கிட்டு அப்பாவோட சென்றேன். அங்கு படித்துக் கொண்டிருக்கும் போது மாஸ்டருக்கு போன் வந்தது. போனில் அம்மாவோட குரல் கேட்டது போல இருந்தது. மாஸ்டர் என்னை கவலையோடு பார்த்தார். எனக்கு என்னவென்று புரியவில்லை. எனது சின்னம்மா உடனே வந்து என்னை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். வீட்டுக்குச் சென்ற போது தான் அப்பத்தா இறந்த விடயம் தெரிய வந்தது. எனது அம்மா என்னை அணைத்து "அப்பத்தா எங்களை விட்டுப் போட்டா" எனக் கதறினார். சொந்தங்கள் வந்தன. அப்பத்தாவின் இறுதிக் கிரியைகள் சிறப்பாக நிறைவேறின. "தேனீக் கூட்டில் மூன்று தேனிகளைத் தவிர ஏனைய தேனிகள் கலைந்து போனது போல சொந்தக்காரர்கள் எல்லோரும் சென்று விட்டனர். சில நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் எனக்கு சரியான வயிற்றுவலி உயிரே போய் வருவது போல இருந்தது. அம்மா! என்று கதறினேன். அம்மா ஓடி வந்தார். "அம்மா வயிறு வலிக்குது வலிக்குது" என்றேன். அம்மா என்னைப் பார்த்தார் அவரது முகத்தில் புன்னகை தெரிந்தது. அப்பா வீட்டிற்கு வந்தார் சுவேதா ஏன் அழுகிறாய் என்று தலையைத் தடவினார். அப்போது அம்மா அப்பாவின் காதுக்குள் கிசுகிசுத்தார். சுவேதா பெரிய பொண்ணு ஆயிற்றாள் என்று லேசாக என் காதில் கேட்டது. என்ன அம்மா! என்றேன். நீ பெரிய பொண்ணு ஆகிவிட்டாய் என்றார் என்னை விட அப்பா அதிகமாக சந்தோஷப்பட்டார். "சூரியனைக் காணாது தவிர்த்த சூரியகாந்தி சூரியன் வந்தவுடன் மலர்வது போன்று அப்பாவின் முகம் மகிழ்ச்சியில் தாண்வமாடியது. அப்பா அப்பத்தா இறந்த துக்கத்தை மறந்தார். பொங்கல் சமைப்பாதற்காக வயலுக்குச் சென்று சிவப்பரிசி எடுத்து வாரன் என்று சொல்லி விட்டு சென்றார். அரிசியும் வரவில்லை அப்பா லொறி மோதி இறந்து விட்டதாக தகவல் வந்தது.

அப்பாவோட இறுதிக் கிரியை நிறைவடைந்தது. நானும் அம்மாவும் தனிமைப்பட்டோம்.

ஒரு நாள் வாசலில் நானும் அம்மாவும் கதைத்துக் கொண்டு நின்றோம். எமது காதுக்கு எட்டக் கூடிய வகையில் பொன்னம்மாவும் குஞ்சம்மாவும் "சுவேதா இராசி இல்லாதவள் பெரியவளானதன்றே தனது தகப்பனை பறி கொடுத்தவள்" என்று கதைத்தனர். அதைக் கேட்டு நானும் எனது அம்மாவும் துடித்துப் போனோம். பணம் பொருட்கள் ஒன்றும் இல்லாமலும் உதவிக்கு யாரும் இல்லாமலும் கஷ்ரப்பட்டோம். வீடு மாத்திரம் தான் இருந்தது. காசு உள்ள போது தான் சொந்தங்கள் இருப்பார்கள் என்பதற்கிணங்க காசுமில்லாமல் சொந்தங்களும் இல்லாமல் தவிர்த்தோம். அம்மா தோட்ட வேலைக்குப் போக ஆரம்பித்தார். காலை ஆறு மணிக்கு போனா மாலை ஆறு மணிக்குத்தான் வீட்டை வருவார். நான் தனிமையில் இருந்தேன்.

ஒரு நாள் சரியான வயிற்று வலி ஒவ்வொரு மாதமும் வரும் வயிற்று வலியை விட கொடூரமாக இருந்தது. உயிரே போவது போல இருந்தது. தண்ணீர்த் தாகம் எடுத்தது யாரும் இல்லை. கரண்டு பில் கொண்டு அண்ணா ஒருவர் வீட்டிற்கு வந்தார். அவரிடம் தண்ணீர் கிணற்றில் அள்ளித் தரும் படி கேட்டேன். தண்ணீரைக் குடித்து சத்தி எடுத்தேன். அந்த அண்ணா என்னுடைய தலையைத் தடவி உன்னைப் பார்க்கும் போது என்னுடைய தங்கச்சி மாதிரி இருக்குது என்று சொல்லி விட்டுப் போனார். அப்போது குஞ்சம்மா வீட்டிற்கு வந்தார். என்னை மேலும் கீழுமாகப் பார்த்து விட்டு ஒன்றும் பேசாது சென்றார். எனது அம்மா வீட்டிற்கு வந்தவுடன் குஞ்சம்மா "நானும் அந்த அண்ணாவும் தவறாக நடந்ததாகக் கூறினார்" நான் இல்லை என்றேன். அம்மா அப்பா இல்லாத குணத்தை காட்டுறியா? என்று எனது கன்னத்தில் அறைந்தார். அன்று முதல் அம்மா வேலைக்குப் போவதில்லை. வீட்டுத்தோட்டம் செய்து வருமானம் ஈட்டினார். என்னையும் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தி விட்டார். குஞ்சம்மா கதையை ஊர் முழுவதும் பத்திரிகைச் செய்தி மாதிரி பரப்பி விட்டார். எல்லோரும் என்னை ஏளனமாக பார்த்தனர்.

நாட்கள் பல கடந்தன. எனக்கு 27 வயது ஆயிற்று. ஆனால் திருமணம் ஆகவில்லை. ஒருவர் வெளியூரிலிருந்து என்னைப் பொண்ணு கேட்டார். என்னை அம்மா அவருக்குத் திருமணம் செய்து வைத்தார். அவர் என் வயிற்றில் பிள்ளையை தந்து விட்டு வெளியூரிலே வேறு திருமணம் செய்து விட்டார். இதனை அறிந்து எனது அம்மா நெஞ்சுவலியால் இறந்து விட்டார். பத்து மாதங்கள் கடந்தன. ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தேன். அப்போது இருந்த வலி என்னால் இப்பவும்

மறக்க முடியவில்லை. அப்போது தான் எனது அம்மாவின் அருமையையும் பெண் என்று பிறந்தாள் எவ்வளவு வலி என்பதையும் உணர்ந்தேன். நான் இப்படியே ஊருக்குச் சென்றால் மக்கள் கதையால் தின்று விடுவார்கள். மற்றும் குழந்தைக்கும் கெட்ட பெயர் என்று நினைத்து என் குழந்தையாவது நன்றாக வாழட்டும் என்று சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் சேர்த்து விட்டேன். இப்போது வாழ வழியின்றி தண்டவாளம் ஆகிய இரும்புக் கட்டிலில் மனதைத் திசை திருப்பாமல் படுத்திருக்கிறேன். கடகடவென சத்தம் கேட்டது. அது அப்பாவின் சைக்கிள் சத்தமல்ல அது ரெயிலின் சத்தம் நான் எனது வாயிற்குள் பெண்ணாகப் பிறக்காதே. பெண்ணாகப் பிறக்காதே என முணுமுணுத்தபடி படுத்துக்கொண்டேன்.

யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி
உயர்தரம் (2018)
மயில்வாகனம் கேனுஜா
சிறுகதையாக்கம்



# புராணங்கள் உணர்த்தும் வாழ்வியல் தத்துவங்கள்

புராண புகழ் பூத்த இலக்கியங்கள் என்ற மரபில் வேத இலக்கியத்திற்கு அடுத்ததாக புராணங்கள் அமைகின்றன. இவை பழமை வாய்ந்த மிகவும் ஆழமான நுண்ணிய பொருள்களைக் கொண்டவை. இந்துசமய மரபில் தெய்வீக கோட்பாடு, சமயக் கோட்பாடு உருவ கடவுள் வழிபாடு பக்தி கோட்பாட்டினை மிக தெளிவாக விளக்குகின்றது. புராணம் என்பது பழமையான தொன்று தொட்டு நிலவும் பொருளாக காணப்படுகின்றது. பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபு, நியதி, ஐதிக பரம்பரை, பழக்கவழக்கங்கள், வம்சப் பரம்பரை, ஒழுக்கம், பெருமை, மேம்பாடு, தந்துள்ளன. இந்துக்களின் தலைமுறை தத்துவம் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தின் இனத்தினரிடையேயான நீண்டகாலமாக பயிலப்பட்டு பரம்பரை பரம்பரையாக பேணப்பட்டு வந்த பழக்கவழக்கங்கள் ஒழுக்க முறைகள் என எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழமை ஆகும்.

புராணங்கள் பஞ்சாலட்சணத்தினையும் வரைவிலக்கணங்களையும் கூறும் அதே சமயம் படைப்பு, அறிவு, தனி மனித வாழ்வு, அவர்களின் பாதுகாப்பு, படைப்பின் நோக்கம் என்பன உள்ளடங்கியுள்ளது. உலகமானது தன்ம, அர்த்த, காம, மோட்சமாகியவற்றால் பாதுகாக்க வேண்டும் என மதச்சய புராணம் கூறும். புராணங்கள் கி.பி 3ம்4ம் நூற்றாண்டை சேர்ந்தவை ஆகும்.

இன்றைய இளைஞர் உலகம் அணு விஞ்ஞானம்-கணிணிப் பொறியறிவு என வளர்ந்து கொண்டிருப்பதனால் புராணங்களின் பொருள் ஆதத்தினையும் அறிவியல் உண்மை கூற வேண்டியது அவசியம் புராணங்கள் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை தரும் சிந்தனைகள் விஞ்ஞான அடிப்படை என்பவற்றை விளக்குகின்றது. புராணங்களில் கூறப்படும் மிகைப்படுத்தல் தன்மைகளான கதைகள் இன்றைய இளைஞர்களிடையே பல வினாக்களை ஏற்படுத்துகின்றன. அசுரர்களின் மிகையான செயல்கள், தேவர்களின் மிகையான செயல்கள் என சற்று நோக்கும் போது அதிக பாதகமான கற்பனை எவ்வாறாயினும் அவர்களின் வீரத்தின் எடுத்துக்காட்டாகவே அவை அமைகின்றன. அத்தோடு புராணங்களை சமூகத்தின் ஏற்றத் தாழ்வு அற்ற சமூகத்தையே எடுத்துக் காட்டுகின்றது.

சமயம் என்பது வெறும் சடங்குகளில் ஆசாரங்களில் தத்துவப் பேச்சுகளில்

தொழுதல், விழுதல், ஆடல், பாடல்களில் மட்டும் அடங்குவதல்ல. பரம்பொருளை தெளிவாக உணர்தல் அதன் பின் உறைதல் அப்பொருளுடன் இணைதல் இதுவே சமயம் காட்டும் உண்மை என்பது சுவாமி விபுலானந்தர் சிந்தனை ஆகும். எல்லா சமயங்களிலும் சடங்குகள், புராணப்பகுதி, மெய்பொருளுண்மை என்ற மூன்றும் உள்ளது.

விஞ்ஞானம் ஒன்றை ஆராயும் போது ஏன்? எப்படி? என ஆராய்ந்து செயற்படும் அதாவது மனித சுகவாழ்வும், நோயற்ற தன்மை, இயற்கை சூழல் பாதுகாப்பு உடலுக்கு ஆறுதல் தருவதும் உறைப்பினை குறைத்து சுகத்தினை அதிகரிக்கச் செய்வது விஞ்ஞானத்தின் குறிக்கோளாகும். விஞ்ஞானிகள் ஐம்புலன் மற்றும் கருவிகளைக் கொண்டு உலகை ஆராய்கின்றனர். மெய்ஞானிகள் ஐம்புலன்களை அகக் கருவிகளினால் ஆராய்கின்றனர். அதற்கு துணையாக தியானம், பக்தி, உள்ளுணர்வு போன்றவை பயன்படுகின்றன. ஆயினும் இருவரின் நோக்கமும் ஒன்றே ஆகும்.

விஞ்ஞான அணு, எண், அணு எடை மூலக்கூறு என முதலியன அவைகள் அடிப்படையாக அமைகின்றன. புராணங்களில் படைத்தல், காத்தல், அழித்தல் அமைகின்றன. விஞ்ஞானத்தில் எண்ட, கன, அளவும், அடர்த்தி முதலியன பயன்படுமாறு. போல் புராணங்களில் சத்வைத, ராகணம், தாமசம் முதலிய குணங்கள் பயன்படுத்தப்பட்டன. புராணங்கள் முத்தொழில், முக்குணங்கள் அடிப்படையில் பிரபஞ்சம் பற்றி ஆராய்கின்றது. விஞ்ஞானிகள் பிரபஞ்ச தோற்றம் பற்றியும் பூமியின் வயதைக் கணித்துக் காட்ட கடல் நீரில் உப்புத் தன்மையின் வீதம் ஒவ்வொரு ஆண்டும் அதிகரிப்பவை வகுத்துப் பார்த்தது கூறுகின்றவை. அவ்வாறே மக்கள் பள்ளத்தாக்கில் உள்ள கற்பாறைகளை ஆராய்ந்து யுரேனியம், காரீயம், கனிமங்களைக் கொண்டு பூமியின் வயதை கணக்கிட்டனர். பிரபஞ்சத்தில் உள்ள பொருட்கள், உயிரினங்கள் என்பவை அணுக்களும் அண்ட கோளங்களும் பஞ்சபூதங்களும் அடிப்படை பொருளை 105 தணிமங்களினால் ஆனவை என விஞ்ஞானம் கூற புராணங்கள் பஞ்சபூதங்களின் சேர்வைகளில் ஒன்று உருவாகும் எனவும் அவை பிரியும் போது உருவாகிறது அறியும் எனக் கூறுகின்றது. இவ்வாறு புராணத்திற்கு விஞ்ஞானத்திற்கும் இடையே ஏற்கக் கூடிய கொள்கை தரும் நியதிகளும் உண்டு என்பதை ஒப்பிட்டு அறிய முடியும்.

இவ்வாறான ஞானப் பொருளை உணர்த்தும் புராணம் பகுத்தறிவு உள்ளவர்களால் எண்ணி நகையாடல், முரண்பாட்டுக் கருத்து என்பனவும்

விளங்குகின்றது. புராணங்களில் இயற்கையும் உண்டு. இறைமையும் உண்டு. அறம், அன்பும் உண்டு. இதனால் உண்மையை உணராத சிற்றறிவு உடையோர் இதிலே கூறப்பட்ட கதைகளை நாடகம், கூத்து என கலைகளாக்கி காட்ட முயன்றனர். எனவே புராண விஞ்ஞான சிந்தனைகளை பொருள் பொதிந்தவாறு இன்றைய தலைமுறைக்கு விளக்கும் அவசியம் புரிகின்றது. புராணங்களில் மறைந்து கிடக்கும் அறிவியலால் உண்மைகளை சொற்செறிவுகள் மூலம் எடுத்துக்காட்டுவது அவசியம் ஆகின்றது. அதனால் புராண செவ்வியல் கருத்துக்கள் வெறும் மூடக் கொள்கைகள் மட்டும் விஞ்ஞான முன்னேற்றத்திற்கு இந்து மத இதிகாச புராணங்கள் முரண் அல்ல அவற்றில் வளர்ச்சிக்கு உறுதுணைாக உள்ளது என்பதையும் இதில் கூறப்படும் விடங்கள் என் வாழ்வின் வளர்ச்சிக்கு உண்மையானது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சு.கிஷோகுமார்

**"அமெரிக்காவை கண்டு பிடிச்சது யார்?"**

**"அதை தொலைச்சது யாருன்னு முதல்ல சொல்லு. அப்புறம் கண்டு பிடிச்சது யாருன்னு சொல்றேன்."**

# இனிமேல் கல்விதான் எம் இலக்கு......

சஞ்சலம் இல்லாது சதுரங்கமாய் ஆட்டம் போட
சாதனைகள் புரிந்திட ஜனனம் முதல் மரணம்
வரை கர்வம் இல்லாக் கல்வியே வேண்டும்
புத்தியற்றவனுக்கும் புதிதாய் பூமியில் பிறப்பவனுக்கும் புத்திமதி
சொல்பவனுக்கும் புதுமுகமாய் வரும் மாணவருக்கும்
புத்துணர்ச்சி பெற தேவை உயர்வான கல்வி

புதுமைகள் காணலாம் புகழ்ச்சி நீயும் கொள்ளலாம்
நேரத்தினை வீணடிக்காமலும் ஏணியின்றி விண்ணில் தாவவும்
சுரங்கமின்றி புதையல் எடுக்கவும் சஞ்சலமின்றி கையணைக்கவும்
கத்தியின்றி இரத்தமின்றி நிதானமாக வாழ்வு வாழ
கல்வி அருவியில் மூழ்கித் திளைத்திடு ஆழ்கடல்
முத்தாம் அழியாத சொத்தாம் கல்வியே உயர்வு

கல்வி அருவியில் குளித்தால் வாழ்க்கை வணக்கத்துக்குரியது
கல்விக்காக இறந்தால் மரணம் கூட மரியாதைக்குரியது
கல்வி இன்றி வாழ்ந்தால் வாழ்வே இழிவுக்குரியது
கல்வியின் போக்கில் உனக்கு ஒரு பங்குண்டு
உணர்ந்திடு யாவருக்கும் உரிமை உண்டு கற்பதற்கு
கல்வியின் காற்றை தடங்கலின்றி யாவரும் சுவாசிக்கலாம்

கல்வி அதிலே தேனீயின் சுறுசுறுப்பையும்
ஞானியின் நிதானத்தையும் கடைப்பிடித்து ஒழுகி விடு
ஜாதி மத பேதமின்றி மொழி நாடு பேதமின்றி
சகலரும் கற்றிடலாம் வாழ்வில் நீ உயர்ந்திடலாம்
கர்வம் கொண்டு உயர்ந்தது எதுவும் இல்லை
கல்வி கற்று தாழ்ந்தது உலகில் இல்லை

கல்வி கற்பது தான் இலக்கு
இனிமேல் கல்வி தான் நம் இலக்கு
அன்னம் இன்றி அழுது நீ நின்றாலும்
தண்ணீர் இன்றி நீ தவித்து நின்றாலும் - அன்றும்
இன்றும் இப்பொழுதும் எப்பொழுதும் எதற்கும்
நம் காலில் நாம் நிற்க கல்வியே உயர்வு.

சதாசிவம் துளசிகா
தரம் 09 யா/இளவாலை மெய்கண்டான் ம.வி

**காந்தி சொர்க்கத்தில் கடவுளிடம் போய், "நான் பூமியில் விட்டு வந்த 3 குரங்குகளுமம என்னவாயின?", எனக் கேட்டார்...**

**கடவுள் சொன்னார்,**

**"கண்ணை பொத்தியபடி இருந்த குரங்கு நீதிபதியாகி விட்டது!!!**

**காதை பொத்தியபடி இருந்த குரங்கு அரசாங்கமாகி விட்டது!!!**

**வாயை பொத்தியபடி இருந்த குரங்கு மக்களாகி விட்டது"**

# தேசிய வீராங்கனை ஹெறினாவுடன் ஓர் நேர்காணல்



கேள்வி : உங்களை பற்றி குறிப்பிடுக?

நான் ஹெறினா சந்திரகுமார் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்கின்றேன். தரம் 11இல் நான் கல்வி கற்கின்றேன். நான் உயரம் பாய்தலிலும் கோலூன்றிப் பாய்தலிலும் பல பதங்களை பெற்று வருகின்றேன்.

கேள்வி : விளையாட்டுதுறை மீதான ஈடுபாடு எவ்வாறு ஏற்பட்டது. அது தொடர்பாக குறிப்பிடுக?

நான் ஆரம்பக் கல்வியில் இருந்தே விளையாட்டில் ஈடுபட்டு வருகின்றேன். ஆயினும் சரியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான் மகாஜனா கல்லூரிக்கு தரம் 8 இல் கல்வி கற்க வந்தபோது அங்கு முறைப்படி பயிற்சிகளை பெற்றதன் ஊடாக பல போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிகளை பெற்றதன் மூலமாக எனக்கு விளையாட்டுத் துறையின் மீதான ஆர்வம் அதிகரித்தது.

கேள்வி : நீங்கள் பங்குபற்றிய போட்டி தொடர்பாக குறிப்பிடுக?

உங்கள் பயிற்சி தொடர்பாக குறிப்பிடுக?

நான் நான்கு வருடங்களாக பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றேன். நான் காலை 6.30 தொடக்கம் 8 மணி வரை மற்றும் மாலையில் 4.00 மணி தொடக்கம் 6 மணி வரை எனக்கு கோலூன்றிப் பாய்தல் பயிற்சியினை சி.சுபாஸ்கரன் ஆசிரியரும், உயரம் பாய்தல் பயிற்சியினை கமலமோகன் ஆசிரியரிடமும் பெற்று வருகின்றேன்.

கேள்வி : விளையாட்டுச் செயற்பாட்டில் ஈடுபடும் போது உமக்கு பக்கபலமாக இருந்தவர்கள்?

எனது பயிற்றுவிப்பாளர்கள் சி.சுபாஸ்கரன், கமலமோகன் ஆசிரியர், மயில்வாகனம் ஆசிரியர், ஜெயந்தி ஆசிரியர், மற்றும் எனது பாடசாலை அதிபர், ஆசிரியர் மற்றும் பாடசாலை பழைய

மாணவர்கள் எனது பெற்றோர், சகோதரர்கள் என்போரும் என்னுடன் பயிற்சி பெறும் அக்கா, அண்ணா, தம்பி, தங்கைச்சி போன்றோரும் மற்றும் அனித்தா அக்கா போன்றோரும் எனது விளையாட்டு போட்டிகளில் எனக்கு பக்கபலமாக இருந்துள்ளார்கள்.

கேள்வி : போட்டிகளில் ஈடுபடும் போது ஏற்படும் செலவுகள் எவ்வாறு ஈடுசெய்யப்படுகின்றது.

எனது குடும்பம் மற்றும் பாடசாலை சமூகம் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் என்போரினால் ஈடுசெய்ய முடிந்தது.

கேள்வி : போட்டிகளில் பங்கேற்ற போது மறக்க முடியா சம்பவம்?

பதி கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றிய போது போட்டி சாதனையை முடியடித்தமை எனக்கு மறக்க முடியாத ஓர் நினைவாக காணப்படுகின்றது. இதற்கு காரணம் அனித்தாக்கா தனது சிறுவயதிலே வைத்த போட்டி சாதனையை நான் முறியடித்தமையே.

கேள்வி : விளையாட்டுத்துறையில் நீங்கள் ஈடுபடுவதால் உங்கள் கல்வி பாதிக்கப்படுகின்றதா?

பசி இல்லை பயிற்சி நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களிலே நான் எனது கல்வியில் ஈடுபட்டு வருகின்றேன். இதனால் எனது கல்வியில் எந்த வித பாதிப்பும் ஏற்பட்டதாக எனக்கு தெரியவில்லை.

கேள்வி : இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் விளையாட்டுத் துறையில் எப்படியாக சேவைகளை முன்னெடுக்க வேண்டும்?

பதில் : எமது கிராமத்து வீரர்களுக்கு போட்டிகளில் பங்கு பற்றும் சந்தர்ப்பம் வழங்கல் அவர்களுக்கு பாதுகாப்பாக பயிற்சிகளினை வழங்கவேண்டும். மற்றும் விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ளவர்களை ஊக்குவியுங்கள்.

கேள்வி : உங்கள் இத்தகைய வெற்றிக்கு உழைத்த யாருக்கு நன்றி கூற ஆசைப்படுகின்றீர்.

பதில் : பயிற்சி வழங்கிய ஆசிரியர்கள் குறிப்பாக எமது பயிற்சிகளை



சுபாஸ்கரன் ஆசிரியர் மற்றும் கமலமோகன் ஆசிரியர், மயில்வாகனம் ஆசிரியர், ஜெயந்திஆசிரியர், அனித்தா அக்கா மற்றும் எமது பாடசாலையின் பழையமாணவர்கள், என்னுடன் பயிற்சியில் ஈடுபட்டவர்கள் எனது குடும்பத்தவர் என பலருக்கு நன்றி கூற வேண்டும்.

கேள்வி : எதிர்கால இலக்கு தொடர்பாக குறிப்பிடுக?

பதில் : தேசிய மட்டங்களில் பல பதங்களை பெற்றும் எனது பாடசாலைக்கு எனது ஊருக்கு புகழீட்டி கொடுப்பதே எனது இலக்கு.

## ஹெறினாவின் சாதனைகள்

All island School national
High jump 2nd Silver medal 1.4pm

John Tarbrt
High jump 3rd Bronze medal 1.45m
Pole vault 2nd silver medal 2.45m
All island School national
High jump 3rd Bronze medal 1.50m
pole vault 1st Gold medal 2.70m

Junior national
High jump 3rd broze medal 1.54m
Pole vault 1st gold medal 3.01m (meet record)

All island school national
High jump 1st gold medal 1.58m
pole vault 1st gold medal 3.10m

senior national
pole vault 3re broze medal 3.0m

43rd national festival meet
pole vault 5th 2.85m
high jump 4 th 1.55m

# Health Life

Healthiness should be considered as a been of god, for now days due to competitive busy life, we neglect our health, which causes many as the proverb goes "health is wealth", we must pay more attention and importance to healthiness. Being healthy not only means free from diseases and weakness but also the well of being of mentally , physically , socially and intellectually.

A good mentally healthy person will possess the qualities like kindness, patience, sympathy, being happy and active. He will not easily agitated and will face challenges boldly and confidently.

Physical health can be achieved through, good eating habits, eating balanced food, enough exercise and taking medical advice when needed. We should eat our meals at a particular time. for example breakfast between 7.30 a.m and 8.00 am lunch between 12.30 pm and 1.00 pm and dinner again between 7.30 pm and 8.00 p.m . It is a must that our meals should consist all the nutrients at the correct proportion suggested . Foods contain fiber and protein line should green be leaves and fruits concerned regularly. Another important Factor that affeels our physical is Sound sleep and yest. We shuold have certain hours of sleep according to our age group unfortunately, Children. have no time to rest and play with friends because of the tutions. Not I like our ancestors, we the present generation do not do hard works like gardening and walking electrical instruments have eased the work of house wife. They do not pound or grind annually as in the olden days. Thus , we face many health hazards now a days.

Socially healthy means , having the qualities to lead a harmonious . Co – operative life in our society. understanding people and the problems

encountered , ability to handle and solve conflicts , Another important factor that affects our physical health is sound sleep and rest. We should have certain hours of sleep according to our age group unfortunately , children have no time to rest and play with friends because of the tuitions avoid disputes with others , are some of the good qualities that maintain social health – we also should avoid drugs and narcotics , that destroy not only ourselves but also our society.

To be a perfectly healthy person, one should be an intellectually well being . Faith in god , meditation , accept the challenges of life, and patient help us to be intellectually healthy.

Unfortunately, the life style of the younger generation has caused many health hazards to them there fore, instead of sitting in front of television , computers all the day our meddling with mobile phones let the youngsters , spend their leisure time in useful activities like playing , listening to gassed music and reading books ; engage in developing good manners , and behaviors ; having proper eating habits ; and improve their intellectual habits so that to lead a perfect healthy life and enjoy their life.



# பாடசாலையின் முன்னிலை முகாமையாளர்

இலங்கை நாட்டில் அரச பாடசாலைகள் பல கட்டதைப்புக்களைக் கொண்டன. மத்திய கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு என்பன அவற்றை நிர்வகித்து வருகின்றன. சுப்பர்தர தேசிய பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகளை மத்திய கல்வி அமைச்சும், மாகாண பாடசாலைகளை மாகாண சபைகளும் மேற்பார்வை செய்வதுடன் கல்வி அதிகாரிகளையும் நியமித்து நிர்வகித்து வருகின்றன.

1AB பாடசாலைகள்

1C பாடசாலைகள்

தரம் II பாடசாலைகள்

தரம் III பாடசாலைகள்

என வகைப்படுத்தப்பட்ட பாடசாலைகளே எமது நாட்டில் காணப்படுகின்றன.

பாடசாலைகள் எனும் அரச நிறுவனத்தினுள் அங்கத்தவர்களாக, மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் கல்விசாரா ஊழியர்கள் எனப்படுவோர் காணப்பட்டபோதிலும் பாடசாலை சமூகம் என்னும் பதத்தினுள் பெற்றோர், மற்றும் பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அயற்சூழலிலுள்ளோர் அனைவருமே உள்ளடக்கப்படுவர். பாடசாலை எனும் அலகிற்கெல்லாம் இணைப்பாளராக முகாமையாளராக திகழ்பவர் அதிபரே ஆவார். முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பிலுள்ள அதிபர் பாடசாலை அபிவிருத்தி நோக்கி செல்ல வேண்டும் அவ்வாறு அபிவிருத்திப்பாதையில் கொண்டு செல்லும் போது பாடவிதானம், நிர்வாகம் எனும் இருபெரும் பிரிவுகளையும் நன்கு திட்டமிட்டே நகர்த்திச் செல்லவேண்டிய கடமைப்பாடு கொண்டவரே அதிபராவார்.

பாடசாலையின் முன்னிலை முகாமையாளராகிய அதிபர், சமூகத்தில் நன்மதிப்பு பெற அதிகம் உழைக்க வேண்டியிருக்கும்.

கண்ணியமாக நடந்து கொள்வதுடன் இலக்கு நோக்கிய பயணம் மிகவும் முக்கியமானதொன்றாகும். பாடசாலைக்குள் வெளியாரின் தலையீட்டினை எவ்வகையிலும் அனுமதிக்காது பிரச்சினைகளுக்கு சமூகமான தீர்வுகளைப் பெற

திறந்த உரையாடல்களையும் பரஸ்பர நல்லுறவையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி சகல பாடசாலை சமூகத்தினரின் ஒப்புதலுடன் பாரபட்சமின்றி நிடுநிலையாக தீர்மானங்களை எடுத்து நிறைவேற்றுவது முன்னிலை முகாமையாளரான அதிபரின் பிரதான கடமைகளில் ஒன்றாகும்.

எவ்வகையான பாடசாலையாக காணப்படுகின்ற போதிலும் அங்கு மாணவர்களுக்கு கல்வியூட்டப்படுவது நிச்சயமே ஏனெனில் அதிபரே, ஆசிரியர்களோ, மனித உள்ளங்களோடு பணிபுரிபவர்கள், அங்கே புலமை, திறன், மனப்பாங்கு என்பவற்றை வழங்கத் தயார் நிலையில் ஆசிரியர்கள் இருக்க வேண்டும். அதனை அதிபர் கண்காணித்து வழிப்படுத்துவது அதிபரின் செயலூகத்தில் இருக்க வேண்டிய முக்கிய கடமைப்பாடாகும்.

முன்னிலை முகாமையாளராகவும், கல்வித்தலைவராகவும் நிகழும் அதிபர் தனித்து ஒன்றுமே அழித்துவிட முடியாது. அங்கே கல்வித்திணைக்களத்தினர், ஆசிரியர்கள், பெற்றோர், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் என்போரின் கூட்டுச் செயற்பாட்டிலேயே கல்வி மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் சாதனை நிகழ்த்த முடியும்.

அதிபரானவர் அலுவலகத்திற்குள் மட்டும் இருந்து கொண்டு நிர்வாகம் புரிவதில் வெற்றியடையமாட்டார். ஏனெனில் சட்ட திட்டங்களுக்கும்; சுற்று நிருபங்களுக்கும் அமைய தொழில் புரிபவர்கள் நிர்வாகிககள், ஆனால் முகாமையாளர்கள் சட்டதிட்டங்களுக்கும் சுற்று நிருபங்களுக்கும் அப்பாற் சென் றுஅபிவிருத்தியை குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவார்கள். நிர்வாகி, முகாமையாளர் எனும் இரு பதங்களும் செயற்பாடு வடிவம் பெறுபேறு வேறுபடுகிறது.

முதன் நிலை முகாமையாளரின் கடமைகளில்

01. திட்டமிடுதல்
02. ஒழுங்குபடுத்தல்
03. இயைவுபடுத்தல்
04. உட்சாகப்படுத்தல்
05. நெறிப்படுத்தல்
06. கட்டுப்படுத்தல்

என்பன பிரதான பங்கு வகிக்கின்றன. பாடசாலையின் முன்னிலை முகாமையாளர் என்ற வகையில் ஒவ்வொரு பாடசாலைப் பாரம்பரியங்களையும் கருத்திற்கொண்டு அதிபர் நோக்கங்களை அடைய அர்ப்பணிப்பு, விருப்பு, ஆர்வம்

என்பனவற்றினை இயல்பாக கொண்டிருக்கும் பட்சத்தில் தன்னை நிலை நிறுத்தமுடியும்.

அதிபரானவர்

- ★ மாணவர்கள் முறையாக கல்வி கற்பதற்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தல்
- ★ வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் முயற்சிகள் சிறப்பாக இடம்பெற ஆவன செய்தல்
- ★ மாணவர்கள் மத்தியில் நல்ல பழக்கங்களையும், அவர்களது பாரம்பரிய விழுமியங்களையும்
- ★ தனிப்பட்ட மாணவர் மத்தியில் கற்கும் விசேட திறமைகள் வளர உதவுவதுடன் அவற்றை மிளரச் செய்தல்
- ★ மாணவர்களிடையே தலைமைத்துவம் பண்புகளை வளரச் செய்து பிற்காலத்தில் தலைவர்களாக மிளரச்செய்தல்.
- ★ மாணவர்களுக்கு நற்பண்புகளுடன் கூடிய பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- ★ தேசப்பற்று, சமூகப்பற்று, தன்னடக்கம், ஒற்றுமையுணர்வு போன்ற சிறப்பியல்புகளை மாணவர்களிடையே வளர்த்தல்.
- ★ மாணவர் மத்தியில் மனவளர்ச்சி, உடல் வளர்ச்சி ஆகியவற்றிற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

போன்ற நோக்கங்களை நிறைவேற்றும் போது அதிபரானவர் சிறந்த முன்மாதிரிகையான முகாமையாளராக திகழமுடியும். குழந்தைகளின் வளர்ச்சியில் முக்கியமான பருவம் பாடசாலையிலே கழிகிறது பாடசாலையில் உள்ள அதிபர், ஆசிரியரை நம்பியே பெற்றோர் தம் குழந்தைகளை ஒப்படைக்கின்றனர். அவர்களை சிறந்த முறையில் செதுக்கி சமூகத்திற்கு பயனளிக்கக்கூடிய சிற்பங்களாக சமூகத்திற்கு வழங்கவேண்டிய கடமைப்பாடு எம் எல்லோருக்குமே உண்டு என்பதை ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. எம்மில் பலர் பயனற்றவர்களாக இருந்து விடுகின்றனர். அவற்றை தவிர்த்து எல்லோரும் ஒளிமயமான எதிர்காலத்திற்க கரம் கோர்ப்போம். எமது தனிப்பட்ட அபிலாசைகளுக்கு முழுக்கப்போட்டு பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களுக்கும், உயர்வுக்கும் தோள்கொடுப்போம்.

திரு.ல.அமலானந்தகுமார் SLPS - 3
B,A (Gen), Sp.Trd, PGDE
அதிபர்
யா/மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலை

# பாடசாலை வரலாறு

சைவத் தமிழ்ச் சூழலில் ஒரு பாடசாலை அமைய வேண்டும் என்று விருப்போடு கிறிஸ்தவ மிஷனரிகளுக்குச் சமமாக சைவ வித்தியாவிருத்திச் சங்கமூடாகப் பல பகுதிகளிலும் பாடசாலைகள் நிறுவப்பட்டன. அவ்வகையில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கீரிமலை மண்ணிலும் ஒரு சைவத் தமிழ்ப் பண்பாட்டோடு கூடிய ஒரு பாடசாலையை நிறுவ வேண்டும் என்று அங்குள்ள பெரியவர்கள் எண்ணினர்.

அதற்கேற்ப அப்பகுதியில் வாழ்ந்த கிராமசேவகர் கனகசபை அவர்கள் நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு அருகில் ஒரு பாடசாலையை நிறுவ முன்வந்தார். அவர் தனக்குச் சொந்தமாக இருந்த பத்தரைப் பரப்புக் காணியை வழங்கி, கொட்டகை அமைத்து, சைவவித்தியாவிருத்திச் சங்க முகாமையின் கீழ் இப் பாடசாலையை நிறுவினர். 01.07.1955 அன்று மங்கல வாத்தியம் முழங்க தபால் தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்த கௌரவ க.நடேசன் அவர்கள் பாடசாலையைத் திறந்துவைத்தார். அரசாங்க அதிபரான ம.சிறிகாந்தா அவர்கள் சுபவேளையில் நகுலேஸ்வர மகா வித்தியாலயம் என்ற நாமம் சூட்டி வித்தியாரம்பம் செய்து வைத்தார்.

இச் சமயத்தில் வேறிடத்தில் நிரந்தர ஆசிரியராகப் பணி புரிந்த திரு.வ.கந்தையா அவர்கள் தனது பதவியை இராஜினமா செய்து விட்டு பதிவு பெறாத நிலையில் இப்பாடசாலையில் பொறுப்பேற்றார். 40 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையில் படிப்படியாக மாணவர் தொகை அதிகரித்தது. கருகம்பனை கிராம முன்னேற்றச் சங்கத்தின் உதவியுடன் கிராமத்தில் நிதி திரட்டப்பட்டு 100 அடி நீளமும், 40 அடி அகலமும் உடைய கட்டடம் அமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் வழங்கிய 25ஆயிரம் ரூபாவுடன் கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டது. 19.05.1956 இல் இப் பாடசாலையைத் தரிசித்த வடமாநில கல்விப் பணிப்பாளர் இப் பாடசாலையைப் பதிவு செய்யச் சிபார்சு செய்தார். 1957 முதல் இங்கு கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கப்பட்டது.

1960இல் க.பொ.த சாதாரண வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டு

வித்தியாபதியின் (அரசாங்க) முகாமைக்கு உட்படுத்தப்பட்டது. பின்னர் பாடசாலைக்குத் தென்புறமாக இருந்த 18 1/2 பரப்பு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. 28 ½ பரப்புக் காணியுடன் 01.07.1965 இல் பத்தாவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாடியது. 29.06.1965 இல் கதம்ப விழா வைத்து அதன் மூலம் பெறப்பட்ட நிதியில் கிணறு வெட்டப்பட்டு தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

1977இல் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் வழங்கிய 30ஆயிரம் ரூபா நிதியில் 60x20 அடிக்கட்டடம் அமைக்கப்பட்டது. 1978 இல் எதிர்க் கட்சித் தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்கள் வழங்கிய 20 ஆயிரம் ரூபா நிதியில் 40x20 கட்டடம் கட்டப்பட்டது. 1980 இன் முற்பகுதியில் 524 மாணவரும், 12 முழுநேர ஆசிரியரும் ஒரு பகுதி நேர ஆசிரியரும் கடமையாற்றினர்.

திரு.வ.கந்தையா அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திருமதி.த.இராமசாமி அதிபரானார். இவரது காலத்தில் பொறியியலாளர் இரத்தினம் அவர்களது உதவியால் இருமாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

1990 இல் இடம் பெற்ற போர்ச் சூழலைத் தொடர்ந்து பாடசாலையும் அசையும் சொத்துக்களுடன் இடம் பெயரத் தொடங்கியது. பின்வரும் இடங்களில் இப் பாடசாலை இயங்கியது.

15.06.1990 இல் இளவாலை அன்னை வேளங்கன்னி ஆலயம்
05.12.1990 இல் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலம்
15.07.1991 இல் சிறுவிளான் கனகசபை வித்தியாலயம்
24.06.1992 இல் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
07.09.1992 இல் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்
28.03.1994 இல் சீரணி, சண்டிலிப்பாயில் தனியார் வீடு
01.02.1996 இல் வாணி மகா வித்தியாலயம்
06.05.1996 இல் சண்டிலிப்பாயில் தனியார் காணி
10.01.2005 இல் சண்டிலிப்பாய் மத்தியில் தனியார் வீடு

தொடர்ந்து பாடசாலையைப் பொறுப்பேற்ற அதிபர் சு.சிவபாதரத்தினம் அவர்கள் திணைக்கள அழுத்தத்தின் மத்தியிலும் மூடாது தொடர்ந்து இயங்கச்

செய்தார். கல்வித் திணைக்கள உதவியுடன் மூன்று தற்காலிக கொட்டகைகளை நிறுவி பாடசாலையைச் செயற்பட வைத்தார். அவர் இளைப்பாறியதைத் தொடர்ந்து பாடசாலையை திரு.த.மோகன்ராஜ் அவர்கள் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் மலசலகூடத் தொகுதி அமைக்கப்பட்டது.

01.02.2010 இல் இலங்கை அதிபர் சேவை நியமனம் பெற்று திரு.சு.ஸ்ரீகுமரன் பாடசாலையைப் பொறுப்பேற்றார். 515 ஆவது படைப்பிரிவுடன் தொடர்பு கொண்டு 24.05.2010 இல் இராணுவ வழித்துணையுடன் பாடசாலை பார்வையிடப்பட்டது. காடாகப் பெரு மரங்கள் வளர்ந்திருந்த நிலையிலும், கட்டடங்கள் அழிவடைந்த நிலையிலும் இருந்த பாடசாலை தொடர்பான விடயங்கள் திணைக்களத்துக்கு படங்கள் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. மீள் குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டதும் தெல்லிப்பளை பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு கட்டடங்கள் அமைப்பதற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இராணுவ அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மீளெழுச்சித் திட்டத்தின் மூலம் பிரதேசம் துப்பரவு செய்யப்பட்டு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொறுப்பின் கீழ் கட்டட இடிபாடுகள் அகற்றப்பட்டன. மலசலகூடமும் திருத்தப்பட்டது.

29.06.2011அன்று வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 90 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட ஆய்வு கூடத்தின் கூடிய மாடிக் கட்டடம் தண்ணீர்த் தாங்கி, மலசல கூடத் தொகுதி ஆகியன அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் அதிபரின் தலைமையில் இடம் பெற்றது. நிதி ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி ஆரியரத்ன ஷேவகே மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.இ.இளங்கோவன் ஆகியோர் அடிக்கற்களை நாட்டி வைத்தார். சேவாலங்கா நிறுவனம் கிணற்றைத் திருத்தி அமைத்ததுடன் மைதானத்தையும் புனரமைத்துத் தந்தது.

சிறுவர் பாதுகாப்பு (save the children) 40 அடி நீளமான வகுப்பறைத் தொகுதியைப் புனரமைத்துத் தந்ததுடன் தற்காலிக கொட்டகைகளைச் சண்டிலிப்பாயில் இருந்து அகற்றி கீரிமலையில் மீள நிறுவ நிதியுதவி அளித்தது. அத்துடன் மலசல கூடத் தொகுதியினை அமைப்பதற்கும் உதவியது. பாடசாலையை இயங்க வைப்பதற்கான அடிப்படையை இவ்வமைப்பே ஏற்படுத்தித் தந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

02.01.2012 அன்று கீரிமலையில் பாடசாலை இயங்க ஆரம்பித்தது. ஆரம்ப

வைபவத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.ராஜேந்திரன் அவர்களும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.ச.கைலாசநாதன் அவர்களும் தெல்லிப்பளை பிரதேசச் செயலர் திரு.சுமுரளிதரன் அவர்களும் சிறுவர் பாதுகாப்பு (save the Children) நிறுவன அதிகாரிகளும் கலந்து கொண்டனர். சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், சப்பாத்துக்களை வழங்கியது. அத்துடன் பச்சைப் பலகை, விளையாட்டு உபகரணங்களும் இந்நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற மஹாகவியின் பாடலை வெளிப்படுத்தி பாடசாலை வீறு நடைபோடுகின்றது.

மைதானப் புனரமைப்பு, சுற்று மதில் அமைப்பு, சைக்கிள் தரிப்பிட அமைப்பு, ஆரம்பக் கல்வி வகுப்பறை அமைப்பு, சிறுவர் பூங்கா அமைப்பு, சமையற்கூடமும், களஞ்சியமும் அமைப்பு எனப் பல்வேறு வேலைத் திட்டங்கள் சிறப்பாக அமைத்து காணப்படுகின்றது. பாடசாலை முதல்வர் அதிபர் திரு.சு.ஸ்ரீகுமரன் தலைமையில் மாடிக் கட்டடத் திறப்பு விழா நிகழ்வு இடம்பெறவிருந்தது. பின்னர் அக்கட்டடத்திறப்பு விழா இடைநிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பின்னர் 40x20 அடி நீளமான கட்டட அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர் அதில் நூல் நிலையம், கணிணி அறை, வகுப்பறை என மூன்று கட்டடங்களைக் கொண்ட கட்டடம் புனரமைக்கப்பட்டது.

தொடர்ந்தும் தி.சு.ஸ்ரீகுமரன் பெற்றோர்களின் உதவியுடனும் தானும் சேர்ந்து 25x25 நீளமான சமையலறையினை நிர்மானிப்பதற்கான வேலையினை தொடர்ந்தார். இத் திட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பினை வலயம் (அரசாங்கம்) வழங்கியது பின்னர் இப் பாடசாலை இவ்வாறு மேலோங்கி வளர்ந்து வந்துகொண்டிருந்தது. இக் காலகட்டத்தில் 15.01.2013 திரு.சு.ஸ்ரீகுமரன் அதிபர் இடமாற்றம் பெற்று கிளிநொச்சி வலயத்துக்கு சென்று விட்டார். அக் காலகட்டத்தில் ஆசிரியராக கடமையாற்றிய திருமதி.யாமினி சதீஸ்குமார் அவர்கள் பதில் அதிபராக கடமையாற்றினார். இவர் காலத்தில் பாடசாலையில் விளையாட்டு முற்ற கிழக்கு பக்க பின் புற மதில் கட்டப்பட்டது. இவர்களின் முயற்சியினால் சிறுவர் பூங்காவை அமைத்து வைத்தார். பின்னர் மாணவர்களின் நலன் கருதி NDP வங்கியின் உதவியினைப் பெற்று மூன்று கணிணியினைப் பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு பல சேவைகளையும், வேலைகளையும் ஆற்றி பாடசாலையின் கல்விச்

செயற்பாட்டிலும், நிர்வாக செயற்பாட்டிலும் ஈடுபட்டிருந்த வேளையில் நடாத்தி வந்த காலத்தில் 23.01.2014 களில் புதிய அதிபராக திரு.த.தயானந்தன் அவர் நியமனம் பெற்று வந்தார். அவர் பாடசாலையைப் பெற்றுக் கொண்டார்.


புதிய அதிபராக பொறுப்பேற்றுக் கொண்ட அவர்கள் பாடசாலையின் கல்விச் செயற்பாட்டிலும் இணைபாடவிதான செயற்பாட்டிலும் கூடிய கவனம் பாடசாலைக்கு வந்து ஓரிரு மாதங்களிலே செலுத்தி வந்தார். பல இடர்பாடுகளுக்கும் மத்தியிலும் விளையாட்டு போட்டியினை நடாத்தினார். படிப்படியாக பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வதில் அயராது உழைத்து வந்ததன் பயனாக குறையாக இருந்த 90x25 அடி மாடிக்கட்டட வேலை 2017ம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டு திறப்புவிழா நடாத்தப்பட்டு அழகான மண்டபமாக இன்று காட்சியளிக்கச் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பழையவரிகளினி உதவியுடன் அழகியதொரு நுழைவாயில் 2015 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

2017ம் ஆண்டு, பாடசாலை வளவின் மேற்குப் பக்க வேலியில் 363 அடி நீளமான மதில் பழைய மாணவர்களின் முயற்சியினால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2017ம் ஆண்டு wash room ஒன்றும் 8x6 இல் அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை நிதியில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்காக விடப்பட்டுள்ளது. மேலும் ரூபா 150 000 ரூபாய் செலவில் மின்சாரவேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு பாடசாலையின் பௌதீக வளங்களில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

கல்விச் செயற்பாடுகளிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் பாடசாலை படிப்படியாக முன்னேறி வருகின்றது. மாணவர் சேர்வு வீதம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. தற்போது 22 ஆசிரியர்களுடனும் 252 மாணவர்களுடனும் பாடசாலை சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கணினியும் நாமும்

இன்றைய உலகில் விஞ்ஞானம் மிக வேகமாக வளர்ச்சி கண்டுவருகிறது. அதன் வளர்ச்சி பல்வேறுதுறைகளிலும் கிளைபரப்பி நிற்கின்றது அவற்றில் ஒன்று



தான் இன்றைய உலகின் கணிணிமயமாதல். உலகச் செய்திகளை விரல் நுனியில் கொண்டு வந்து தருகின்றது. எங்கு பார்த்தாலும் கணிணியின் ஆதிக்கம் காணப்படுகின்றது. தொழில்கள் எல்லாம் இன்று கணிணி மயமாகிக் கொண்டுவருகின்றது. இதனால் மனிதனின் உடல் உழைப்புக் குறைந்து பல நாடுகளில் வேலையில்லாதோரின் தொகை அதிகரித்து அது ஒரு பெரும் பிரச்சினையாக மாறுகின்றது.

கணிணி என்பது திடீரென்று தோன்றிய ஒன்றல்ல. நீண்ட காலமாக பல படிமுறை வளர்ச்சியை கண்டு வளர்ந்து வருகின்றது. இன்னும் பல புதிய கண்டுபிடிப்புக்களுடன் புதியவகை கணணிகள் அறிமுகமாகிக்கொண்டே இருக்கின்றன. இவை மனித மூளையைப் போன்று பன்மடங்கு அதிக வலு உடையது ஆகும். நாம் நமது வேலையை சுலபமாக்கிக் கொள்வதற்கு இது உதவுகிறது. இன்று அனைவரினதும் வீடுகளிலும் கணிணி உள்ளது. இக்கணணியுடன் சேர்ந்து இணையவலைமைப்பும் எமக்கு பெரிதும் உபயோகமாகவுள்ளது. உலகையையே ஒன்றிணைத்து அனைவரையும் வலையமைப்பின் ஊடாக ஒன்றிணைக்கிறது. இணையத்தின் ஊடாக பல தகவல்களை பெற்றுக்கொள்ள முடிகிறது.

மாணவர்களாகிய எமக்கு கணிணி பெரிதும் உதவுகின்றது. நாம் எமது கற்கைக்கு தேவையான விடயங்களையும் நூல்களையும் இருந்த இடத்திலேயே இணையம் மூலமாகத் தேடிப்பெற்றுக்கொள்ளலாம். எமக்கு தேவையான விடயங்களை பதிந்து வைத்து பின்பு பயன்படுத்திக்கொள்ளலாம். மூளைக்கு பயன்தரும் பல விளையாட்டுக்களை விளையாடலாம். ஓய்வு நேரங்களில் இசை கேட்கலாம். நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் மின்னஞ்சல் மூலம்

ஒளிப்படங்களையும் தகவல்களையும் துரித கதியில் அனுப்பலாம். செய்தியையும் தகவல்களையும் உலகின் எந்த மூளையிலும் நடைபெறும் சம்பவங்களையும் உடனுக்குடன் தெரிந்துகொள்ள கணிணி உதவுகின்றது. இவற்றை தக்க நேரத்தில் பார்வையிட கணிணி உதவும். புலம்பெயர்ந்து வாழும் நாம் எமது சொந்தங்களையும் பார்த்து பேச வாய்ப்பு கிடைப்பதற்கு கணிணி உதவுகிறது.

இவ்வாறு பல்வேறு துறையினருக்கு பல வகையில் உதவுகிறது. பெரிய நிறுவனங்களில் தகவல்களையும் தரவுகளையும் பதிந்து வைப்பதற்கு அவற்றை தேவையான வடிவங்களில் மாற்றி பயன்படுத்திக் கொள்வதற்கு கணிணி பெரிதும் உதவுகிறது. இன்று எமக்கும் கணிணிக்குமான தொடர்பு வளர்ந்துவிட்டது. எனவே கணிணியைச் சரியான முறையில் அது தொடர்பான அறிவுடன் பயன்படுத்தி கணிணியுடன் சேர்ந்து பல நன்மைகளை அடைந்து கொள்வோம்.

ஜெயவர்த்தினி தர்மப்பிரதீபசர்மா
9B
யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி




கடவுள் :
"பக்தா! உன் பக்தியை மெச்சினேன்,
உனக்கு என்ன வரம் வேண்டும்?"
பக்தன் :
"எனக்கு என்ன வரம் வேண்டும்
என்று கூட தெரியாத
நீயெல்லாம் ஒரு கடவுளா?"

# உழைப்பே உயர்விற்கு வழி

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்ற நம் முன்னோர்களின் கூற்றிற்கிணங்க முயற்சி என்பது நம் வாழ்வின் உயர்ச்சிக்கு வழிவகுப்பதாகும். அதாவது நாம் ஒரு செயற்பாட்டை வெற்றியுடன் நிறைவு செய்ய அதனை செய்து முடிப்பதற்கான கால எல்லையில் அதிகளவு பயிற்சியுடன் அச் செயற்பாட்டை செய்து முடித்தலையே முயற்சி எனலாம். ஒவ்வொருவருக்குமே முயற்சி என்பது கட்டாயமானது. அதிலும் கல்வி கற்கும் மாணவர்களாகிய எமக்கு மிக மிக முக்கியமானது உழைப்பென்பதும் முயற்சியைப்போலத்தான் முயற்சியும், உழைப்பும் ஒன்றாகச் சேர்ந்தால் தான் ஒரு செயற்பாட்டை வெற்றியும் அடையலாம். அச் செயற்பாட்டிலிருந்து முன்னேறி உயர்ச்சியும் அடையலாம்.



"இலமொன்று அசை இருப்பாரைக் காணின், நிலமென்னும் நல்லாள் நகும்" என்பது திருவள்ளுவரின் கூற்றாகும். அதாவது "தம்மிடம் யாதொரு பொருளும் இல்லை என்று உழைக்காமல் இருப்பவரைக் கண்டால் நிலம் என்னும் நல்ல பெண் தமக்குள் சிரிப்பாள்" இன்றைய காலத்தை எடுப்போமானால் தம்மிடம் யாதொரு பொருளும் இல்லையென்று உழைக்காமல் இருப்பவரை விட அனைத்துப் பொருள்களையுமே தம்மிடத்தில் வைத்துக்கொண்டு உழைக்காமல் இருப்பவரையே அதிகம் காணக்கூடியதாய் இருக்கிறது. இதனால் தான் இன்றைய சமூகம் சீரழிந்து செல்கிறது. நவீன பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் காரணமாக மனிதன் "உழைப்பு" என்ற பதத்தையே மறந்து நிற்கிறான். உட்கார்ந்த இடத்திலிருந்தே அனைத்தையும் செய்கிறான். இதனால் தொழில்துறைகளில் உயர்ச்சி அடைந்தாலும் நோய்கள் வந்து நோய்வாய்ப்படுகின்றான்.

மேலும் உயர்ச்சி என்னும் ஒரு வெற்றிக்கொடியை அடைவதற்கு பல படிகள் உள்ளன. அதில் முதலாவது படியே உழைப்பு ஆகும். நாம் எவ்வளவிற்கு கடுமையாக உழைக்கிறோமோ அவ்வளவத்திற்கு அடுத்த படியை நோக்கி முன்னேறலாம். "அரிது அரிது மானிடராதல் அரிது" என்றாள் ஔவையார். எந்தப் பிறவியிலுமே முன்னிலையில் நிற்பது மனிதப்பிறவியே ஆகும். அந்த மனிதப் பிறவியில் நாம் பிறப்பதற்கு நாம் அனைவருமே அதிர்ஷ்டமானவர்கள். இன்றைய நவீன யுகத்திலே பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்குப் பின்னாலும் ஒரு மனிதரின் கடுமையான உழைப்பு இருக்கும் இதை நாம் உணர வேண்டும். பண்டைய காலத்தில் வாழ்ந்தவர்களிடம் முயற்சியும், உழைப்பும் இல்லையெனில் இன்றைய நவீனகால யுகத்திற்குள் வந்திருக்கவே மாட்டோம்.

எனவே மாணவர்களாகிய நாம் அனைவரும் எமது கல்விச் செயற்பாடுகளில் கடுமையான உழைப்பினை எமது அடித்தளமாகக் கொண்டு வாழ்வில் உயர்ச்சி அடைவோம்.

"முயற்சி உயர்ச்சிக்கு வழி"
"உழைப்பே உயர்விற்கு வழி"


வி.வர்ணவி

தரம் - 08B

யா/இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்




# எங்கள் தமிழ்மொழி

என்னைத் தாலாட்டிய மொழி
என தருமைத் தமிழ்மொழி
என் இனிய தாய்மொழி
எண்ணமெல்லாம் நிறைந்தமொழி

அன்புப் பெற்றோர் ஆசையாய் குலவி
அன்பிலும் உறைய ஊற்றிய மொழி
எங்கள் தமிழ்மொழி
தேன் பாய்ச்சும் தினம் தினமாய்

எனது இன்பத் தாய்மொழி
மனது நிறையும் இனியமொழி
இதயத் தெழுந்த உண்மைமொழி
இனிமைத் தமிழே நீவாழி

பாலூட்டும் போது - நீ
பல்லால் கடிக்கையில் அன்னை
சொன்னதும் - பால் குடித்தபின்
நீ சென்னது தமிழ்மொழி

அம்மா அது தான் உன்மொழி
அமுதத் தாய்மொழி
சொற்கள் கிடைக்கும் சுரங்கமொழி
எங்கள் தாய் மொழி

எங்கள் மொழி உமதுதாய்மொழியென்றே
என்னிடம் கேட்டால் சொல்வது ஒன்றே
செம்மொழி அம்மொழி செப்பிட இன்றே
செந்தமிழ் ஆகுமே எம்மொழியன்றே

தங்க தமிழே தரணி புகழ்
செம்மொழியே
மண்ணில் பிறந்த முதல் மொழியே
எங்கள் தழிம் மொழி

தந்தை தாய்காட்டிய மொழி
தத்துவம் பல கண்ட தனிமொழி
அறிவியல் கண்ட அன்புமொழி
யாருக்கும் விளங்கும் எளியமொழி

உடல் கொண்ட உன்னதமொழி
உயிர் கொண்ட உன்னதமொழி
புலவர் பாடிய புனிதமொழி
எங்கள் தாய்மொழி தமிழ்மொழியே

இன்னல் பலபல எய்திய போதும்
எதிரிகள் கலபட செய்திட தீதும்
கன்னல் தமிழே கலங்கியதில்லை
எங்கள் தமிழ் மொழியே


ரா.அன்ரனியா றயேந்தினி
(O/L)
I.C.M.V

# ஓசோன் படலத்தின் முக்கியத்துவம்

21 ஆம் நூற்றாண்டில் ஓசோன் படலத்தையே இல்லாது செய்துவிடுவதே மனிதகுலத்தின் இலக்காகக் காணப்படுகிறது. நஷனல் ஓசொனிக் அன்ட் அட்மோஸ்பெரி அட்மினிஸ்றேசன் (NOAA) என்னும் அமைப்பு வெளியிடப்பட்டுள்ள முடிவுகளே இவ்வாறு சிந்திக்கத் தூண்டுகிறது.

பூமியில் வாழும் தாவரங்களும் விலங்குகளும் சூரியனினால் வெளிவிடப்படும் புறஊதாக் கதிர்களினால் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஓசொன் படலம் ஒரு திரையாக உள்ளது. இப் படலத்தில் மெலிவு ஏற்பட்டால் புற ஊதாக் கதிர்கள் மிக எளிதாகப் பூமிப் பரப்பை வந்தடையும். இதனால் பூமியில் வாழும் உயிரினங்களுக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும்.

குளிரேற்றிகள், தீயணை கருவிகள் என்பவற்றில் பயன்படுத்தப்படுவதும் கணணிச் சுற்றுக்களைச் சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதுமான குளோரோ புளோரோகாபன் ($Cl_2F_2C$) வளிமண்டலத்தைச் சூழ உள்ள ஓசோன் படலத்தில் துவாரத்தை ஏற்படுத்தி உள்ளது என்று அறிவியல் அறிஞர்களால் கண்டறியப்பட்டுள்ளது. 1987 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மாண்ட்ரீல் ஒப்பந்தத்தில் ஓசோன் படலத்தில் துவாரத்தை ஏற்படுத்தும் இவ் வாயுக்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆனால் நைட்ரஸ் ஒட்சைட், நைட்ரிக் ஒட்சைட் வாயுக்கள் மீது எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை.




மனிதனால் வெளிவிடப்படும் ஓசொன் பாதிப்புப் பொருட்கள் சக்தி மிக்க பசுமையகப் பொருட்கள் சக்தி மிக்க பசுமையகப் பொருள்களாக (Potent green house gases) செயற்படுகின்றன. அவையாவன கால்நடைகளின் கழிவுகள், மண்ணுக்கு உரமிடுதல், கழிவு நீர் சுத்திகரிப்பு, பெற்றோல் டீசல் இயந்திரங்களின் செயற்பாடுகள் போன்றவற்றால் வளிமண்டலத்தில் நைட்ரஸ் ஒட்சைட், நைட்ரிக் ஒட்சைட் போன்ற வாயுக்கள் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. புவியின் வெப்ப

அதிகரிப்பிற்கும் இவ் வாயுக்களே காரணமாக உள்ளது.

ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதன் மூலமே உயிர்களின் நீடித்த வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் நாம் பங்காற்ற முடியும் என்பதை உறுதிப்படுத்தும் முகமாகவே ஐக்கிய நாடுகள் அமைப்பு (UNO) செப்ரெம்பர் 16 ஆந் திகதி உலக ஓசொன் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

திருமதி.சிறீபத்மாவதி விக்கினேஸ்வரராசா
ஓய்வு நிலை அதிபர்
விசேட பயிற்சி - விஞ்ஞானம்)



# கோழி முதலில் வந்ததா முட்டை முதலில் வந்ததா

இதனுடைய மையம் வந்து முதலில் ஒரு கோழி வந்திருக்கு எண்டு நினைக்க எண்டா அந்தக்கோழி வந்து முட்டையில் இருந்து தான் வந்திருக்க வேண்டும். என்றே எடுக்கலாம். அதே முட்டை முதலில் வந்தது எண்டா அது ஏதொ ஒரு லொரியில இருந்து தான் வந்தது எண்ட முடிவு எடுக்க வேண்டிவரும். இது தான் இந்த தலைப்பில் இருக்கின்ற சிறிய பிரச்சினை இதை விளங்கிக் கொள்ள நமக்கு கொஞ்சமான விஞ்ஞானம் (Science) தெரிஞ்சாப் போதும்.

எல்லாமே பரிமாண வளர்ச்சி (evolution) இல் DNA மாற்றங்கள் உருவாகும். இது வந்து ஒரு குறிப்பிட்ட தலைமுறையில் மாறுபட்டாலும் ஒவ்வொரு காலத்திலும் மாறிக்கொண்டே இருக்கும். DNA எங்கை மாறும் எண்டால் எப்படியுமே நமக்கு கருவுக்குள் உருவாகிக்கிட்டிருக்கும் போது DNA மாற்றங்கள் வரும் இப்ப வந்து அப்பா அம்மா இரண்டு பேருமே வெள்ளையா இருப்பார்கள். ஆனால் மகன் வந்து கறுப்பா இருப்பான் அது எப்படினா அவங்களோட தாத்தா பாட்டி அவர்களில் இருந்து ஒரு சிறிய கணிக்கை (atribute) அது எப்படியோ வழிவழியாக வந்து இந்த ஒரு குழந்தை உருவாகின்ற அற்ற கணிக்கை அதிகமாக வந்து கலந்திச்சு எண்டால் அந்த குழந்தை கறுப்பாகத் தான் இருக்கும். அது எங்கை உருவாகுது தெரியுமா அந்த குழந்தை வயிற்றுக்குள் இருக்கும் போது அதேபோல் முட்டைகளுக்கு எண்டால் குறிப்பிட்ட மாற்றங்கள் இருத்தல் வேண்டும்.

ஒரு உதாரணமாக யோசித்துப் பார்த்தம் எண்டால் முதலில் ஏதோ ஒரு முட்டை போடுகிற பறவை (Egg laying bird) இருந்திருக்கும் அற்ற Egg laging brid வந்து கோழிக்கு முந்தின பறவையாக இருக்கலாம். இது வந்து எப்படி சொல்லலாம் எண்டால் நமது வீடுகளில் நாய்கள் இருக்கும் அந்த நாய்கள் இருந்து வந்தது தான் நாய்கள் நாம் விரட்டி வைத்து பழக்கப்படுத்தி வீட்டிலை வளர்க்கத் தொடங்கியதால நாயோட பழக்கவழக்கங்கள் வந்தடைந்தன. அதாவது மனிதர்களைத் தாக்கக் கூடாது ஆனால் நாய் மனிதர்களைத் தாக்கக்கூடியது. ஒவ்வொரு காலப்பகுதியில் மாறுவதனால் தான் இந்த மாதிரியான மாற்றங்கள் உருவாகின்றது. அதேமாதிரி ஆராய்ந்து பார்த்தால் குறிப்பிட்ட மரபானது (DNA) ஏதோ ஒரு முட்டையிடும் பறவையை Y எண்டு வச்சிருப்பம். அந்த Y பறவை முட்டையிட்டுக் கொண்டே இருக்கும் யாது குறிப்பிட்ட நேரம் வரும் யாது அது காட்டில இருந்து வீட்டிற்கு வரும் போது மக்கள் வருகின்ற (domesdic) இடத்தில் வரும் யாது சிறுசிறு

மாற்றங்கள் ஏற்படுகின்றது. 200 வருடங்களாக ஒவ்வொரு பறவையிலும் மாற்றங்கள் கடைசியாக ஒரு முட்டையில் அந்த மரபானது தாக்கம் செலுத்தி முட்டை வரும் இந்த முட்டை வந்து முழுமையாக இறைச்சியாக (chick) ஆக முட்டையில் தான் மாறுகின்றது. இப்பொழுது முதலில் முட்டை தான் வந்திருக்கும் அதன் பிறகு தான் கோழியே வந்திருக்கும்.

கடைசியாக முட்டையிலிருந்து தான் கோழி வந்திருக்க வேண்டும் அந்த முட்டை வந்து கண்டிப்பாக கோழியிலிருந்து வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது தான் கருத்து ஏன் எண்டால் முதல் காலத்தில் இருந்த பறவை எந்தப் பறவையாகவும் இருந்திருக்கலாம். அந்தப் பறவை சரியாக மாறவேண்டிய நேரத்தில் இருந்த போது மரபனு (DNA) மாறுதலால் பிறப்பு மாற்றத்தினால் (change) குறிப்பிட்ட முட்டை வந்தது அதில இருந்து தான் முதலில் கோழி வந்தது. அந்த முட்டை கோழி முட்டை முதலில் முட்டை தான் வந்தது என்பது எனது விவாதம்.

நன்றி

கௌரி



# விளையாட்டின் பயன்கள்



ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா - கூடி விளையாடு பாப்பா என்பது பாரதியின் கூற்று. விளையாட்டு அனைத்து மனிதர்களும் இயல்பாக விரும்பி ஈடுபடும் செயற்பாடுகளில் ஒன்று. பரபரப்பான உலகம் வேகம் நிறைந்த வாழ்க்கை அமைப்பு, உழைப்பு மட்டுமே வாழ்க்கை அல்ல ஓய்வும் அவசியமுமே. ஓய்வு என்றால் படுத்து உறங்குவதல்ல செய்கின்ற வேலையை மாற்றிச் செய்வதும் விருப்பமானவர்களுடன் சேர்ந்து உறவாடுவதும், விளையாடிக் கழிப்பதும் ஆகும்.

"உடலினை உறுதி செய்" என்று கூறிய பாரதியார் "ஓடி விளையாடு பாப்பா" என்றும் நமக்காகப் பாடியுள்ளார். சத்துணவு, உடற்பயிற்சி, மாலைநேர விளையாட்டுக்களினால் நம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம். உடலும் மனமும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையதால் மன மகிழ்ச்சியினால் உடல் புத்துணர்ச்சி அடைகின்றது.

விளையாட்டுக்களினால் குழு ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளும் சகிப்புத் தன்மை, நட்புணர்வு, உற்சாகம் போன்றன வளருவதுடன் உடலில் உள்ள கழிவு உப்புக்கள் வியர்வையாக வெளியேறும். அதிக வியர்வை நீராவியாகும் போது நம் உடல் குளிர்ந்து உடல் வெப்பம் சீராகின்றது. வியர்வைச் சுரப்பிகள் நம் உடலில் ஓர் கூலகக் கருவியாக பயன்படுகின்றது. நம் உடல் பருமனைக் குறைக்க உதவும். "டாட்மைன்" என்ற சுரக்கும் பொருள் மூளையில் சுரக்கின்றது. கிராமங்களில் பொதுவாக விளையாடும் விளையாட்டுக்கள் பல்லாங்குழி, தாயம், ஆடுபுழி ஆட்டம், குலைகுலையா முந்திரிக்காய், கண்ணாமூச்சி, தட்டாங்கல் மற்றும் கபடி எனப் பல உள்ளன.

பயிற்சிகள் மற்றும் விளையாட்டுக்களின் போது சிறுவர்கள் ஏனைய பல சிறுவர்கள் மற்றும் பயிற்சியாளர்களுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அவர்கள் சமூகத்துடன் தமது திறமைகளைப் பகிர்ந்து கொள்கின்றனர். விளையாட்டில் ஈடுபடும் போது நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவம், ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றை கற்றுக் கொள்கின்றமையால் அவர்கள் கல்வியிலும் சிறந்து விளங்குகின்றனர்.

விளையாட்டில் ஈடுபடும் போது பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள், நடுவர்கள் மற்றும் தமது சகாக்களை மதித்து நடக்கவேண்டிய ஒரு கட்டாயம் இருக்கின்றது. எனவே விளையாட்டில் உண்டாகும் இந்த ஏனையோரை மதிக்கும் பழக்கம் பின்னர் அது அவரது வாழ்க்கையிலும் தானாகவே நிலைத்து நிற்கின்றது. மேலும் விளையாட்டு குடும்பத்துடனான ஈடுபாட்டினையும் ஊக்குவிக்கின்றது.

இவ்வாறு பல நன்மைகளை ஏற்படுத்தும் விளையாட்டு நிகழ்வுகள் ஒரு மனிதனை ஆளுமை பண்புகள் நிறைந்தனவாக அவனது வாழ்க்கைப் பாதையை முன்னேற்றுவதற்கும் பாரிய பங்கு வகிக்கின்றது என்பதில் ஐயமில்லை. ஆகவே எமது உடல் நலம் காக்க விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவோம்.

"விளையாட்டில் ஈடுபடுவோம்
உடல் நலம் பேணுவோம்"

செ. மேரிசானுஜா
$09^B$
யா/இளவலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்



# இராவணாயணம்



வாழ்க்கையில் எது நல்லது எது கெட்டது எண்டது எங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும். யார் நல்லவர்கள் யார் கெட்டவர்கள் என்று எங்களால் ஓரளவுக்கு சொல்ல முடியும். ராமாயணம் எனும் இதிகாசத்தில் ராமர் நல்லவர்கள் என்பதை எல்லோராலும் இலகுவில் செல்லவருகின்றது. ஆனால் ராமாயணத்தில் ராவணன் கெட்டவரா எண்டு எத்தனை பேர் யோசிச்சிருப்பம். இந்தக் கட்டுரையில் என்ன பக்கம் பாரம் எண்டால் ராவணனோட நிறையக் கதைகள் இருக்கு ராமாயணத்துக்கு எதிரான வேறு கதைகளும் இருக்கு அந்தக் கதையெல்லாம் விருத்து ராமாயணத்தின் பக்கத்திலிருந்தே ராமாயணம் என்ன கதையைச் சொல்லுதோ அதே கதையில் இருந்து வரப்போகின்றோம். அதே ராவணனோட பக்கத்தில இருந்தே கதையையும் பார்ப்பது தான் இந்த கட்டுரை ராவணன் கெட்டவனா? நல்லவனா? எண்டது வாசகர்கள் தான் இதை வாசித்த பின் முடிவெடுக்க வேண்டும்.

ராவணன் யார் எண்டா இந்த இலங்கையின் ஒரு அரசன் அந்தக் காலத்திலேயே மக்களுக்கு நல்லது செய்து மக்களுக்காகவே வாழ்ந்த ஒரு அரசன். அப்படியது சொல்கிறார்கள். ராமனுக்கும் ராவணனுக்கும் அடிப்படையான வித்தியாசம் என்ன எண்டால் கடவுள் மனித அவதாரத்தில் இருந்தது இராமன் மனிதன் கடவுள் மாதிரி மாறியது மக்களைக் காப்பாற்றினது இராவணன். இவர்கள் இரண்டு பேருமே அவர்களது நாட்டுக்காக உண்மையாக இருந்தார்கள். இராவணன் அயோத்தியிலிருந்து வெளியேறி வனவாசம் சென்றார். ராவணன் இந்த காலம் எல்லோரும் போற்றி வாழ்ந்த காலம் சொல்லப்போனால் பொற்காலம் என்று அழைக்கலாம். தமிழர்கள் சிறந்து விளங்கிய காலம் எது எண்டால் இலங்கை வரலாற்றில் அது ராவணன் ஆண்ட காலம் தான். ராவணன் ஒரு தமிழ் மன்னன் அது மட்டும் இல்லாமல் மிகப்பெரிய சிவ பக்தன் அகுவம் வீணை வாசிப்பதில்

பெயர்போனவன். அவன் வீணையை வாசித்தே சுத்தியிருக்கின்ற புலன்களை எல்லாம் அவனது கட்டுப்பாட்டில் கொண்டுவரக்கூடிய திறனை கொண்டவன். ஜோதிடத்தில் நிறைய நாட்டம் கொண்டவன் இப்படிப்பட்ட ராவணன் சீதையைக் கடத்தினது தப்பு எப்படி என்றால் ஏன் எண்டதைப் பார்க்கலாம்.

ராவணனுக்கு எதிரிகள் நிறையப் பேர் இருந்தார்கள். அதிலும் முக்கியமான குறுநிலத்து எதிரியான வித்யுத் , சூர்ப்பனகை காதல் வலையில் விழவைத்து தனது காதலை முன்னெடுத்து இருவரும் காதலித்து வருகிறார்கள். ஒரு நாள் சூர்ப்பனகை அண்ணன் இராவணனிடம் சொல்கிறாள் நான் வித்யுரத்தைக் காதலிக்கின்றேன் என்று ஆனால் இராவணன் ஜோதிடம் முன் நடந்தவை முன்னய அறிவும் ஆற்றல் கொண்டதால் அதைத் தடுக்கின்றான். அதற்கு காரணம் வித்யுரத் தன்னைக் கொன்று இந்த நிலத்தை, இலங்கையை அடைய விரும்புகிறான் என்பதை இராவணன் ஜோதிடம் மூலம் அறிந்து அதை சூர்ப்பனகையிடம் கூறுகின்றான். அவன் உன்னை காதலிக்கவில்லை நம்




இராட்சியத்தை காதலிக்கின்றான் என்று கூறுகின்றான். ஆனால் சூர்ப்பனகையோ அவன் மேல் உள்ள காதலினால் அதை ஏற்க மறுக்கின்றாள். அது மட்டுமல்லாது சூர்ப்பனகை இராவணன் மீது கோபம் கொள்கிறாள். நீ எப்படி இவ்வாறு கூறலாம். நீ சொல்லுறது தப்பு நாங்கள் இருவரும் காதலிக்கின்றோம் என்கிறாள். இராவணன் வேறு வழி இல்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் போது சூர்ப்பனகையும் வித்யுரத்தும் இருவரும் யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்து கொள்கிறார்கள். இது அறிந்த இராவணன் தன்னுடைய எதிரி தன்னைக் கொல்ல நாள் முயற்சி என்றெல்லாம் தெரிந்தும் வித்யுரத்தையும் சூர்ப்பனகையும் ஏற்றுக்கொள்கின்றான். தன்னுடனே இருவரையும் வைத்துக் கொள்கின்றான். சிலகாலம் கழித்து இராவணனும் வித்யுரத்தும் தனியா நடந்து போகும் போது வித்யுரத் இராவணனை எதிர்க்கிறான் இருவருக்கும் இடையில் கடுமையான சண்டை நடைபெறுகின்றது போக வழியில்லாமல் தன்னைக் தற்காப்பதற்காக



இராவணன் வித்பரத்தை சொல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. வித்யுரத்தைக் கொன்று விடுகின்றான். இந்த சம்பவம் சூர்ப்பனகையை கடுமையாகப் பாதிச்சு இராவணன் மேல் கோபம் வரக் காரணமாகவும் அமைந்து விடுகின்றது. நீ எனது கணவனை வேண்டுமென்றே கொன்று விட்டாய் என்று சொல்லி சூர்ப்பனகை கடுமையாக கோபப்படுகிறாள். நீ பெரிய தப்பு பண்ணிவிட்டாய் வேணும் எண்டே தான் எனது கணவனைக் கொன்றுவிட்டாய் உனக்கு வித்யுரத்தை பிடித்ததே இல்லை அவன் இன்னொரு கூட்டத்தைச் சேர்ந்தவன் இன்னொரு குறு நிலத்தைச் சேர்ந்தவன் அதே காரணத்துக்காகத்தான் கொன்றாய் நீ பயங்கரமான நிலப்பித்து பிடித்தவன் என்று இப்போது சாதி என்று சொல்லுறம் அப்போது நாடு நிலம் அப்படியென்று சொல்லலாம். வித்பரத்தைத் இலங்கையனாக தபிரகா இருந்திருந்தா ஏற்றிருப்பாய் அதனால் தான் அவனை கொன்றது எனது கடும் கோபம் கொள் இலங்கையை விட்டுவிட்டு சூர்பனகை சென்று விடுகிறாள்.

சூர்பனகை இந்தியாவில் தெற்கில் இருக்கின்ற காட்டில் வாழ்ந்து வருகிறாள். இந்த நேரத்தில் இராவணனுக்கு சரியான மனவேதனை தன்னை விட்டு தங்கை போனதை நினைத்து கவலையில் இருக்கின்றார். அதிக பாசம் கொண்ட அண்ணன் தங்கை தன்னை கடைசிவரைக்கும் என்ன நடந்தது எண்டு புரிந்து கொள்ளாமல் சென்றது சரியான மனவேதனையை இராவணனுக்கு கொடுத்தது இராவணனால் உண்மையைச் சொல்ல முடியாத சூழ்நிலையில் இராவணன் வாழ்ந்து வருகின்றான். உண்மையிலேயே இராவணன் பார்த்தால் அண்ணன் தங்கை அதைதான் அடிப்படையாக இருக்கும். தென்இந்திய வனத்தில் இராமனையும் இலக்குமணனையும் சூர்பனகை பார்க்கிறாள். பார்த்தது இராமனின் மேல் சூர்பனகை கவர்ச்சி கொள்கிறாள். ஒரு விதமான ஆசை வந்தது இராமனிடம் சூர்பனகை ாய் கதைக்கின்றாள். இராமன் நீங்க அழகா இருக்கின்றீர்கள் பெரிய மன்னன் என்று மனையிலே எவ்வித பின்பற்றுகின்றீர்கள் என்று கேட்கிறான். சூர்பனகை ஏன் என்றால் தனது அண்ணன் வித்யுரத்தைக் கொன்றதால் தனது அண்ணன் நல்லவராக அவருக்கு தெரியவில்லை. தர்மவானாவும் தெரியவில்லை. தன்மேல் பாவம் இல்லாததால் தான் இப்படியெல்லாம் இராவணன் செய்கின்றாய். அதனால் இராமனிடம் எப்படி முடிக்கின்றது என வியைவுகிறாள். அதற்கு இராமன் தனது மனைவில் அற்புகொண்டவள் வேறு பெண்களுடன் போசவேமாட்டேன். என்பகா

நான் உன்கூட என்னால் பேசமுடியாது வேண்டும் என்றால் எனது தம்பி இலக்குமணனிடம் ஏதாவது கேட்கவேண்டும் என்றால் எனது தம்பியிடம் கேள் என்றார். ஆனால் இலக்குமணன் அந்த நேரத்தில் சூர்பனகையில் தோற்றத்தைக் கேலி செய்கின்றான். சூர்ப்பனகை எண்டவள் கரும் தோல் கொண்ட திராவிட இனத்தின் நிறத்தைக் கொண்டவள் அதனால் உனது அழகுக்கு எனது அண்ணன் இராமன் என்று கேலி செய்கின்றான்.



அப்படியே சூர்ப்பனகையின் மூக்கை அறத்து விடுகின்றான். யோசித்துப் பாருங்கள் வாசகர்களே ஒரு மன்னனே மூக்கை வெட்டியது இதிலதான் உண்மையிலே இராமாயணப் போர் ஆரம்பமாகின்றது. 13 நாள் நடந்த போரில் இந்த இடத்தில் தான் ஆரம்பிக்கின்றது. யாதுமே நாங்கள் நினைப்பது சித்தாதான் இராமாயணத்துக்கு காரணமாய் எண்டு ஆனால் சித்தா இல்ல சூர்ப்பனகை தான் இராமாணயம் உருவாகக் காரணம்.

மூக்கை அறுத்ததும் சூர்ப்பனகைக்கு கோபம் வருகின்றது. அண்ணன் இராவணனிடம் போய் சொல்கிறாள் இரண்டு இளவரசர்கள் இருக்கிறார்கள் வனத்தினுள் அவர்களுடன் ஒரு பொண்ணு இருக்கின்றாள். நீ வந்து அந்த பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்து இரு ஏன் என்றால் அந்தப் பொண்ணு அழகாக இருக்கின்றாள். அந்த மாதிரி அழகான பொண்ணைப் பார்த்துவிட்டு மிகுதிப் பெண்களை அழகு இல்லை எண்டு கேவலமாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த இளவரசர்கள் அவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும். அவளை அழைத்து வந்து கல்யாணம் செய்துகொள் என்று சூர்பனகை இராவணனிடம் சொல்கின்றாள். இராவணன் தெரியுது இதை நான் செய்தால் அது தர்மத்துக்கு புறம்பான விடயம் செய்யக்கூடாது என்று தெரிவிக்கின்றான். ஆனாலும் தனது தங்கையை கேவலப்படுத்திக் கேலி செய்த காரணத்தினால் எந்த ஒரு அண்ணனுக்கும் தங்கை மீது கைவைத்தால் கோபம் வரும் தான் ஆனால் நான் சீத்தாவை அவனைக் கவர்ந்து எண்டு சொல்லமுடியாது இதைபடித்துக் கொண்டு வந்து விடுகின்றேன். யாரா இருந்தாலும் உணர்வுகள் ஒன்று தான் என்பதை உணர்த்துவதற்காக அவனைக் விடுகின்றேன். ஆனால் அவர்களை என்னால் மாலையிடவோ மறுக்காவோ முடியாது எதுவுமே பண்ணமாட்டான். சீகையை மிகப்பெரிய ஆசியாகக் கான் நடக்கவேன். சீக்கா எங்க

தவறுமே செய்யவில்லை தான் செய்தது இலக்குவனும் இராமனும் தான் என்று சொல்லி இராவணன் சீதாவைத் இலங்கைக்கு இறையிட்டு வருகின்றார். சூர்ப்பனகைக்காக இராவணன் சீதையைத் இறையிட்டு வருகின்றான். அப்பவே இராவணனுக்குத் தெரியும் இதனால் எவ்வளவு பெரிய விபரீதம் அழிவு வரப்போகுது எண்டு தெரியும் ஏன் எண்டால் முதல் கூறியது போல இராவணனுக்கு மிகப்பெரிய ஜோதிடவாதி ஜோதிடம் கணிப்பவன் என்பவனாய் அறிந்து கொள்கின்றான். தூக்கிட்டு வந்ததால் எனது இராட்சியம் அழிந்துவிடும் என்று தெரியும் இவ்வளவையும் தெரிந்த பிறகும் தன்னுடைய ஆசைத் தங்கை கேட்டுக்கொண்ட ஏதொ காரணத்துக்காக இதையெல்லாம் செய்கின்றான் இராவணன்.

இலங்கையில் சீத்தா இருந்தபோது ஒரு தடவை கூட இராவணன் களங்கப்படுத்தியது கிடையாது சித்திரவதை செய்ததுகூடக் கிடையாது ஏறெடுத்துப் பார்த்தது கூடக் கிடையாது சீத்தா ஒரு பயங்கரமான பாதுகாப்பில் வைத்திருக்கின்றான். இந்த நிலமையில் இந்த விடயம் சாத்தியமானது தெரியாது ஆனால் அப்போது ஒரு இராட்சிய அரசன் இன்னொரு இராட்சிய அரசனின் மனைவியை பத்திரமாக பாதுகாத்தான் எண்டால் அது நம்பவே முடியாது ஆனால் இராவணன் அரசாட்சியில் இது நடந்தது. மிகப்பெரிய அழகான அசோகவனத்தில் சீதையை நிலை பணிப்பெண்கள் எல்லாம் வைத்து சீத்தாவைக் கவனித்து வந்தான். ஆனால் சீத்தா அதெல்லாம் தூக்கியெறிந்து இதெல்லாம் எனக்கு வேண்டாம் எனக்கு கணவன் தான் வேண்டும் கணவனை விட்டு பிரிந்து இருப்பதே பெரிய பாவம் எண்டு நினைத்து கவலையில் இருந்தாள். அதனால் சீத்தாவை தன்னைக் காயப்படுத்திக் கொண்டார்கள் இங்கு குறிப்பிட வேண்டியது இராவணன் எதுவும் சித்திரவதையா கொடுமைப்படுத்தவோ இல்லை.

போர் வருகின்றது இராமன் சண்டைக்கு வருகின்றான். இராவணனுக்குத் தெரியும் மொத்த அரசாட்சியும் அழிந்து போகும் என்று அப்பொழுதும் இப்படித் தான் இருக்கு என்று எழுதியிருந்தார். அப்படியே நடக்கக்கூடும் நாம் எதுவுமே மாற்றப்போறது இல்லை என்று சொல்லி வீரமரணம் அடைவதற்கு முன்னர் என்ன என்ன விடயங்கள் எனக்கு தரப்படும். இராமன் கடவுளின் அவதாரம் இராவணன் சாதாரண மனிதனாக இருந்தான் இராவணனோட அரசாட்சியை அழிப்பதற்கு கடவுளுக்கு கூட 13 நாளாச்சு யோசித்தும் பாருங்கள் அது எவ்வளவு பெரிய விடயம் என்பதை 13நாள் போர் நடைபெறுகின்றது. இந்திரஜித் என்பவர் இராமாயணத்தில் மிகப்பெரிய கதாபாத்திரம் இந்திரஜித் என்பவர் இராவணனின் - ஒரு மகன் இராவணனின் மகனை இராமனாலோ இலக்குமணலோ அவனை எதிர்கொள்ளமுடியவில்லை. இந்திரஜித் தொகுத்த நாகத்தின் விசம்கொண்ட

அம்பினால் எய்து இராமனும், இலக்குமணனும் மயக்கமுற்று விழுகின்றார்கள். அவர்களால் கூட இந்திஜித்தை எதிர்கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்படுகின்றது. பின்னர் அனுமான் மிகப்பெரிய மலையைத் தூக்கிவந்து அச்சுவினி மூலிகை கொடுத்து எழுப்பின வரலாறும் இருக்கு ஆஞ்சநேயர் அவ்வளவு பெரிய சக்தி வாய்ந்தவர். சீத்தாவைப் பார்க்க வரும் போது இந்திரஜித் இலகுவாகப் பிடித்துவிடுகின்றான். இராமனின் மொத்த படையை இந்திரனையே வெற்றிபெற்ற இந்திரயித்தால் முன்னெடுக்க முடியும் எண்டால் இந்திரஜித் எவ்வளவு பெரிய ஆளா இருந்திருப்பார் எண்டு நாம் யோசித்ததண்டா இப்படி இரண்டு தடவை தோற்கடிக்கப்பட்ட இலக்குவனும் இராமனும் ஒரு தடவை சாகின்ற நிலமைக்குச் சென்று உயிரோட வந்தவரும் இந்திரஜித் போருக்கு சென்று 3வது நாளும் போரின் கணக்கின்படி 5வது நாளும் இந்திரஜித் நியாயமே இல்லை எண்டு சொல்லி சிவனிடம் பிரார்த்தணை செய்ய சிவன் கோயிலுக்குச் செல்கின்றான். அப்போது இராவணன் பக்கமிருந்து இராமன் பக்கம் சென்ற விபிசணனின் உளவாளிகள் மூலம் அறிந்து இராமனிடம் இந்திரஜித் தனியா எதுவித ஆயுதமும் இல்லாமல் சென்றிருக்கின்றான் இப்பொழுது இலகுவாக மோதிக்கொள்ளலாம் எண்டு சொல்கின்றார்கள். யாருக்கும் தெரியாமல் யாரிடமும் சொல்லாமல் மறைமுகமாக இந்திரஜித் ஆகிய மேகனாதனை இலக்குவன் பிரமாஸ்திரத்தை வச்சு தாக்குகின்றான். அப்பொழுது திரும்ப கேட்கின்றான் உனக்கு வெட்கமாக இல்லையா? எந்தவொரு ஆயுதமும் இல்லாமல் போருக்கு தயாராகாமல் பக்தியில் இருக்கும் போது என்னைத் தாக்குகிறாயே என்று கேட்கிறான். இலக்குமணன் ஒரு நொடி தயங்கினாலும் தர்மத்தை நிலைநாட்ட வேண்டிய காரணத்தால் கடவுளுக்கும் மனிதனுக்கும் இருக்கிற இன்னொருத்தனின் மனைவி இலங்கையில் இருக்கிறாள் எண்ட காரணத்தினால் இதுதான் நியாயம், இது தான் தர்மம் எண்டு சமாதானமாக சொல்கிறான்.

இராவணனுக்கு *10* தலை கொடிய ஆட்கள் அவர்கள் கெட்டவர்கள் மாயதந்திரம் கொண்டவர்கள் எண்டு பல கதைகள் கூறுவார்கள். ஆனால் சிறிய விடயம் என்ன என்றால் kistory is written by the victor என்று ஆங்கிலாத்தில் சொல்லுவார்கள். அதாவது வரலாறு என்பது யார் வெற்றி பெறுகின்றார்களோ அவர்களை எழுதுவது தான், தோற்பவர்களின் நியாயங்கள் தர்மங்கள் வரலாற்றில் எழுதுவதில்லை நான் இவ்வளவு நேரமும் தோற்றும் பகைவர்களின் கதை வெற்றி பெற்றவர்கள் ஒரு நினையில் கதையில் தோற்றுப் பகைவர்களின் நியாயங்களை தர்மங்களை உண்மைத் தன்மைகளைப் சொல்லி வருகின்றேன். அப்பவே நீங்கள் யோசிக்க வேண்டியிருக்கிறது. இது ஒரு அண்ணன் தங்கை கதை இந்த அண்ணன் தங்கை கதையில் சிந்தையைத் ஒதுக்கிவைத்து மொத்த நாடுகளிலே போர்

தொடுத்தது யார் என்று பார்த்தால் இராமன் அதேமாதிரி இராவணன் நினைத்து மொத்த இலங்கைப்படையையும் ஒன்றுதிரட்டி அயோத்தி மீது படை எடுத்திருந்தல். அயோத்தி எதிர்கொள்ள முடியாது. ஏன் எண்டால் இலங்கை அவ்வளவு பலம் பொருந்திய நாடாக இருந்தது. அந்தக் காலத்தில் பதிலுக்கு நாடும் மீதும் நாட்டு மன்னன் மீதும் போர் தொகுக்க தனிப்பட்ட ரீதியில் தான் போர் தொடுத்தார்கள். மொத்த நாட்டை போர் தொடுத்தது தனது மனைவியை சிறைபிடித்த ஒரு தனிப்பட்ட விடயத்திற்காக மொத்த நாடும் அழியவேண்டும் மொத்த போர்படையும் அழியவேண்டும் என்று நினைத்தது இராமன். அதனால் கடவுளாக இருந்தாலும் நல்லது மட்டும் பண்ணமுடியாது என்பது தான் இராம அவதாரத்தில் அடிப்படை அர்த்தமும் அது தான். கடவளாக இருந்தாலும் நல்லது பண்றவங்களும் கெட்டது பண்றவங்களும் இருப்பார்கள். முடிஞ்சவரை நாம நல்லது பக்கம் போக வேண்டும் என்பது தான் மையக்கருத்து. இராவணனின் பக்கம் இருந்தது நான் செய்யுறது தப்பு பாசத்துக்காக ஏங்குகின்ற தங்கைக்காக செய்த விடயம் தான் இராமாயணம். இராவணன் பக்கம் இருந்து பார்த்தா இராவணன் செய்தது எல்லாம் சரி என்று தோன்றும். இராமன் பக்கம் இருந்து பாத்தா இராமன் செய்தது எல்லாமே சரி எண்டு தான் தோன்றும் நீங்கள் யார் பக்கம் இருக்கின்றீர்கள் என்பத தான் கருத்து. இதில யாரு நல்லவன் யாரு கெட்டவன் என்பதை நான் கேட்கின்றேன். அதை நீங்கள் தான் முடிவு செய்யவேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முடிவுகள் சிந்தனைகள் முரண்கள் இருக்கும். நீங்கள் முடிவு செய்யுங்கள் யார் நல்லவன் யார் கெட்டவன் உண்மையிலேயே இவர்கள் இருவருக்கும் இடையில் இல்லை வித்தியாசமான உண்மைகள் இருக்கா இரண்டு பக்கமும் இருக்கின்றனவா? இல்லை இரண்டு பேரும் நல்லவர்களா? கெட்டவர்களை என்பதை நீங்களே அவரவரக்கு ஏற்றவாறு முடிவு செய்யுங்கள் இந்த தலைப்பு எடுத்து இராவணனின் பக்கங்களைத் தெளிவாகக் விரிவுரைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இராமன் ஆரியராகவும் ராவணன் திராவிடராகவும் சித்தரித்துவிட்டது இந்த உலகம் திராவிடர் கோர எண்ணங்கள் அரக்க குணம் கொண்டவன் என்று சித்தரித்து சிறுபிள்ளைகளில் இருந்து நம் இனத்தை நாமே இழிவுபடுத்திக் கொண்டிருக்கின்றோம். அதை நாம் மாற்றி அமைக்க எண்ணிய எனது இச் சிறு ஆக்கம்.

நன்றி

கௌரி

# எங்கே போகிறது இளைஞர் சமுதாயம்

நவீன கண்டுபிடிப்புக்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் இளையோர் சமூகமானது தடுமாறுகின்ற நிலையை படிப்படியாக அடைந்து கொண்டிருக்கின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் இளையோர்கள் மத்தியில் பல்வேறு வடிவங்களில் அவர்களின் வாழ்க்கையிலும், பண்பாட்டிலும் ஆழவேரூன்றி விட்டன. இளைஞர் சமுதாயத்தின் நன்மையோ தீமையோ எதுவாயினும் அது விஞ்ஞானத்தின் சட்டகத்திலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றது என்பது வெளிப்படையான உண்மை.

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதன் காலம் செல்லச் தன் அறிவு பொருளாதார, சூழல் விருத்திகளால் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளத் தொடங்கினான். எல்லாவற்றிற்கும் காரணம் இயற்கையே என்று இயற்கையிலிருந்து விடுபடாமல் வாழ்ந்த காலம் போய் எதற்கும் ஒரு காரண காரியத்தொடர்பு உள்ளது என்ற அறிவுணர்ச்சி மனிதனிடத்தில் உதயமானது. ஏன்? எதற்கு? எப்படி? என்று கேள்விகளுக்கு விடைதேட அவன் முயன்றான். முயற்சி வெற்றியளித்து விஞ்ஞானம் தோற்றம் பெறலானது.

நன்மையான காரணம் காட்டி கண்டுபிடிக்கப்பட்ட நவீன விஞ்ஞானமானது இளைஞர் மத்தியில் தீமையான காரணம் காட்டியே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நவீன உலகின் தொடர்பாடல் வளர்ச்சியினாலும், ஆளிடைத் தொடர்புகளாலும் இளைஞர் சமுதாயம் தவறான பாதையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது. நாளைய உலகம் தங்கள் கையில் என்பதை மறந்து தடுமாறுகின்றவர்களாக தமது தார்மீகக் கடமைகள், பொறுப்புக்களை உதறியவர்களாகவும் கால் போன போக்கிலே நடக்கின்றார்கள்.

இளமை என்பது இறைவன் எமக்களித்த மாபெரும் சக்தி, இளமைக்காலம் விதைக்கும் காலம் கவிஞர் கண்ணதாசன் கற்பூரப் பருவம் என்று கூறுகின்றார். இந்த இளமைக் காலத்தில் எதுவும் பற்றிக் கொள்ளும், இந்தக் காலத்தில் இளைஞர்கள் எதை விதைக்கிறார்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள், எதை அடைய பாடுபடுகிறார்கள் என்பதை அறிவது முக்கிய விடயமாகும். ஏனென்றால் அதைப் பொறுத்தே அவர்களின் எதிர்காலம் மாறுகின்றது. சிறந்த சிந்தனை கொண்ட இளைஞர் சமுதாயத்தினால் தான் உலகத்தை வெல்ல முடியும். இன்றைய உலகில்

காணப்படும் வல்லரசுகள் எல்லாம் இளைஞர் சக்திகளாலே உருவாக்கப்பட்டன. ஆ ஆட்சி அமைப்பும் ஆட்சித் கவிழ்வும் போராட்ட உணர்வுகளும் இளமை என்னும் உண்ணத சக்தியாலே உருப்பெற்றது.

நம் முன்னோர் கல்வியை தகவல் சேர்க்கும் சாதனமாக நினைக்கவில்லை. மாறாக ஒரு மனிதன் கற்பது இன்னொரு முறை பிறப்பது போல் புதுப்பிறவி பிறப்பது போன்று மேன்மையாக நினைத்தார்கள். கல்வி கற்பவனை மேம்படுத்தி மற்றவனையும் மேம்படுத்த பயன்பட வேண்டும். அவ்வாறு கல்வி கற்கும் இளையோர்களே வரலாறு படைக்கும் நாளைய தலைவர்களாக பரிநமிக்க முடியும். இளமைக் காலத்தில் தோல்விகளும், தோல்வியை ஒட்டிய சாதனைகளும் முதல் படிகளாக அமைகின்றது. எதையும் கற்றுத் தேர வேண்டும் என்ற ஆவலும், அவாவும் புதிய கண்டுபிடிப்புக்களையும், தேடல்களையும் விரைந்து தேடவேண்டும் என்ற வேட்கையும் வாலிப பராயத்திலே மிகுதியாக ஊக்கம் பெறுகின்றது. எந்த அறிவும் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்றால் அது நன்மை எது தீமை என்ற சிந்தனையை ஆழமாக அறிய வேண்டும். இல்லாவிட்டால் அழிவே விளையும் என்பதற்கு இக் காலத்தில் ஏராளமான உதாரணங்கள் உள்ளன.

மனித குலம் மேம்பட பயன்படுத்தப்பட்ட கல்வி முறைமாறி இன்று கல்வி வேலைவாய்ப்பு சாதனமாக மட்டுமே மாறிவிட்டது. ஏராளமான தகவல்களை மாணவர்களுக்குள்ளே திணிக்கின்றதே ஒளிய அவர்களுடைய பண்புகளை வளர்க்க அலச்சியமே காட்டப்படுகின்றது. அக்கால கல்வி முறையில் நீதிக் கதைகள் சான்றோர் பற்றி பெரியவர்களின் வாழ்க்கை வரலாறெல்லாம் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டது. இன்று அது போன்ற கால வகுப்புக்கள் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இன்றைய இளைஞர்கள் மிக திறமைசாலிகள் இலகுவாக புரிந்து கொள்ளும் திறனை படைத்தவர்கள். புதிய விடயங்களை கற்றுக்கொள்ளும் ஆர்வம் கொண்டவர்கள், புரியாததை புரியவில்லை என்று தயங்காமல் சொல்லக் கூடியவர்கள். கல்வியில் அதிக முன்னேறி உள்ளார்கள். கணனித் தொழிநுட்பத்தில் கைகோர்த்து விட்டதால் உலகில் பல்வேறு நாடுகளில் பணி செய்கிறார்கள். மாறுபட்ட சூழலில் வாழ்வது சிரமமாக நினைப்பதில்லை. பழகிக் கொள்ளுகிறார்கள். அவர்களது திறமைகள் கடின உழைப்பிற்கும் தயாராக உள்ளார்கள் ஆண்களும், பெண்களும் சரிசமமாக உள்ளார்கள். இவ்வாறான நல்ல திறமைகளைக் கொண்டிருந்தாலும் இவர்களின் தட்டம் புரழ்வான பண்புகள் சமூகத்தில் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது.

அதிக புகைப் பழக்கமும் போதைப் பழக்கமும், தொலைபேசி மோகமும், அளவுக்கு மீறிய இணையத் தளப் பயன்பாடு, உடல் ஆரோக்கியம் பற்றிய

அறிவின்மை, கேலிக்கைகளும் அதிகரித்த அதிக நண்பர் கூட்டமும் விளையாட்டு குழுக்களும் இல்லை. விளையாட்டுப் போட்டிகளும் இல்லை. சுயநலமும் ஆங்காரமும் பெரியவரை மதிக்காத தான்தோன்றிச் குணங்களும் தினமும் இவர்கள் தொடர்கதையாகி விட்டது.

இன்றைய நவீன யுத்தத்தில் தொழில்நுட்ப வளர்ச்சிகள் உச்ச நிலையை எட்டியிருக்கும் இளையோர் சமூகம் ஒழுக்கமும், பண்பாடு ஆகிய விடங்களில் மிகமிக பின்தங்கிய நிலையிலேயே உள்ளார்கள். நமது தொழில்நுட்ப வளர்ச்சி இளையோர்களுக்கு ஒழுக்கமான பண்பாட்டை கற்றுத் தரவில்லை. மாறாக குறுகிய மனப்பான்மை, அவசரத்தன்மை, அதிவேக வளர்ச்சி, விரோதம், இரக்கமற்றதன்மை ஆகியவற்றையே வளர்த்திருக்கிறது. இதனால் தான் தன் தேவைக்காக வெறுக்கவும் வேரறுக்கவும் பழகிவிட்டார்கள். வேர்களை வெறுக்கும் விழுதுகளாய் பெற்றோரை மதிக்காத தன்மையும் தமக்கு அறிவுரை கூறுவொரை விரும்பாத நிலையும் அதனால் அவர்களை துன்புறுத்தவும் கொலை செய்யவும் துணிகிறார்கள்.

விதம் விதமான போதைப் பொருட்களுக்கு தம்மை அடிமையாக்கி இதனால் ஏற்படும் உடல் நலக் கேடு ஒருபுறம் அதைவிட கொடூரமாக போதை ஏற்படுத்தும் மனநலக் கோளாறுகளால் பெண்களை துஷ்பிரயோகம் செய்யவும் கிண்டல் செய்து கலாட்டா செய்வதும் பெருகி வருகின்றது. சுதந்திரம் என்ற பெயரில் பொது இடங்களில் அவமரியாதையாக நடந்து கொள்வது இன்றைய இளைய தலைமுறை நமக்கு காண்பிக்கும் செயல்களாக தினம் நிகழ்கின்றது. எதையும் பணத்தால் சாதிக்கலாம், எதையும் குறுக்கு வழியில் அடையலாம் என்ற குறுகிய மனப்பான்மை நம் இளையோர் மனதில் தோற்றம் பெற்றுள்ளது.


இவ்வாறான இவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் எதிர்காலத்தில் சிறந்த கட்டமைப்பு இல்லாமல் போய்விடும் என்ற ஐயப்பாடே எம்முள் எழுகின்றது. இளையோர் பொறுப்புணர்வு மிகுந்தோராக தங்களை மாற்றிக் கொள்ளவேண்டும். பொறுமை, சகிப்புத் தன்மை, சிந்தித்துச் செயற்படுதல் போன்ற ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். இளமையின் வேகத்தில் தவறு செய்ய மனம் தூண்டும் போது அதை கட்டுப்படுத்த பழகிக் கொள்ள வேண்டும். இன்றைய இளைஞர்கள் பலவீனமாக இருப்பதற்கு முக்கிய காரணம் அவர்களுக்கு நம்பிக்கையின்மையே நன்கு படித்து நல்ல பெறுபேற்றை பெற்றிருப்பினும் வாழ்க்கைச் சிக்கலுக்கு தீர்வுகாண முடியாமல் திணறுகிறார்கள். சிலர் உயிரையும் மாய்த்துக் கொள்கின்றார்கள். இவ்வாறான போக்கு தொடருமானால் நமது நாட்டின்

இளைஞர்களின் இருப்பு நிலை கேள்விக்குறி ஆகலாம். எனவே இன்றைய இளைஞர்களை பண்படுத்தும் வேலையை சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் பொறுப்பேற்று அவர்களது வாழ்வை வளப்படுத்த வேண்டும். இதன் மூலம் தான் நாளைய உலகின் தலைவர்களை உருவாக்க முடியும். இளைஞர் சமுதாயத்திடம் நல்ல விதைகளை விதைக்க முனைந்தால் இதன் அறுவடையாக இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவராக வரலாற்றில் மேன்மையான முறையில் சொல்ல முடியும்.


கு.டிலோசனா

A/L கலைப்பிரிவு 2019

யா/இளவாலைக் கன்னியர் மடம்

# மது போதையற்ற கிராமத்தை உருவாக்குவோம்

மனித சமூதாயம் இன்று இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி பதித்து வெற்றி நடைபோட்டு வருகின்றது. ஆயினும் இந்த வெற்றிநடைக்கு தடங்கலாக போதைப் பொருள் பாவனை தலை தூக்கி நிற்கின்றது. எனவே மனித சமூகத்திற்கு அச்சுறுத்தலாக உள்ள போதைப்பொருள் என்றால் என்ன? அதன் வகைப்பாடுகள் எவை? அது எவ்வாறு சமுதாயத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது? அதனை அழித்தொழிக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை? என்பன தொடர்பாக இந்தக் கட்டுரை விளக்குகின்றது.

அந்த வகையில் போதைப்பொருள் என்பது சாதாரணமாக இருக்கும் மனிதனின் சுய நினைவை இழக்க செய்து அவனை ஓர் அசாதாரணமான நிலைக்கு இட்டுச்செல்வதற்குப் பயன்படும் ஒரு தாக்கு வன்மையுள்ள பொருளே போதைப்பொருள் ஆகும். இந்த போதைப்பொருள் இரண்டு வகையாக நோக்கப்படுகின்றது. அதாவது மென் போதைப் பொருள், வன் போதைப் பொருள் என்பனவாகும். மென் போதைப் பொருளாக தேநீர், கோப்பி, பாக்கு, புகையிலை, மென்பானங்கள் போன்றவற்றையும் வன்போதைப் பொருளாக மதுசாரம், சிகரெட், கஞ்சா, கசிப்பு, மாவா, அபின், ஹெரோயின், கொக்கோயின் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

மனிதனைக் கூடுதலான அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வது போதைப்பொருள் பாவனையே என்பதை இக் கட்டுரை ஆராய்கின்றது. போதைப் பொருள் பாவனை மனித சமுதாயத்திற்கு எவ்வாறு அச்சுறுத்தலாக உள்ளது எனப் பார்ப்போம். இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலே போதைப் பொருள் பாவனையை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்று அண்மையில் உலக சுகாதார நிறுவனம் அதிர்ச்சி தகவலை வெளியிட்டு உள்ளது. மனித சமுதாயம் ஆரோக்கியமானதாக இருக்கவேண்டுமெனில் சுய நினைவு தமக்கே உரித்தான பண்பாடு, நோயற்ற வாழ்வு, நீடித்த மகிழ்வான வாழ்வு போன்றவற்றை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் இவற்றை மழுங்கடித்து ஓர் ஆரோக்கியமற்ற மனித சமுதாயத்தை போதைப்பொருள் வர்க்கம் உருவாக்கியுள்ளது. மேலும் போதைப் பொருள் பாவனைக்கு உள்ளானவர்கள் பல உயிர் கொல்லும் மோசமான நோய்களை விலைக்கு வாங்குவதோடு, சிலர் வீதி விபத்துக்குள்ளாகி அங்கவீனர்களாகி

மரணப்படுக்கையில் ஆழ்த்தப்படுகின்றனர். இதனால் குறிப்பிட்ட நபர் மட்டுமல்ல அவர் சார்ந்த குடும்பமும் பெரிய தாக்கங்களை எதிர்கொள்கின்றது. ஒழுக்கத்தின் பிறப்பிடமான யாழ்ப்பாணம் தற்போது . போதையின் உறைவிடமாகத் தன்னை அடையாளப்படுத்தி வருகின்றது.

இன அழிப்பை முன்னெடுக்கின்ற நெறிப்படுத்துகின்ற ஒரு பகுதியினரால் சமூகத்துரோகிகள் உருவாக்கம் அடைந்து விட்டனர். எங்கும் போதை நாட்டில் பாலியல் வன்புணர்வுகள் பரவலாக இடம் பெறுகின்றன. இலங்கையில் 17.000 பேர் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என்கின்ற செய்தி எம் நாட்டுக்கு அறைகூவலாக விடப்பட்டுள்ளது. பத்திரிகைகள், இணையத்தளங்களின் முக்கிய தவறான செய்திகளாக போதை தொடர்பான செய்திகள் உள்ளன. சேதமாக்கப்பட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் அதியுச்ச தண்டனை பெற்றனர்.

இன்று நடப்பது என்ன? உயிர் கொல்லியான போதைப்பொருள்கள் பல்வேறு நிலையங்களில் பற்பல வடிவங்களில் குடா நாட்டுக்குள் நடத்தப்படுகின்றன. ஆரோக்கியமான ஒரு சமூகம் போதையால் சீரழிக்கப்படுகின்றது. சமுதாயத்தை அழித்தொழிக்க முன்வரும் இவர்கள் இருட்டறைக்குள் சாகும் வரை வாழ வேண்டும். அண்மைக் காலமாக எம் சமுதாயத்தில் புகுந்த போதைப்பொருள்களால் எண்ணுக்கடங்காத குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்துள்ளன. அப்பாவிச்சிறுமிகள், பெண் பிள்ளைகள் என பலரது வாழ்க்கை முறைகள் கேள்விக் குறியாகியுள்ளன. பெண்கள் விதவைகள் ஆகியுள்ளார்கள்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் நோய்வாய்ப்பட்டதும், நடைப்பிணங்களானதும் கூட உண்டு. இதைவிட எச்.ஐ.வி தொற்றுக்கும் ஆளாகியுள்ளனர். எது எவ்வாறு எனினும் சமுதாயத்தை கூறுபோட்டு வாழ்வது மானிட மாண்பு அல்ல. போதைப்பொருள் கடத்தல் நீண்ட நாள் நிலைக்காது. அநியாயமாய்த் தேடுகின்ற சொற்ப வருமானம் உத்தமம் என்கிறது. விவிலியம், கஞ்சா என்றவுடன் இந்தியாவின் தென் மாநிலங்களில் ஒன்றான கேரளாவின் நினைவு தான் மனதில் சட்டென எழுகின்றது. வேதனைக்கும் பரிதாபத்திற்கும் உரிய விடயம் என்னவென்றால் இப் போதைப் பொருள் பற்றி அறிந்திராத அப்பாவி மக்களில் பலர் உள்ளனர்.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்ற பழமொழி ஊடாக கூற விளைவது போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபட்டு நல்லதொரு கிராமத்தை உருவாக்க வேண்டும். மது போதையற்ற கிராமத்தை உருவாக்குவதற்கென புனர்வாழ்வு சிகிச்சை மையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம்

போதைக்கு அதிகம் அடிமையாகியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இந்தச் சிகிச்சை மையம் ஒரு வரப்பிரசாதம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எனவே மனிதன் மனிதனாக வாழ்ந்து போதையற்ற கிராமத்தை உருவாக்குவோமாக!

**சமூகத் துரோகிகளே! ஒரு தடவை சிந்தியுங்கள்!**

**மது போதையற்ற கிராமத்தை உருவாக்க**


பாலசுப்பிரமணியம் தர்சா
யா/இளவாலைக் கன்னியர் மடம்
மகா வித்தியாலயம்
A/L(2019)




# கற்பகத்தரு

புராணங்களில் வேண்டுபவர்களுக்கு வேண்டி எல்லாம் கொடுக்கின்ற ஒரு தேவலோகத்து மரம் தான் கற்பகத்தரு. தேவலோகத்து கற்பகத்தரு போல பூவுலகத்திற்கு கற்பகத்தருவாக அழைக்கப்படுவது "பனைமரம்" ஆகும். நுனியிலிருந்து நிலத்தின் கீழுள்ள வேர் வரையிலும் முளையிட ஆரம்பித்ததிலிருந்து வெட்டி வீழ்த்தப்பட்ட பின்னரும் நெடுங்காலத்துக்கு பயன் தருவதால் பனைமரத்தை கற்பகத் தரு என முன்னோர்கள் அழைத்தனர்.

பனை மரத்தின் தாவரவியல்ப் பெயர் " பொராசஸ் பிலபெலிபேரா" என்பதாகும். பனைகள் பொதுவாகப் பயிரிடுவதில்லை. இயற்கையிலேயே தானாகவே வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்தப் பனை மரங்கள் எதுவுமின்றி வளரக் கூடியவை. ஒரு காலத்தில் இப்போது அதன் பயன்பாடு குறைந்துவிட்டது.

அரசும், மக்களும் பனை மரங்களிலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்களை முறையாக சந்தைப்படுத்தாததால் முக்கியத்தவம் குறைந்து விட்டது. ஆசிய நாடுகளில் தான் பனைமரம் அதிகம் காணப்படுகின்றது. இலங்கையிலிருந்து பதனீர், கள் போன்றவை பதப்படுத்தப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு கோடிக்கணக்கான வருவாய் கிடைத்திருக்கிறது.

கற்பகத்தரு என அழைக்கப்படும் பனைமரத்திலிருந்து பல வளங்களை நாம் பெறலாம். உதாரணமாக ஓலையை எடுத்தோமானால் ஓலைப்பாய், தொப்பி, நீத்துப்பெட்டி, சுளகு, கடகம், பெட்டி, விசிறி, அழகு சாதனப் பொருட்கள் போன்று பல்வேறு பொருட்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் பார்த்தோமானால் பல தரை அலங்காரிப்பையும் மேற்கொள்ள முடியும். பனை மரமானது தான் பிறந்ததிலிருந்து தான் இறந்த பின்பும் பயனை அள்ளித் தருகின்ற ஒரு கொடையாளியாக விளங்குகின்றது. மாணவர்களாகிய நாம் பனைமரத்திற்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வகையில் பாதுகாத்து பயன் பல பெறுவோம்.

# விஞ்ஞானத்தின் விந்தை

நாம் இன்று விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். விஞ்ஞானம் பல்லாயிரக் கணக்கான அதிசயங்களை தினந்தோறும் படைத்துக் கொண்டே இருக்கிறது. அவற்றில் சில நாம் வாழ் நாளில் காணாதவையாகவும் ஆச்சரியம் மிக்கனவாகவும் அமைகின்றன. அவை மனித சமுதாயத்திற்கு பயன் தர வேண்டும் என்னும் நன்நோக்குடன் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகள் கண்டு பிடிக்கப்பட்டவைகளாக இருந்தாலும் ஒரு சில தீய விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளன என்று கூறலாம்.

அறிவியல், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் பற் - பலவாயினும் அவற்றுள் குறிப்பிடத் தக்கவைகளுள் முதனிலை பெறுவது மின்சாரக் கண்டுபிடிப்புகளாகும். தோமஸ் அல்வா எடிசனின் அயராத உழைப்பின் பேறாக கண்டறியப் பெற்ற மின்சாரம் இன்று உலகனைத்துக்கும் பயன் தருகிறது. மின்சாரம் இன்றி இன்றைய உலகு இல்லை என்ற நிலை உருவாகி விட்டது. உலகில் தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் தகவல் தொடர்பு வளர்ச்சிக்கும் மின்சாரம் பெரிதும் பயன்படுகிறது. பல வியத்தகு சாதனைகளை இயக்கி இவ் உலகை இயந்திர உலகாக்கி வருவதில் மின்சாரத்தின் பங்கு அளவிடற்கரியதாகி விட்டது என்றால் மிகையல்ல.

"பறவையைக்கண்டான் விமானம் படைத்தான்"

என்று பாடினார் ஒரு கவிஞன். பறவை பறக்கின்றது அதைப் பார்த்த மனிதன் சிந்தித்தான். நம்மால் பறக்க முடியாதா? என்று சிந்தித்தான். அவன் சிந்தனை பயனளித்தது. அதன் பேறாக கண்டு பிடிக்கப்பட்டதே விமானம் ஆகும். ரைட் சகோதரர்கள் விமானத்தை கண்டுபிடித்த பின்னர் அதன் பயன் அதிகரித்துவிட்டது. சில நொடிகளில் பல்லாயிரக் கணக்கான கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ள இடங்களுக்கு சென்று வர விமானம் இன்று பயன்படுகிறது.

மருத்துவத் துறையில் விஞ்ஞானம் அரிய சாதனைகளை நிலைநாட்டி உள்ளது. புற்றுநோய் சிகிச்சை , இதய மாற்று சிகிச்சை, போன்றவற்றை இதற்கு எடுத்துக் காட்டாக கூறலாம். விஞ்ஞான கண்டுபிடிப்புகள் யாவும் மனித சமுதாயத்திற்கு பயன் தரும் நோக்குடனேயே உருவாக்கப்பட்டுள்ளன. அவை தொழில் துறைகளில் மட்டுமன்றி விவசாயத்துறை வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணை புரிகின்றன.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மனித சமுதாயத்திற்கு பல நன்மைகளை

அளிப்பதோடு சில தீய விளைவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. உலகின் முன்னேற்றத்திற்கு உதவிடும் நோக்குடன் கண்டு பிடிக்கப்பட்டதே அணுச் சக்தி விஞ்ஞானத்தின் மகத்தான கண்டுபிடிப்பாக கருதப்பட்டது. ஆனால் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது அமெரிக்கா ஜப்பான் மீது வீசிய நாசகார அணுகுண்டானது அணுச் சக்தி அழிவு வேலைக்கு பயன்பட்டமைக்கு சான்றாக அமைகின்றது. இதனைப் போன்று மேலும் பல அழிவுக் கருவிகள் உலகை அச்சுறுத்தும் வகையில் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

நோய்க் கிருமிகளை அழிக்க, நோய்களைப் போக்க , மருந்து வகைகளை கண்டுபிடித்த விஞ்ஞானமானது இன்று நோய்களை உண்டாக்கும் கிருமிகளை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. அரிய உயிர்களைப் பறிக்க உதவிடும் அழிவு சாதனங்களை உருவாக்குகின்றது. இத்தகைய அபாய நிலை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். ஆபத்தான ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நிலை நீங்க வேண்டும். விஞ்ஞானத்தை விஞ்ஞான உலகிலேயே பயன் மிக்கனவாகவும், நன்மையையே விளைவிக்க கூடியதுமாக ஆக்க வழிகளிலே பயன்படுத்த முன் வர வேண்டும்.

சுருங்கக் கூறின் விஞ்ஞானத்தின் விந்தைகள் அநேகம். அவற்றின் பயன்கள் அளவிடற்கரியன. அவற்றை மனித சமுதாயம் பயன் பெறும் வகையில் நாம் பயன்படுத்த வேண்டும் . அழிவு வேலைகளுக்கு அவற்றை பயன்படுத்துவதை தவிர்த்திடல் வேண்டும். ஆக்கப் பாதையிலே விஞ்ஞானம் வளர்க்கப்பட வேண்டும். அதன் மூலம் உலக சமுதாயம் ஒன்றுபட்டு முன்னேறிட வழி பிறக்கும்.

விஞ்ஞானத்தை வளர்ப்போம்
விஞ்ஞானிகளாக மாறுவோம்.

ம. அனற்டிலகஸ்சனா
தரம் -

# தடுமாறுகின்ற இளைஞர் சமுதாயம்

இன்றைய நவீன உலகிலேயே உலக நாடுகள் முழுவதிலும் தடுமாறுகின்ற இளைஞர் சமுதாயத்தினை அதிகளவாக காணக் கூடியதாக உள்ளது. அதாவது தடுமாறுகின்ற இளைஞர் என்று நாம் கருதுவது யாதெனில் இன்று இவ்வுலகில் காணுனின்ற இளைஞர், யுவதிகள் மத்தியில் நாங்கள் என்ன செய்கின்றோம். மாறாக அக் காரியத்தை ஒரு செயலை செய்வதற்கு முன் அவ் விடயத்தினால் ஏற்படவுள்ள நன்மை, தீமைகளை யோசிக்காமல் அக் காரியத்தை செயற்படுத்துவது இத்தகைய ஒரு பெரிய தடுமாற்றத்தை இன்றைய இளைஞர் சமுதாயம் கொண்டுள்ளது.

அதாவது இளைஞர் சமுதாயத்தின் தடுமாற்றங்களாக நாம் பின்வருவனவற்றை நோக்க கூடியதாய் உள்ளது. அவை என்னவெனில் ஒரு இளைஞனோ அல்லது யுவதியோ முதல் அவர்கள் பெற்றோர் சொற்படி நடப்பதில்லை. மாறாக அவர்கள் பெற்றோரால் தண்டிக்கப்படுபவராக இருப்பின் அந்த இளைஞன் அல்லது யுவதி தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதை இன்றைய நம் சூழலிலும் காணக் கூடிய ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. மேலும் அவர்களது பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு பயப்படக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

இவற்றுக்கெல்லாம் காரணமாக அமைவது இன்றைய நவீன சாதன தொடர்பாடல் மூலகங்களாகும் . அவற்றிலும் முக்கியமானது கையடக்கத் தொலைபேசி ஆகும். அதாவது அக் கையடக்கத் தொலைபேசியில் காணப்படும் சமூக வலைத் தளங்களின் செல்வாக்கு அவற்றிலும் முகப்புத்தகம் எனும் சமூக வலைத் தளத்தில் முறையற்ற தொடர்பாடல், முறையற்ற அதாவது முகம் தெரியாத நபருடன் தொடர்பாடலை மேற்கொள்ளல் இதனால் அவர்களுக்கிடையே ஒரு முறையற்ற உறவினால் அவர்களின் வாழ்வில் பல இன்னல்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அதுமட்டுமல்ல அவற்றின் காரணமாக பலர் தற்கொலை செய்து கொண்டுள்ளமையினையும் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

மேலும் ஏனைய தொடர்பாடல் சாதனங்களின் ஆதிக்கமும் காணப்படுகின்றது. அதன் மூலம் அறியாத நபருடன் தொடர்பாடலை கொள்கின்றனர். அதன் மூலம் அவர்களுடய புகைப்படங்களை தெரியாதவருக்கு

அனுப்புவதன் மூலம் அப் புகைப்படத்தினை இணையத் தளங்களில் அவ் தெரியாத நபரினால் போடப்பட்டு இவற்றின் மூலமும் பல இளைஞர்கள் அல்லது யுவதிகளின் நிலையில் பாதிப்பை ஏற்படுத்தி தற்கொலையினை இறுதி முடிவாகக் கொண்டு இருக்கின்ற நிலையும் இவ் நவீன உலகிலே தான் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் அவமானம் காரணமாக குடும்பத்தோடு தற்கொலையில் ஈடுபடுகின்றமையும் எம்மால் காண முடிகிக்றது.

சில யுவதிகளின் வாழ்க்கை சீரழிக்கப்பட்டு சுயநினைவு இல்லாத ஒரு மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகவும் சில பிரதேசங்களில் காணப்படுகின்றனர். இவ்வாறான நிலைமைக்கு எல்லாம் காரணமாக அமைவது இந்த சமூக வலைத்தளங்களே ஆகும். "தவளை தன் வாயால் கெடும்" என்ற பழமொழிக்கு உதாரணமாக காணப்படுவது என்னவெனில் இவ் நவீன உலகில் குறிப்பாக இலங்கையில் அதிலும் குறிப்பான பிரதேசமாக நாம் வாழுகின்ற யாழ்ப்பாணத்தையே குறிப்பிட்டு கொள்ளலாம். அதிகளவான யுவதிகள் பாதிக்கப்படுகின்ற இடமாகவும் பெண்கள் தற்கொலைக்கு முதலிடமாகவும் யாழ்ப்பாணம் காணப்படுகின்றது.

முன்னைய காலத்தில் யாழ்ப்பாணம் என்றால் கலாசாரம் என்ற சொல்லிற்கு உதாரணமாக இருப்பது நம்ம யாழ்ப்பாணமே ஆனால் தற்போது தடுமாறுகின்ற இளைஞர் சமுதாயத்திற்கு உதாரணமாக இருப்பதும் நம்ம யாழ்ப்பாணமே. முற்காலத்துப் பெண்களோ அல்லது ஆண்களோ ஒன்றும் அறியாத சின்னப் பிள்ளையைப் போல் இருந்தார்கள் ஆனால் எப்போது நவீன சாதனங்களான கணிணி குறிப்பாக கையடக்கத் தொலைபேசி வந்ததோ அப்போதே உலகம் தலை கீழாக சுற்ற ஆரம்பித்து விட்டது என குறிப்பிடலாம்.

தற்காலத்தில் பரவலாக பேசப்படுகின்ற ஒரு ஆச்சரியம் மிக்கதும் எல்லோரையும் பயத்தில் ஆழ்த்தியதுமான விளையாட்டு நீலத் திமிங்கலம் என்கின்ற கொடிய விளையாட்டினை உருவாக்கியதும் ஒரு இளைஞனே என்பதை நாம் மறந்து விட முடியாது. இவ் விளையாட்டினால் எத்தனை பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிலும் கூடுதலாக இளைஞர் யுவதிகளே என்றும் குறிப்பிட்டுக் கொள்ளலாம். தற்போது இவ்வாறான செயல்களை தூண்டுவதற்கென்றே கையடக்கத் தொலைபேசிகளில் பல முறைகள் இருக்கின்றன.

தடுமாறுகின்ற இளைஞர் சமுதாயத்திற்கு இன்னொரு காரணமாகக் காணப்படுவது மதுபானம், புகைப்பிடித்தல், போதைவஸ்துப் பாவனை இன்னும் பல தீய பழக்கங்களையும் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இவ்வாறான தீய பழக்கங்களினால் இளைஞர்கள் தங்களுடைய சுய நினைவுகளை இழந்து என்ன செய்கின்றோம் நாம் செய்வது சரியோ பிழையோ என்று தெரியாமல் தங்களை மறந்து தவறான காரியங்களில் ஈடுபட்டும் வருகின்றனர். இன்றைய இளைஞர் சமுதாயம் இளைஞர்கள் மட்டுமல்ல யுவதிகளும் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டும் வருகின்றனர்.

இவ்வாறான செயல்களை தடுப்பது என்பது இன்றைய சமுதாயத்தில் மிகவும் கடினமான ஒன்றாகவே காணப்படுகின்றது. இவற்றையெல்லாம் நாம் தடுக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு இளைஞனும் அல்லது யுவதியும் தானே இதெல்லாம் தப்பு இவற்றை நாம் செய்வதனால் எமக்கும் எமது குடும்பத்திற்கும் எமக்கும் சமுதாயத்தில் பெரிய அவமானம் என்பதை உணர்ந்து விலகிச் செல்ல வேண்டும். கையடக்கத் தொலைபேசி , கணிணி ஏனைய நவீன சாதனங்களை நல்ல விதமான செயலிற்கும் பயன்படுத்த முடியும். அவற்றை நல்ல முறையில் பயன்படுத்துவதே மிகச் சிறந்ததாகும்.

எனவே இன்றைய தடுமாறுகின்ற இளைஞர் சமுதாயமே நவீன தொடர்பாடல் சாதனங்களை நல்ல முறையில் பயன்படுத்தி நல்லதோர் எதிர்கால சமுதாயத்தை உருவாக்கி எதிர்காலம் சிறக்க வாழ்வோமாக.

ஜெ.மேரிநிரஞ்சிகா
A/L (2018) Arts
யா/இளவாலை கன்னியார் மடம் ம.வி

# விழந்தது காலை

விடிந்தது காலை
கூவின சேவல்
மலர்ந்தன மலர்கள்
ஒலித்தன கோயில் மணிகள்
பரப்பினான் கதிரவன் (ஒளியை)
கதறின கன்றுகள்
கறதனர் பாலை
கலந்தனர் காப்பியை
குடித்தனர் மக்கள்
அடைந்தனர் வயலை (உழவர்கள்)
கரையை நோக்கினர் மீனவர்
சாலையில் ஓடின வண்டிகள்
காதைப் பிளந்தன ஒலிகள்
தோலில் மாட்டினர் புத்தகப் பைகளை
சுறுசுறுப்புடனே விரைந்தனர் பள்ளிக்கு
எங்கும் பரபரப்புடனே
கலகலப்பாயினர் மாந்தர்
கானங்கள் இசைத்தன தேனீர் கடைதனில்
வடையினை உண்ண விரைந்தனர் மனிதர்
இது என்ன நியதியோ
விடியலின் பாடமே

யா/இளவாலை கன்னியார் மடம் ம.வி
தரம் - (06)
லலிசாம்பவி ரவிந்திரா

# தமிழ்தேசமும் பூகோள அரசியலும்

ஒரு தேசம் என்பது ஒரு பொதுவான மொழி, தொடர்ச்சியான நிலப்பரப்பு, பொருண்மிய வாழ்வு மற்றும் பொதுப் பண்பாட்டில் வெளிப்படும் பொதுவான மன இயல்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியாக உருவாகிய நிலையான மக்கள் சமூகம் அல்லது நிலையான மக்கள் கூட்டம் தேசம் என வரையறுக்கப்படுகிறது.

எனவே விடுதலைக்கான தேவையுடைய மக்களாகிய நாங்கள், அறிவார்ந்த சமூகமாக, மேற்கூறப்பட்ட தேசத்திற்கான வரைவிலக்கணத்தை மிகவும் கவனமாக படித்து புரிந்துகொள்ள வேண்டும், இந்த வரைவிலக்கணத்தின்படி ஒரு தேசமாகவும், தேசிய இனமாகவும் தங்களை வரையறுத்துக் கொள்வதற்கான சகல தகுதிகளையும், இலங்கையின் வடகிழக்கில் வாழும் தமிழர்கள் தன்னகத்தே கொண்டுள்ளார்கள்,அதை எவராலும் மறுதலிக்க முடியாது,தமிழர்களை தேசமாக வரையறை செய்ய முடியாது என யாராவது கூறுவார்களானால்,இந்த உலகில் எந்தவொரு இனமும் தேசமாகவோ,தேசிய இனமாகவோ தம்மை வரையறை செய்யமுடியாது,

அதே நேரம் ஐநா சாசனத்தின்படி தேசிய இனங்கள் பிரிந்து தனியரசு அமைப்பதற்கும், விரும்பினால் சேர்ந்து கூட்டுவாழ்வை மேற்கொள்வதற்கும் உரித்தானவர்கள் என கூறப்பட்டுள்ளது,அவ்வாறெனில் ஏன் நாம் பிரிந்துசென்று தமிழீழம் அமைப்பதைக் கொள்கையாக கொண்டு அரசியல் செய்யமுடியாதென நீங்கள் கேட்கலாம், அந்தக் கேள்வி நியாயமானதுதான்,ஆனால் இலங்கையின் சட்டதிட்டங்களை பற்றிய சரியான புரிதலின்மையின் வெளிப்பாடுதான் அந்த கேள்வியாகும், இங்கேதான் இலங்கையின் ஆறாவது திருத்தச்சட்டம் தனது வேலையை காட்டுகிறது, இலங்கையின் ஆறாவது திருத்தச்சட்டம், வட்டுக்கோட்டை தீர்மானமான தமிழீழ தனியரசுக்கான அங்கிகாரமாக, தமிழ் மக்கள் வாக்களித்ததனை பின்னணியாக கொண்டு, இனிமேல் தமிழர்கள் யாரும் பிரிவினையை கோரக்கூடாதென்பதற்காகவும், பிரிவினையை தடைசெய்வதற்காகவும் கொண்டுவரப்பட்ட சட்டமே ஆறாவது திருத்தச் சட்டமாகும், இந்த ஆறாவது திருத்தச்சட்டத்தில் என்னவெல்லாம் கூறப்பட்டுள்ளது என்பதனை படித்துப்பாருங்கள்,

ஆறாவது திருத்தச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை கீழே தரவிடுகிறேன்,

★ *1983-08-08* அன்று சிறிலங்காவின் ஒருமைப்பாட்டிற்கு எதிரான மீறல்களைத் தடுப்பதற்கான திருத்தம் 6 வது திருத்தமாக சிறிலங்காவின் அரசியலமைப்பிற் செய்யப்பட்டது. இந்த 6 வது திருத்தச் சட்டமானது ஐ.நாவின் சாசனங்களையும் அடிப்படை மாந்த உரிமைகளையும் அப்பட்டமாக மீறும் செயலாகும்.

★ சிறிலங்கா அரசியமைப்பின் 6 வது திருத்தச் சட்டத்தின் 157 (A) பிரிவின் படி, குறிப்பாக சிறிலங்காவின் ஒருமைப்பாட்டிற்கு எதிரான எல்லா வகையிலான மீறல்களையும் தடைசெய்கின்றது.

★ மேலும் பிரிவு 157 A *(1)* இன் படி எந்த ஒரு நபரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, சிறிலங்காவிற்குள் இருந்தோ அல்லது வெளிநாடுகளிலிருந்தோ சிறிலங்காவின் எல்லைக்குள் ஒரு தனி நாட்டினை அமைப்பதற்கு ஆதரவளிக்கவோ, அதற்கு இணங்கி நடக்கவோ, ஊக்குவிக்கவோ, நிதியளிக்கவோ மற்றும் ஆதரவு திரட்டவோ கூடாது.

★ மேலும் பிரிவு *157 (2)* இன் படி, எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது அமைப்போ அல்லது சங்கமோ சிறிலங்காவின் எல்லைக்குள் தனிநாடமைப்பதனைத் தனது நோக்கங்களில் ஒன்றாகவோ அல்லது குறிக்கோள்களில் ஒன்றாகவோ கொண்டிருக்கக் கூடாது.

- மேற்கூறிய பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளவற்றை மீறுபவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றால் விசாரணையின் பின்னர் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுத் தண்டனையாகக் கீழ்வருவனவற்றை அனுபவிக்க நேரும் எனப் பிரிவு *157 (3)* உறுதிப்படுத்துகின்றது.
- அந்த நபரின் குடிமை உரிமைகள் (Civic Rights) 7 ஆண்டு காலத்திற்கு நீக்கப்படும்.இதன் கீழ்க் குற்றமிழைத்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்ட நபரும் அவரது குடும்பமும் வாழ்வதற்குத் தேவையானவற்றைத் தவிர அவருக்கு உரித்துடைய அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும்.
- அவர் 7 ஆண்டுகளுக்கு மேற்படாதவாறு குடிமை உரிமைகளுக்கு உரித்துடையவராகார்.
- அவர் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்தால் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கம் செய்யப்படும்.

★ பிரிவு 157(4) இன் படி, ஒரு அரசியல் கட்சியோ அல்லது அமைப்போ அல்லது சங்கமோ சிறிலங்காவின் எல்லைக்குள் ஒரு தனிநாட்டை நிறுவ முனைந்தால், சிறிலங்காவின் குடிமகனாகவுள்ள எவரேனும் அந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சி அல்லது சங்கம் அல்லது அமைப்புத் தனது இலக்குகளில் அல்லது குறிக்கோள்களில் ஒன்றாகத் தனிநாடமைப்பதைக் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்டு அந்த அமைப்பின் செயலாளரை எதிர்மனுதாரராகக் குறிப்பிட்டு உச்ச நீதிமன்றத்தில் முறையீட்டு மனுத்தாக்கல் செய்யலாம்.

★ பிரிவு 157 (5) இன் படி, உச்ச நீதிமன்றம் இந்த முறையீட்டினை ஏற்றுக்கொண்டால், அந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சி அல்லது சங்கம் அல்லது அமைப்பு தடை செய்யப்படும்.


★ மேலும் பிரிவு 157 A இன் கீழ் 7 வது அட்டவணைப்படி மற்றும் பிரிவு 161 (d) (iii) இன் படி பாராளுமன்ற உறுப்பினர்கள் பதிவியேற்கையில் அவர்கள் சிறிலங்காவின் அரசியலமைப்பிற்கேற்ப சிறிலங்காவின் எல்லைக்குள் ஒரு தனிநாடமைக்க நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவளிக்க, நிதியளிக்க, ஊக்குவிக்கச் செய்யேன் என சிறிலங்காவின் ஒற்றையாட்சி மீது பற்றுறுதியுடன் உறுதியேற்கிறேன் என உறுதிமொழியேற்க வேண்டும்.

தற்போது உங்களுக்கு இந்த ஆறாவது திருத்தச்சடடம்பற்றி புரிந்திருக்கும்,இந்த காரணங்களால்தான் நாம் நேரடியாக பிரிவினையை ஜனநாயக அரசியல் மூலமாக கோராமல் தமிழ்தேசமாக வரையறுத்துக்கொள்கிறோம்! தமிழ்த்தேசம் என்பது தொண்ணூறு வீதம் தமிழீழ தனியரசுக்கான சகல பண்புகளையும் கொண்டிருக்கும்,வெளியுறவுக்கொள்கை,இராணுவம்,போன்ற மத்திய அரசுடன் நேரடியாக சம்மந்தப்பட்ட விடயங்களை தவிர்த்துஏனைய சகலதையும் கொண்ட அதிகார மையத்தை உள்ளடக்கியதே தேசமாகும்,
தேசம் என்றால் என்ன என்றும், ஆறாவது திருத்தச்சட்டம் பற்றியும் பார்த்தோம்,சரி இப்போது விடயத்திற்கு வருவோம், இந்த தமிழ்தேசம் சாத்தியமா? என்பதைப்பற்றி பார்ப்போம், இங்கு தான் எமது பூகோள ஆரசியல் அறிவு ஆரம்பிக்க வேண்டும்!

இலங்கைத் தீவினது அமைவிடங்கள் பூகோள அரசியலிலே கேந்திர முக்கியத்துவம் மிக்கதாக மாறியிருக்கின்றன. பூகோள அரசியலிலே முக்கியத்துவம் மிக்கதாக திகழும் இந்துசமுத்திரத்தின் இதயப் பகுதியாக இலங்கைத் தீவினது அமைவிடம் உள்ளது. பொருளாதாரமும் பூகோள தலைவிதியை தீர்மானிக்கின்றது.

சர்வதேச பொருளாதாரத்தினதும், பூகோள அரசியலினதும் போக்கை தீர்மானிப்பதில் இந்து சமுத்திரம் முக்கியத்துவம் வகிக்கிறது.

இதில் தற்போது சீனாவின் எழுச்சியினால், அமெரிக்க இந்திய கூட்டு இலங்கை தீவின்மீது பலத்த கவனத்தை கொண்டிருக்கிறது. இலங்கையின் அமைவிடம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு மிகமுக்கியமான ஒன்று. இலங்கைத்தீவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜ பக்சமூலமாக இலங்கையில் சீனாவின் கால்பதித்தல் அமெரிக்க இந்திய கூட்டை பெரிதும் அச்சத்தில் ஆழ்த்தின, இதனால் இந்தியா தனது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எனவும் கருதியது.




எனவே சீனாவை இலங்கையில் இருந்து வீழ்த்த தயாராகிய மேற்கு, தமிழரின் இன அழிப்பு விவகாரத்தை கையில் எடுத்து மகிந்த அரசை கவிழ்க்க தயாரானது, இந்நிலையில் மகிந்த அரசு தனக்கான உள்நாட்டு ஜனநாயக ஆதரவை வெளிப்படுத்த முனைந்து மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை அறிவித்தது. இதற்கு மேற்கு உலகும் தமக்கு சார்பான பொருளாதார ,அரசியல் கொள்கைகொண்ட ரணில் விக்கிரமசிங்க அணியை நாடி, மைத்திரிபால சிறீசேன எனும் பொது வேட்பாளரை களம் இறக்கியது. இத்தேர்தலின் முடிவு இலங்கை வாழ் தமிழர்களின் கையில் தங்கியிருந்தது. மஹிந்த-மைத்திரி என்பதை தாண்டி, அமெரிக்கா-சீனா என்ற தெரிவே தமிழர்களாகிய எமது கையில் வழங்கப்பட்டது. இதுவே பூகோள அரசியல் பலம் இலங்கை தமிழர் கையில் கிடைத்தமைக்கான சிறந்த உதாரணம்! ஆயினும் அந்த சந்தர்பத்தையும், பூகோள அரசியல் பலத்தையும் அறியாது தமிழ்மக்களாகிய நாம் எமக்கு சார்பான எந்த நிபந்தனைகளையோ, வேண்டுகோள்களையோ முன்வைக்காமல் அமெரிக்க-இந்திய நிகழ்சிநிரலை செய்து முடித்திருந்தோம்! ஆயினும் இன்னும் இலங்கையை சீனா பெரிதும் நம்புகிறது. இன்னும் சீனாவின் முதலீடுகளும், தலையீடுகளும் இலங்கையில் தொடர்கிறது. தொடர்ந்தும் பூகோள அரசியலின் தாக்கம் இலங்கை தீவில் நிலவுகிறது.

ஆதலால், எமது பலத்தையும், பூகோள அரசியலில் பலம் மிக்க நாடுகளினது நலன்களையும் சரிவர எடைபோட்டு எமது முன்னோக்கிய நகர்வுக்கான திட்டங்களை தீட்டி, அவற்றை பொறுப்புடன் அமுல்படுத்த வேண்டும். சவால் மிகுந்த தருணத்திலும், எமக்கான சந்தர்ப்பங்களும் உள்ளது. அதனை சரிவர பயன்படுத்துவதாலேயே, எமது இலக்குகளை எம்மால் வென்றெடுக்க முடியும். தமிழ்தேசத்திற்கான பயனமும் பூகோள அரசியலில் ஈழத்தமிழரின் பலத்திலேயும்,அதை அணுகும் முறையிலேயும் தங்கியுள்ளது.

கடந்தகால உலக வரலாறு,தற்போதைய உலக ஒழுங்கு என்பவைகளையும், ஜநாசாசனத்தின் விதிகளின்படியும், மார்க்சீச, லெனினிய, மாவோயிச தத்துவங்களின்படியும், உலக நீதி, நியமங்களின்படியும் தேசம் என்பது நூறுவீதம் சாத்தியமானதுதான், அதில் எந்த மாற்றுக்கருத்துமில்லை, உதாரணமாக முன்னால் சோவியத் ஒன்றியம் பலதேசங்களின் கூட்டமைப்புதான்,அமெரிக்கா பலதேசங்களின் கூட்டமைப்புதான், நமக்கு அருகில் உள்ள இந்தியா



பலதேசங்களின் கூட்டமைபபுத்தான், கனடாவில் கியூபெக் ஒரு தனியான தேசம்தான்,எனவே கனடாவும் தேசங்களின் கூட்டமைப்பதான்,இவ்வாறு இன்னும் பல நாடுகளை கூறலாம், இவ்வாறு பலதேசங்களின் கூட்டமைப்புக்களைக் கொண்ட நாடுகளில் ஒவ்வொரு தேசத்திற்கும் தனியான சட்டங்கள், வரிவிதிப்புக்கள், நிலத்துக்கான அதிகாரம், காவல்துறை அதிகாரம், குறிப்பிடும்படியான வெளியுக வர்த்தகத்திற்கான அதிகாரம், தேசத்திற்கான அரசகரும மொழி என்பன போன்ற அதிகாரங்களை கொண்டிருக்கும், மத்திய அரசின் தலையீடு மிகமிக அரிதாகவே இருக்கும்,எனவே தனித்தேசம் என்பது உலகில் நடைமுறையில் இல்லாத ஒன்றோ,,அல்லது சாத்தியப்படாத ஒன்றோ அல்ல!

ஆனால், பெரும்பான்மையினரான சிங்களவரின் போக்கு, இந்த தமிழ்தேசத்தை அங்கீகரிக்க தயாராக இல்லை! தமிழ்தேசம் என்ன தமிழரின் ஒரு அடி முன்னேற்றத்தை கூட சிங்களப் பெரும்பாண்மையினர் ஏற்றுக்கொள்ளத்தயாராக இல்லை!

2009 ற்கு பிற்பாடு தமிழ் அரசியல் பரப்பில் "தமிழ்த்தேசம்" என்ற ஜனநாயக மொழி உச்சரிக்கப்படுவதை அனைத்து தமிழரும் அறிந்தனரோ இல்லையோ, சிங்கள அரசும், சிங்கள அரசியல் சமூகமும் இது தொடர்பில் மிகுந்த விழிப்பாக இருப்பதை அறியமுடிகிறது! மிக நுணுக்கமான முறையில், இந்த விடயத்தை கையாள்கின்றனர் என்றுதான் சொல்ல வேண்டும்!

பொதுவாகவே ஒரு விடயம் மிகசூட்சுபமாக பிரச்சாரப்படுத்தப்படுகிறது எனில் நிச்சயமாக அதில் ஒரு உள்ளார்ந்த நிகழ்ச்சி நிரல் இருக்கும்! யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் ஒரு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை முன்னெடுத்துவரும் பேரினவாதம், "ஒரு நாடு ஒரே தேசம்" தொடர்பில் மிகுந்த அக்கறையுடன் பிரச்சாரப்படுத்தி வருவதை கூர்ந்து அவதானித்தால் உணரமுடியும்!

இதன் பிரதான அணுகுமுறை தான் 'One Nation One Country' என்பதை சிறீலங்கா கிரிக்கட் அணியின் வாசகமாக கொண்டு, விளையாட்டின் மூலமாக மிக தந்திரமாக "தமிழ்தேசம்" என்ற சிந்தனையை எம்மில் இருந்து விலக்கி வைக்கிறனர்! இலங்கை கிரிகெட் அணியினால் இந்த வாசகம் பயன்படுத்தபடுவதனூடாக, இலங்கையணியின் தமிழ் இரசிகர்களும் தங்களை அறியாது, இதனை ஏற்றுக்கொண்டு 'One Nation One Country' பொறிக்கப்பட்ட கொசுவுசட்டைகளை அணிய கடப்படுகிறனர்! இணையதள முகநூல்களில் தமது முகப்பு படத்தில் 'One Nation One Country' என்ற வாசகங்களை இணைத்துக் கொள்கிறார்கள்! இதற்கு அவர்கள் கூறிக்கொள்வது " விளையாட்டை விளையாட்டாக பார்க்க வேண்டும்" என்பது மட்டும்! ஆனால் நாங்கள் விளையாட்டை விளையாட்டாக பார்க்கிறோம், அவர்கள் விளையாட்டின் மூலம் அரசியலை மறைமுகமாக திணிக்கிறனர்! இலங்கையணியின் ஆதரவாளனாக இருப்பதில் தவறேதும் இல்லை, ஆனால் அதன் மூலமாக திணக்கப்படும் அரசியலை முற்றாக உணர்ந்து புறந்தள்ள வேண்டும்!

ஒரே தேசமாக இருப்பதில் என்ன சிக்கல் வந்துவிடபோகிறது என்ற வாதமும் தற்போது எம்மவர்களிடையே வந்துபோக ஆரம்பித்திருக்கிறது! தமிழருக்கும் சிங்களவருக்கும் சம உரிமையும், சம அந்தசும், தங்களின் சுதந்திரத்தை தாங்களே தீர்மானிக்க கூடிய சுயநிர்ணயமும் கிடைக்கின்ற போது நாங்களும் ஒரே தேசமாக வாழ தயாராகவே இருக்கிறோம்! ஆனால் 70 வருடமாக எமது அரசியலும்,

வரலாறும் கற்றுத்தந்த ஒரே பாடம் "எந்த கட்சி ஆட்சியமர்ந்தாலும் பெரும்பாண்மையினம் எம்மை ஒருபோதும் சமவுரிமைதந்து சேர்ந்து வாழ தயாரில்லை" என்பது மட்டுமே!




வரலாறை சரியாக உணராமல் அதை மீள வாழ சபிக்கப்படுதலை விடுத்து எங்கள் தனித்துவத்தையும், இருப்பையும் தக்க வைக்க முயற்சிக்கவேண்டும்!

இன்று எம் முன் உள்ள முக்கிய சவாலே இன உறுதிப்பாட்டையும் தனித்துவத்தையும் காப்பதுதான். அதனை முதலில் காப்பாற்றுங்கள். அதற்காக உங்களை ஆயுதம் ஏந்திப் போராடச் சொல்லவில்லை. இப்படியான பேரினவாதத்தின் சூழ்ச்சிகளை இனம் கண்டு அதற்கேற்ற வகையில் நடந்து கொண்டாலே தமிழினத்தின் உறுதிப்பாடும் தனித்துவமும் ஓரளவுக்கேனும் காப்பாற்றப்படும்.

தொகுப்பு

- நா..சுகந்தன்

# யாழ் தமிழனும் சகோதரமொழிப்பேயும்

ஒரு தனி வீடு கணவன் பாரதியும் மனைவி லக்சுமியும் ஒரு 4 ஆம் வகுப்பு பையன் கண்ணனும் என 3 பேரும் சந்தோசமா ஒரு இடத்தில் வாழ்ந்து வாந்தார்கள் ஒருநாள் இரவு பாரதி பையனைப் பார்த்து என்ன செய்கிறாய் கொண்டிருக்கிறாய் எண்டு கேட்க கண்ணன் வீட்டுப்பாடம் செய்கிறேன் எண்டான். பாரதிக்கு தொலைபேசி அழைப்பு வருகிறது பாரதி அதை எடுத்து வெளியில் போய் பேச ஆரம்பிக்கிறார் இடை இடையே ஹய் போவன் எண்ட அலை வரிசை குழப்புகிறது உடனே வீட்டுக்குள் இருந்து லக்சுமியின் அலரல் சத்தம் கேட்டு பாரதி உள்ளே வந்து சத்தம் கேட்ட சமைலறையைப் போய் பார்த்தான் சமையல் கட்டில் வைத்திருந்த பழஞ்சோறு பாற்சோறாக மாறியது அதைப் பாரத்து அதிர்ந்த லக்சுமியும் பாரதியும் அதிர்சியிலிந்து மீள்வதற்குள் மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது தொலைபேசி ஒளியைவைத்து ஒருவழியாக மெழுகுதிரியும் நெருகுப் பெட்டியும் எடுத்து மெழுகு வர்த்தியை ஏத்தி எடுத்துக் கொண்டு மன்றம் (வரண்டாவுக்கு) வரும்போது பையன் தொலைக்காட்சிக்கு அருகில் நின்று ஏதோ பார்கிறான் பாரதியும் லக்சுமியும் கிட்ட போய் பார்க்க மின்சாரம் இல்லாத நிலையிலும் தொலைக்காட்சி அலைவரிசை குழம்பி சகோதர மொழி சேனல் வேலை செய்ய ஆரம்பிக்கின்றது காற்று சாளரத்தால் பலமாக வீச ஆரம்பிக்கிறது பாரதி சாளரத்தை பூட்ட போகும் போது காற்றில் ஒரு புத்தகம் வீட்டினுள் தூக்கி எறியப்படுகிறன்றது அதை பாரதியும் லக்சுமியும் எடுத்து பார்கும் போது அதில் Learn Singla எண்ட தலைப்புடன் காணப்பட்டது அந்த புத்தகம் ஒரே அதிர்ச்சி

மறுநாள் இரவு பாரதி தனது நண்பனின் உதவியுன் சாமியாரை தனது இல்லத்திற்கு அழைத்துவந்த பாரதி ஏதோ அமானுசியமான விடயம் இங்கே இருக்கு எண்டு சொல்லுகின்ன் அதற்கு சாமியாரோ அங்குமிங்கும் பார்துவிட்டு தியானித்து விட்டு உங்கள் இல்லத்தில் அமானு'யமான நடமாட்டங்கள் இருக்க சில விடயங்களை வைத்து கண்டு பிடிக்கலாம் எண்டு சொல்கிறார்.

1 ஒரு அரச பதவியில் இருக்கும் ஒருவரது பெயர் பலகையைக் கொண்டு வந்து வைத்து பார்க்கவும் எண்டார் கொண்டு வந்து வைத்ததும் அது சகோதர மொழி எழுதியிருப்பதை அவதானித்தனர்.

2 ஆவது உன்னுடைய மூலதெய்வம் கோவிலுக்குச் சென்று பார் கோவிலுக்கு அருகில் ஏதாவது கட்டடம் இருக்கா எண்டு பாத்துவிட்டு வா எண்டார் சாமியார் உடனே புறப்பட்டான் பாரதி போய் பார்தால் வெள்ளைப் பூச்சு பூசிய அரைவட்ட தூபி போன்ற ஒரு கட்டடம் காணப்பட்டதை ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு சாமியாரிடம் கூறியதும் அவர் கடைசி அறிகுறியையும் பார்த்து உறுதி செய்வோம் எண்டார் சாமியார் ஆச்சரியத்துடன் பாரதியும் லக்சுமியும் 3 ஆவது அறிகுறி உனது சால்வை எடுத்து வந்து போடு என்றார் சாமியார் பாரதி தனது சால்வையை நடு முற்றத்தில் போட்டதும் சால்வை சிவப்பு காவியாக மாறியது

சாமியார் இந்த வீட்டில் *100%* சகோதர மொழி பேய் இருக்கு எண்டதும் பாரதியும் லக்சுமியும் கண்ணனும் பயந்து போகிறனர் வெளியில் வந்த லக்சுமி இந்த வீடு வேணாம் நாங்கள் வேறு வீடு போவம் எண்டது அதுக்கு அங்கும் இந்த பேய் வராது எண்டு என்ன நிச்சயம் கண்டிப்பா இந்த வீட்டில்தான் இருப்போம் எண்டான் பாரதி உடனே உள்ளே வந்து சாமியாரிடம் அந்த பேயுடன் நா பேச வேண்டும் கூப்பிடச் சொன்னான் பாரதி சாமியாரும் கூப்பிட சக்கரத்தில் வந்து உக்கார்ந்தது பேய் பேய் சகோதர மொழியில் ஏதோ பிதற்றபாரதிக்கு புரியவே இல்லை சாமியாரிடம் பேய்க்கு என்ன வேண்டும் எண்டு கேட்க சொன்னான் பாரதி அதற்கு இணங்க சாமியார் பேயிடம் கதைத்துவிட்டு பாரதிக்கு சாமியார் சொன்னார் உங்கள் குடும்பம் சிங்களம் கற்க்க வேண்டும் சில மாறுதல்களும் அந்த பேய்க்கு ஏற்றபடி மாறவேண்டும் உங்கள் நிலத்தை அந்த பேயின் உறவினர்களுக்கே எழுதிக் கொடுக்க வேண்டுமாம். என்னால் (பேயால்) காணாமற் போனவர்களைத் தேடுதலோ அல்லது போராட்டங்களோ செய்யக் கூடாது பாதுகாப்பு படையினரை இந்த நிலங்களை விட்டு வெளியேற்றக் கூடாது என பல விடயங்களை சொல்லுது அந்தப் பேய் எண்டார் சாமியார் அதற்கு பாரதி நீ தான் எனது இடத்தில் இருக்கிறாய் நா உனக்காக மாற இயலாது எல்லா மொழியும் இங்கு சமத்துவம் உனது பயங்காட்டலுக்கு நா பயப்பிடப் போவதில்லை வேண்டுமென்றால் நீ தமிழைக் கற்றுக் கொள் இங்கு உள்ள பழக்க வழக்கங்களை கற்றுக் கொள் இங்கிருந்து ஒரு இதையும் மாற்ற முடியாது என்னுடைய இடத்தில தான் நீ இருக்கிறய் உன்ர இடத்தில நீ இரு எங்களுடைய பண்பாடு கலை கலாச்சாரத்தில் நீ தலையிடாது உனது பாட்டில் இவ்விடத்தை சுற்றிப் பாத்து விட்டு செல்லலாம் எண்டான் பாரதி இதைக்கேட்டு பேய் அலறியது உடனே பாரதி 70 வரு'மா நா இலங்கையன் ஆனா பல்லாயிரம் வருசமா நா தமிழன் எண்டு வீட்டுக்கு வெளியில் வந்து விரட்டி அனுப்பினான் அந்த சிங்கள பேயை..

# இலங்கையின் உள்ளூராட்சி சபைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

வி.கு.வின்சன் ஞானதயாளன்
(இலங்கை நிர்வாக சேவை -
இலங்கை அபிவிருத்தி நிர்வாக
நிறுவனம், கொழும்பு)

## மன்னராட்சி காலத்தில்...

இலங்கையின் உள்ளூராட்சி சபை முறைமையானது சிங்கள மன்னராட்சி காலத்திலிருந்து வழக்கத்திலிருந்து வரும் ஒன்றாக காணப்படுகின்றது. ஆனாலும் தற்போது இருக்கின்ற மக்கள் பிரதிநிதித்துவ சபை முறைமை அப்போது காணப்படவில்லை. மாறாக மன்னரால் நியமிக்கப்பட்டவர்களே குறித்த சபைகளை வழிநடத்தி வந்தனர்.

குறிப்பாக கிராம மட்டத்தில் 'கம்சபா' என்ற அமைப்பும், மாவட்ட மட்டங்களில் 'ரட்டசபா' என்ற அமைப்பும் அரசனின் நிர்வாகத்தினை குறித்த பிரதேசங்களில் பிரயோகிக்கின்ற செயற்படுத்துகின்ற பரவலாக்க அமைப்புக்களாக காணப்பட்டன. எனினும் 1815 இல் பிரித்தானியர் கண்டி இராசதானியை கைப்பற்றிய பின்னரும் 3 ஆண்டுகள் குறித்த முறை தொடர்ந்து வந்தது. எனினும் 1818 இல் கண்டிய கலவரத்தினை தொடர்ந்து குறித்த முறைமை இல்லாமல் செய்யப்பட்டது. ஏனெனில் கண்டிக் கலவரத்திற்கு திசாவைகள் முதலான பிராந்திய மட்டத் தலைவர்கள் தான் காரணம் என பிரித்தானியர் கருதியதாலாகும்.

அதே வேளை 1591 இல் நல்லூர் இராசதானி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து தமிழர் பிரதேசங்களில் காலணித்துவ ஆட்சி ஆரம்பித்திருந்தது. இதனால் தமிழர் பிரதேசங்களில் உள்ளூரதிகார முறை பற்றிய குறிப்புக்கள் எவையும் கிடைக்கவில்லை. 1796 இல் பிரித்தானியர் கைப்பற்றும் வரைக்கும் தமிழர் பிரதேசங்கள் உள்ளிட்ட இலங்கையின் கரையோர பகுதிகள் போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் ஆட்சி செய்யப்பட்டிருந்தன. இவர்கள் காலத்தில் திசாவை, கோரளை, பற்று, கிராமம் என நிர்வாக அலகுகள் பிரிக்கப்பட்டிருந்தாலும் சபைகள் என்ற ரீதியில் அவை இருக்கவில்லை.

## பிரித்தானியர் காலத்தில் - டொனமூர் அரசியல் சீர் திருத்தத்திற்கு முன்னர்...

1818 இல் இல்லாமல் செய்யப்பட்ட கம்சபா முறைமையானது, பின்னர் மறுசீரமைக்கப்பட்டு 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிராம சபைகள், வீதிக்குழுக்கள், பொதுச் சுகாதார சபைகள் போன்ற பல உள்ளூராட்சி அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. 1833 இல் முதன் முதலில் கோல்புறுக் அரசியல் சீர் திருத்தத்தில் கிராம சபைகளுக்கான முன்மொழிவு செய்யப்பட்டிருந்தது.

1856 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பயிர் நிலங்கள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தின்படி கிராம சபைகள் *(Village Councils)* ஸ்தாபிக்கப்பட்டன. விவசாயத்தையும், நீர்ப்பாசனத்தையும் கண்காணிப்பது இச் சபைகளின் பொறுப்பாக இருந்தது. இதன் தலைவர்களாக பிரித்தானிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அரசாங்க அதிபர்கள் காணப்பட்டனர். ஏனைய உறுப்பினர்கள் அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டனர்.

எனினும் 1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராம சபைகள் கட்டளைச் சட்டத்தின் படி இவை மறுசீரமைக்கப்பட்டன. அச் சட்டத்தின் மூலம் கிராம மட்டத்தில் நிர்வாக நடவடிக்கை மற்றும் நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. குறித்த சட்டத்தின் படி ஏதேனும் கிராமவாசிகள் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் ஆளுநர் நாயகத்தினாலும், சட்டவாக்க சபையினாலும் கிராம சபை உருவாக்கப்பட முடியும். இச் சபைகளுக்கும் அரசாங்க அதிபரே தலைவராக இருந்தார். மேலும் கிராம சபைகளின் கீழ் கிராம நீதிமன்றங்கள் (நியாயாதிக்க சபைகள்) அமைக்கப்பட்டன. முன்னர் குறிப்பிட்டதைப் போன்று உள்ளூராட்சி சபைகளுக்கு நீதிமன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டமை இங்கு முக்கியமானது. குறித்த சட்டத்தின் பிரிவு 21 இல் கூறப்பட்டுள்ள சிவில் மற்றும் குடியியல் வழக்குகளை இங்கு விசாரித்து தீர்ப்பளிக்க முடிந்தது.

1861 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வீதிச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் படி மாகாண மற்றும் மாவட்ட மட்டத்திலாக வீதிக் குழுக்கள் *(Road Committees)* ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றிற்கும் அரசாங்க அதிபர்களே தலைமை வகித்ததோடு நியமிக்கப்பட்ட மற்றும் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்க அலுவலர்கள் இதில் அங்கம் வகித்தனர்.

1865 ஆண்டின் 17 ஆம் இலக்க மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் படி மாநகர சபைகள் *(Municipal Councils)* ஸ்தாபிக்கப்பட்டன. ஆரம்பத்தில் கொழும்பு, கண்டி, ஆகிய மாநகரசபைகளே உருவாக்கப்பட்டிருந்தன. 1866 இல் காலி மாநகர சபையும் உருவாக்கப்பட்டிருந்தது. அதில் உத்தியோகச் சார்பு தேரந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களும், நியமனஞ் செய்யப்பட்ட சில அங்கத்தவர்களும் இடம்பெற்றிருந்தனர். குறித்த சபைகளின் நகரபிதாவாக (மேயர்) அரசாங்க அதிபரே காணப்பட்டார். தேர்தலில் போட்டியிடுபவரகள் 50 பவுண்களுக்கு அதிகமான ஆண்டுப் பெறுமதியுடைய ஆதனத்தினை கொண்டவர்களாக இருக்க வேண்டும் 10 பவுண்கள் ஆண்டுப் பெறுமதியுடைய மலாயர்கள் மாத்திரமே தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

1892 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துப்பரவு சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் துப்பரவு சபைகள் (Sanitary Boards) சிறிய நகரங்களில் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த உள்ளூராட்சி அலகுகள் அதிகார பகிர்வினை அமுல்படுத்துகின்ற சபைகளாக இருக்கவில்லை. மாறாக பிரித்தானிய அரசின் சேவைகளை (நீர், சுகாதாரம், வீதிஅபிவிருத்தி....) கிராம மட்டங்களில் வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிர்வாக அலகுகளாக மட்டுமே காணப்பட்டன. அரசாங்க அதிகாரிகளே இச் சபைகளில் பெருமளவில் அங்கம் வகித்திருந்தனர்.

### டொனமூர் அரசியல் சீர் திருத்தத்தின் பின்னரான மாற்றம்.....

1932 இல் டொனமூர் அரசியல் சீர் திருத்தம் கொண்டுவரப்பட்டு அரசவைக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டு ஓரளவிற்கு சுயாட்சி அமைப்பு முறை நாட்டினுள் ஏற்படுத்தப்பட்டபோது உள்ளூரதிகார சபைகளின் அமைப்பு முறைமையிலும் புதிய மாற்றங்கள் ஏற்பட்டது. டொனமூர் அரசியல் சீர்திருத்த முன்மொழிவுகளில் உள்ளூராட்சி சபைகளுக்கும் இடையில் மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. உள்ளூரதிகார சபைகளின் அனைத்து அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டுமெனவும் டொனமூர் பரிந்துரைகளில் தெரிவிக்கப்பட்டது.

அரசவைக் கழகத்தின் குழுக்களில் ஒன்றாக உள்ளூராட்சி சபைகள்

ஸ்தாபிக்கப்பட்டு அதற்கு பொறுப்பான அமைச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். திரு. எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா உள்ளூராட்சி அமைச்சரானார். உள்ளூராட்சி செயற்பாடுகளை மறுசீரமைக்க பண்டாரநாயக்கா தலைமையில் நிறைவேற்றுக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. மத்திய உள்ளூராட்சித் திணைக்களமும் ஸ்தாபிக்கப்பட்டது. தொடர்ந்து சில புதிய உள்ளூராட்சி சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டன.

1939 ஆண்டின் 61 ஆம் இலக்க நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் படி பெரிய நகரங்களாக கருதப்பட்ட இடங்களில் நகரசபைகள் (Urban Councils) உருவாக்கப்பட்டன. அப்போது 27 நகரசபைகள் உருவாக்கப்பட்டிருந்தன. இந்நகரசபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 தொடக்கம் 12 உறுப்பினர்கள் அங்கம் வகித்திருந்தனர். உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளாலேயே தவிசாளர் தேர்ந்தெடுக்கப்பட்டார். முன்னர் சகல சபைகளினதும் தவிசாளர்களாக அரசாங்க அதிபர்களே காணப்பட்டிருந்தனர். இந்நிலை தற்போது மாற்றம் பெற்றது.

இவ்வாறே முன்னர் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கிராம சபைகளிலும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் 1926, 1938, 1940 ஆம் ஆண்டுகளில் திருத்தச் சட்டங்கள் ஊடாக செய்யப்பட்டன. கிராம சபைகளிலும் தவிசாளர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வழி ஏற்படுத்தப்பட்டது.

1946 ஆண்டின் 3 ஆம் இலக்க பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பட்டின சபைகள் *(Town Councils)* சிறிய நகரங்களில் உருவாக்கப்பட்டன. முன்பிருந்த துப்பரவு சபைகள் மற்றும் உள்ளூர் சுகாதார சபைகள் என்பவைகள் முற்றாக இல்லாமல் செய்யப்பட்டு அவற்றிற்கு பதிலாகவே இப்புதிய சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அப்போது 24 பட்டின சபைகள் உருவாக்கப்பட்டிருந்தன.

எனவே இலங்கை சுதந்திரமடையும் போது பின்வரும் உள்ளூரதிகார சபைகள் காணப்பட்டிருந்தன.

மாநகர சபைகள் - 3
நகர சபைகள் - 27
பட்டின் சபைகள் - 24
கிராம சபைகள் -

## சுதந்திரத்திற்கு பின்னரான நிலை

சுதந்திரத்திற்கு பின்னர் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் ஏற்பட்டது. உள்ளூராட்சி சபைகளில் மக்களின் பங்களிப்பு அதிகரிக்கத் தொடங்கியது. பல அரசியல் தலைவர்களின் ஆரம்ப பயிற்சிப் பாடசாலையாக உள்ளூராட்சி சபைகள் விளங்கின என பல அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, 1951 இல் ஐ.தே.க விலிருந்து வெளியேறி சுதந்திரக் கட்சியை ஆரம்பித்து ஐந்து வருடங்கள் மட்டும் கடந்த நிலையில் 1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராகியிருந்தார். இதற்கு காரணம் அநேக உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களின் ஆதரவை அவர் பெற்றுக்கொண்டதனாலாகும். அந்தளவிற்கு அக்காலத்தில் உள்ளூராட்சி சபைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்கின.

1952 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் (அதிகார விரிவாக்கல்) சட்டத்தின் படி பாரயளவிலான மாற்றங்கள் செய்யப்பட்டன. குறித்த சட்டமானது முன்னர் இருந்த கிராம சபைகள் கட்டளைச் சட்டம், பட்டின சபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம், மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், முறையே 49, 23, 44, 40 திருத்தங்களை கொண்டுவந்திருந்தது. இத் திருத்தங்களின் மூலம் மத்திய அரசாங்கத்திடம் இருந்த சில அதிகாரங்கள் உள்ளூரதிகார சபைகளுக்கு வழங்கப்பட்டது.

இதற்கிடையில் மாவட்ட மட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்த உரிய அமைப்புக்கள் எவையும் இல்லை என்பதால் மாவட்ட சபைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவு 1947 இல் செய்யப்பட்டாலும் அது சட்டமாக்கப்படவில்லை. எனினும் மாவட்ட சபைகளுக்கு பதிலாக 1950 இல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் *(District Coordinating Committees)* ஸ்தாபிக்கப்பட்டன. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் ஸ்தாபிதமானது அதுவரையில் அரச நிர்வாகத்தில் அரசாங்க அதிபர் வகித்துவந்த பங்கினை குறைவடையச் செய்ததுடன் கச்சேரி முறைமையையும் நலிவடையச் செய்தது. மேலும் இது மக்கள் பிரதிநிதிகளை மாவட்ட அரச நிர்வாகத்தில் தலையிடச் செய்தது.

இதே வேளை சேர். ஜோன் கொத்தலாவலை பிரதமராக இருந்த காலத்தில்

1955 இல் உள்ளூராட்சி சபைகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. 'சொக்சி ஆணைக்குழு' என அறியப்படுகின்ற ஆணைக்குழுவானது உள்ளூராட்சி சபைகளை ஒன்றிணைத்து பிராந்திய சபைகள் *(Regional Councils)* உருவாக்கப்பட வேண்டும் என முன்மொழிந்தது. சொக்சி ஆணைக்குழுவானது பிரதேசத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூரதிகார சபைகளின் தலைவர்களை உள்ளடக்கிய மாவட்டத்திற்குள் ஓர் உப பிரிவாக பிராந்திய சபையினை உருவாக்க வேண்டும் என முன்மொழிந்திருந்தது.

தொடர்ந்து 1956 இல் வந்த பண்டாரநாயக்க அரசு குறித்த அறிக்கையை ஏற்று வர்த்தமானியில் வெயியிட்டிருந்தாலும் கூட 1957 இல் மேற்கொள்ளப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தத்தின் விளைவாக இந் நிலைப்பாட்டில் இருந்து விலகிச் செல்ல வேண்டி ஏற்பட்டது. பண்டா செல்வா ஒப்பந்தத்தின் படி வடக்கில் ஒரு பிராந்திய சபையும், கிழக்கில் இரண்டு பிராந்திய சபைகளும் அமைக்கப்பட வேண்டும் என உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. வடக்கின் பிராந்திய சபையையும், கிழக்கில் தமிழர் பெரும்பான்மையாகவுள்ள பிராந்திய சபையையும் இணைப்பதே இதன் உள்நோக்கமாக இருந்தது. இது குறித்த ஏற்பாடொன்றும் ஒப்பந்தத்தில் காணப்பட்டது.

ஆனாலும் அக்காலத்தில் எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி, சில பௌத்த பிக்கு அமைப்பினரையும் சேர்த்துக் கொண்டு பண்டா – செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராக இனவாத பிரச்சாரத்தை மேற்கொண்டதன் விளைவாக ஒருதலைப்பட்சமாக குறித்த ஒப்பந்தத்தை முறிக்க வேண்டிய தேவை பண்டாரநாயக்கவிற்கு ஏற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியால் ஏற்படுத்தப்பட்ட இந்த இனவாத அரசியலானது, பின்னர் வந்த காலத்தில் உள்ளூர் அதிகார சபைகள், பிராந்திய அதிகார சபைகள் மற்றும் தற்போதைய மாகாண சபைகள் என்பவற்றிற்கு அதிகாரங்களை பகிர்வதற்கு பாரிய முட்டுக்கட்டையாக இன்று வரை இருந்து வருகின்றது. அன்றிலிருந்து இன்று வரை மத்திய அரசிலிருந்து பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வது பிரிவினை வாதம் என்றே சிங்கள அரசியல்வாதிகளால் பிரசங்கப்படுத்தப்பட்டு வருகின்றது.

1965 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றிருந்தாலும்,

அறுதிப் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ள முடியவில்லை. இதனால் ஆதரவைப் பெற்றுக்கொள்ள தமிழர் தரப்புடன் ஒப்பந்தம்செய்ய வேண்டிய நிலை டட்லி சேனநாயக்காவிற்கு ஏற்பட்டது. இதனால் டட்லி – செல்வா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக மாவட்ட சபைகளை ஸ்தாபிப்பது தொடர்பான வெள்ளையறிக்கை 1968 இல் வெளியிடப்பட்டது. இடதுசாரிக் கட்சியால் இது தொடர்பில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. தமிழர் தரப்புடன் டட்லி இரகசிய ஒப்பந்தம் ஒன்றை செய்திருக்கின்றார் என்றும் வடக்கு – கிழக்கை இணைத்து தனியான பிராந்திய சபை ஒன்றை நிறுவி, நாட்டில் பிரிவினை ஏற்படுத்தப்பட போகின்றது என்று மீண்டும் சிங்கள கடும்போக்குவாதிகளால் குற்றஞ்சாட்டப்பட்டது. இதனால் ஈற்றில் மாவட்ட சபைகள் அமைக்கும் தமது முயற்சியை கைவிட வேண்டிய நிலைக்கு டட்லி அரசாங்கம் தள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 1970 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான இடதுசாரிக் கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வந்தது. சுதந்திரமடைந்த காலந்தொட்டு தமிழர்களால் முன்வைக்கப்பட்டு வந்த சமஸ்டிக் கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய தேவை ஸ்ரீமாவோ அரசாங்கத்திற்கு இருந்தது. எனவே 1972 இல் முதலாம் குடியரசு அரசியலமைப்பு தயாரிக்கப்படும் போது இலங்கை ஒற்றையாட்சி நாடு என பிரகடனப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழர் தரப்பில் அக்காலத்தில் அரசியல் கட்சிகளாக செயற்பட்டு வந்த சமஸ்டிக் கட்சியும் (இலங்கை தமிழரசுக் கட்சி), தமிழ் காங்கிரசும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கின. 1974 இல் தனித் தமிழீழம் ஒன்றே தமிழர்களின் இறுதி அரசியல் இலக்கு என தமிழர் விடுதலைக் கூட்டணியால் பிரகடனப்படுத்தப்பட்டது.

எனினும் மறுதரப்பில் உள்ளூராட்சி சபைகள் தொடர்பாக காலத்திற்கு காலம் பல்வேறு குழுக்களும், ஆணைக்குழுக்களும் அமைக்கப்பட்டுக்கொண்டிருந்தன. 1978 இல் கிராம எல்லை நிர்ணய ஆணைக்குழு (மொறகொட ஆணைக்குழு) ஒன்று அமைச்சரவையால் அமைக்கப்பட்டது. இவ் ஆணைக்குழுவானது 250 (சுரசயட ஊழரெஉடைள) உருவாக்கப்பட வேண்டும் எனவும், இவற்றிற்கு பொறுப்பாக உதவி அரசாங்க அதிபர்கள் செயற்படவேண்டும் எனவும் முன்மொழிந்தது. எனினும் இவ் ஆணைக்குழுவின் அறிக்கை செயல் வடிவம் பெறவில்லை.

## மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தோற்றம்

தொடர்ந்து 1979 இல் முன்னாள் மத்தியவங்கி ஆளுநர் விக்ரர் தென்னக்கோன் தலைமையில் 9 பேர் கொண்ட ஆணைக்குழு ஒன்று ஜனாதிபதியால் ஏற்படுத்தப்பட்டது. தென்னக்கோன் ஆணைக்குழுவின் பரிந்துரையின் படி 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட சபைகள் சட்டத்தின் படி மாவட்ட அபிவிருத்தி குழுக்கள் *(District Development Councils)* உருவாக்கப்பட்டன. குறித்த சட்டத்தின் படி அப்போதிருந்த 24 நிர்வாக மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு சபை வீதம் அமைக்கப்பட்டது. குறித்த சபைகளில் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி வழி உறுப்பினர்களாகவும், ஏனையோர் தேர்தல் மூலம் தெரிவு செய்யபடுபடுவர்களாகவும் இருந்தனர். எனினும் பதவி வழியான உறுப்பினர்களே பெரும்பான்மையினராக இருந்தனர்.

மத்திய அமைச்சுக்களில் இருந்த அபிவிருத்தி தொடர்பான 15 விடயங்கள் மாவட்ட அபிவிருத்தி குழுக்களுக்கு கையளிக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியான மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்திக் குழுவினதும் தலைவர், மாவட்ட அமைச்சர், ஏனைய இரு உறுப்பினர்கள் உள்ளடங்கலாக ஒரு நிறைவேற்றுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

1981, யூலை மாதம் 1 ஆம் திகதியிலிருந்து மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் செயற்படத் தொடங்கின. அதன் விளைவாக 83 பட்டின சபைகளும், 549 கிராம சபைகளும் இல்லாதொழிக்கப்பட்டு அவற்றின் செயற்பாடுகள் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு மாற்றப்பட்டன. பட்டின மற்றும் கிராம சபைகள் இல்லாதொழிக்கப்பட்டதன் விளைவாக 7980 பேர் குறித்த சபைகளில் இருந்தான தமது உறுப்புரிமையை இழக்க வேண்டி ஏற்பட்டது. எனினும் அக்காலத்தில் இயங்கி வந்த 12 மாநகர சபைகளும், 39 நகர சபைகளும் எவ்வித பாதிப்புக்களும் இன்றி தொடர்ந்தும் இயங்கி வந்தன. எனினும் 85 சதவீதமான மக்கள் பிரதிநிதித்துவம் பட்டின மற்றும் கிராம சபைகளிலேயே இருந்தது. அது முற்றாக இல்லாமல் செய்யப்பட்டது. எனவே மாவட்ட அபிவிருத்தி சபைகளின் தோற்றமானது உள்ளூராட்சி முறைமையை பலவீனப்படுத்தியது எனலாம்.

## கிராமோதய சபைகள்

முன்னர் குறிப்பிட்டதைப் போன்று பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் இல்லாமல் செய்யப்பட்டதால் கிராம மட்டத்தில் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள மக்கள் பிரதிநிதித்துவ அமைப்பு ஒன்று இல்லை என பரவலாக விமர்சனம் செய்யப்பட்டது. எனவே அதற்காக கிராம மட்டத்தில் புதிய குழுக்களை அமைக்க வேண்டிய தேவை அரசிற்கு ஏற்பட்டது. இது பற்றி ஆராய ஓர் குழு நியமிக்கப்பட்டது. குழுவானது அறிக்கையின் மூலம் கிராமத்தில் உள்ள அரசியல் சார்பற்ற ஒருவரை தலைவராகவும், கிராம சேவகரை செயலாளராகவும் கொண்ட கிராமோதய சபைகள் அமைக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்து அறிக்கை வெளியிட்டது. 1981 இல் மாவட்ட சபைகள் சட்டத்தின் பிரிவு 17 திருத்தப்பட்டு கிராமேதய சபைகளுக்கு செயல் வடிவம் கொடுக்க முயற்சிக்கப்பட்டது. தேர்தல் மூலமான மக்கள் பிரதிநிதித்துவம் என்பது இங்கு காணப்படாமையால் இது ஆரம்பம் முதலே வெற்றியளிக்காத ஓர் அமைப்பாக கருதப்பட்டது. எனினும் கிராமோதய சபைகளின் விளைவாக 4712 ஆக இருந்த கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை 14700 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## தற்கால பிரதேச சபைகளின் தோற்றம்

மாவட்ட அபிவிருத்தி சபைகளும், கிராமோதய சபைகளும் மக்கள் பிரதிநிதித்துவத்தில் வெற்றியளிக்காத காரணத்தினால் அவற்றை மறுசீரமைக்க வேண்டிய தேவை ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்திற்கு இருந்தது. இது தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சரவை உப குழு ஒன்று அமைக்கப்பட்டது. அமைச்சரவை உபகுழுவானது தனது அறிக்கையை 1985 இல் சமர்ப்பித்தது. இதனடிப்படையில் புதிய சட்டவரைவு தயாரிக்கப்பட்டது. அரச நிர்வாகத்திலும், அபிவிருத்தியிலும் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வதே இப்புதிய சட்ட வரைவின் நோக்கமாக காணப்பட்டது. தொடர்ந்து பாராளுமன்ற வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமானது 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

இதற்கிடையில் நிர்வாக கொள்கைகள் மறுசீரமைப்பிற்காக, எச்.எஸ்.வனசிங்க தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. வனசிங்க

தலைமயிலான குழுவானது பிரதேச சபைகள் சட்டத்தினை அமுல்படுத்துவதற்காக சில முறைமைகளை முன் மொழிந்ததுடன், அரசின் முழு நிர்வாக நடவடிக்கைகளும் பிரதேச சபைகளின் ஊடாகவே முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் பிரதேச சபைகளின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக ஆணையாளர் ஒருவரை நியமித்து, பிரதேச சபைகளினூடாகவே பிரதேசத்திற்கான அரசின் அனைத்து அபிவிருத்தி திட்டமிடல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என 1987 ஒக்டோபரில் அறிக்கை மூலம் யோசனைகள் முன்வைத்தது.

குறித்த குழுவின் யோசனைகள் பலவும் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் 1988 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஏற்கனவே இருந்த மாநகர சபைகள் மற்றும் நகரசபைகளுடன் 257 பிரதேச சபைகளும் சேர்ந்து புதிய உள்ளூராட்சி முறைமை அமுலுக்கு வந்தது.

அது மட்டுமல்லாது 1987 இல் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக உள்ளூராட்சி சபைகள் அரச நிர்வாக படிநிலையின் மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டன. அதாவது உள்ளூராட்சி, புதிதாக தாபிக்கப்பட்ட மாகாண சபைகளின் ஆளுகைக்கு உட்பட்ட விடயமாக மாற்றமடைந்தது. அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் படி மாகாண சபை நிரலில் நான்கவதாக உள்ளூராட்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் இவ்விடயம் மாகாசபைகளுக்கு பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

13வது திருத்தச் சட்டத்தின் படி மாகாணங்களுக்கு ஓர் விடயம் பரவலாக்கப்பட்டிருந்தால், அவ்விடயம் தொடர்பாக முன்னர் பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தினை இடைநிறுத்தி தமக்கென வேறு நியதிச் சட்டத்தினை இயற்றும் தத்துவம் அரசியலமைப்பின் உறுப்புரை 154(v)(8) இன் படி மாகாணசபைக்கு உண்டு.

ஆனாலும், உள்ளூராட்சி என்பது மாகாணங்களுக்கு பரவலாக்கப்பட்ட விடயமொன்றாக இருந்தாலும், இது தொடர்பாக பாராளுமன்றத்தால் காலத்திற்கு காலம் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகள் தொடர்பான சட்டங்களை மேவி உள்ளூராட்சி தொடர்பாக நியதிச் சட்டங்களை இயற்ற மாகாணசபையால் முடியாது. ஏனெனில் அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின், முதலாம் நிரலில் உள்ளூராட்சி என்ற நான்காம் விடயத்தில் பல்வேறுபட்ட மட்டுப்பாடுகள்

குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் முக்கியமானது 'பாராளுமன்றத்தால் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மாகாண சபையால் ஒருபோதும் குறைக்க முடியாது. மாறாக தமது நிரலில் உள்ள வேறு அதிகாரங்களை வழங்க முடியும்' என்பதாகும். ஆனாலும் துரதிர்ஸ்ட வசமாக இதுவரை எந்த மாகாண சபையும் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் இருந்து உள்ளூரதிகார சபைக்கு அதிகாரங்களை வழங்கும் நியதிச் சட்டத்தினை இயற்றவில்லை.

இவ்வாறாக உள்ளூராட்சி சபைகளின் மேற்பார்வை அலகுகளாக மாகாண சபைகள் காணப்பட்டன. எனினும் மாகாண சபைகள், தமது சேவைகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்கு உள்ளூராட்சி சபைகளை விட பிரதேச செயலகங்களையே தமது முகவராக்கிக்கொண்டன. 1992 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க அதிகார இடம்மாற்றச சட்டத்தின் ஊடாக முன்னர் மாவட்டச் செயலாளரிடம் இருந்த மத்திய அரசாங்கத்தின் பொறுப்புக்கள் தற்போது பிரதேச செயலாளர்களுக்கு மாற்றப்பட்டன. மாகாண சபையின் சில செயற்பாடுகளை அமுலாக்க வேண்டிய பொறுப்பானது பிரதேச செயலாளர்களிடம் வழங்கப்பட்டது. குறிப்பாக வாகன வரி அனுமதி பத்திரம், வியாபாரத்தை பதிவு செய்தல் உட்பட பல்வேறு மாகாண சபையின் நடவடிக்கைகள் தற்போதும் பிரதேச செயலகத்திலேயே முன்னெடுக்கப்படுகின்றன. இங்கு கவனிக்கப்பட வேண்டியது என்னெவெனில், தமது ஆளுகைக்கு உட்பட்ட உள்ளூராட்சி சபைகளின் மூலம் தமது பணிகளை முன்னெடுப்பதை விட பிரதேச செயலகங்கள் மூலமே மாகாண சபைகள் அப்பணிகளை முன்னெடுத்து வருகின்றன என்பதாகும்.

மேலும் 1988 இல் பிரதேச சபைகள் அமைக்கப்பட்டதும், அதன் செயலாளர்களாக உதவி அரசாங்க அதிபர்களே (தற்போதைய பிரதேச செயலாளர்) நியமிக்கப்பட்டனர். எனினும் உயர்நிலையிலிருந்த இலங்கை நிர்வாக சேவையினை சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தவிசாளர்களின் கீழ் கடமையாற்றுவது பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தவே இவ் ஏற்பாடு கைவிடப்பட்டது. தற்போது இலங்கை முகாமைத்துவ உதவியாளர் சேவையின் (முன்னர் எழுதுனர் சேவை) சிரேஸ்ட அலுவலர்களே பிரதேச சபைகளின் செயலாளர்களாகக் காணப்படுகின்றனர்.

## உள்ளூராட்சி சபைகளின் எல்லை நிர்ணயமும் தேர்தல்களும்

உள்ளூராட்சி என்பது மாகாணசபைகளுக்கு பரவலாக்கம் செய்யப்பட்ட ஒரு விடயாக இருந்தாலும், அதன் தேர்தல்கள் மற்றும் எல்லை நிர்ணயம் தொடர்பில் மத்திய அரசிற்கே உரிமை உண்டு. மத்திய அரசாங்கத்தின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலமே எல்லை நிர்ணயக்குழு அமைக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, காலத்திற்கு காலம் புதிய சபைகள் அமைக்கப்படுவதும், சில சபைகள் தரமுயர்த்தப்படுவதும் வழமையானதாகும். இறுதியாக 2017 இல் வெளியிடப்பட்ட எல்லை நிர்ணய குழுவின் அறிக்கைக்கு அமைய தற்போது இலங்கையில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை பின் வருமாறு:

மாநகர சபைகள் - 24
நகர சபைகள் - 41
பிரேதச சபைகள் - 276
மொத்தம் - 341 உள்ளூரதிகார சபைகள்

இவ்வாறே, உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் முறையிலும் அண்மைக்காலங்களில் பாரியளவிலான மாற்றங்கள் செய்யப்பட்டன. 1987 இற்கு முன்னர் உள்ளூரதிகார சபைகளுக்கு உறுப்பினர்கள் வட்டார அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டனர். எனினும் 1987 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மற்றும் 24 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டங்களின் படி தேர்தல் முறைமையானது விகிதாசார தேர்தல் முறைமையாக மாற்றமடைந்தது. இத் தேர்தல் முறை கடும் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படவே 2011 இல் புதிய சட்டமூலமொன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் படி கலப்புத் தேர்தல் முறையாக உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் முறை மாற்றமடைந்தது. இதன் போது வட்டார முறையிலிருந்து 70 சதவீதமனவர்களும், விகிதாசார முறையின் மூலம் 30 சதவீதமானவர்களும் தெரிவு செய்யப்பட உத்தேசிக்கப்பட்டது.

ஆனாலும் பின்னர் மீண்டும் 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க (திருத்த) சட்டம், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க (திருத்த) சட்டம், 2017 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க (திருத்த) சட்டம் என்பவற்றால் மீண்டும் திருத்தப்பட்டது.

இவற்றினடிப்படையில் தற்போது 60 சதவீதமான உறுப்பினர்கள் வட்டார முறை அடிப்படையிலும், 40 சதவீதமான உறுப்பினர்கள் விகிதாசார முறையிலும் தேர்ந்தெடுக்கபடவுள்ளதோடு, உள்ளூராட்சி சபையில் பெண்களின் உறுப்புரிமைச் சதவீதமானது 25 இற்கு குறையாமலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இம்முறையின் அடிப்படையிலேயே 2018 பெப்ரவரி 10 ஆந் திகதி இலங்கையின் 341 உள்ளூரதிகார சபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



# சென் ஆன்ஸ் சிற்றி

பிரதான வீதி இளவாலை தொடர்பு இல: 0778090975

## எமது சேவைகள்


- பல்பொருள் வாணிபம்
- எரிவாயு விநியோகத்தர்
- சகல விதமான இலத்திரனியல் உபகரணங்களுக்குமான பழுது பார்த்தல்
- மோட்டர் வயிண்டிங்
- கட்டிட நிர்மாண பணிகள்
- வயறிங்
- பிளம்பிங்
- பெயின்றிங்
- வெல்டிங் ( கேற் மற்றும் கிறில் )

இவ் சேவைகள் யாவும் வாடிக்கையாளரின் மன நிறைவுக்கேற்ப மிக தரமான முறையில் துரிதமாகவும் வழங்கப்படும்

**’நம்பி வாருங்கள்**
**எம் சேவைகளை பெற்று மன நிறைவோடு செல்லுங்கள்’**

# ஐங்கரன் ஐஸ் கிறீம்





ஐஸ் பழம்
ஐஸ் சொக்
ஐஸ் கப்
ஐஸ் கோண்
ஸ்பெசல் ஐஸ் கிறீம்



**உங்கள் தேவைகளுக்கேற்ப மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்**

தொ.இல:- 0779352707-0779362404

# HABITRAS
## CONSTRUCTION

Nelliady, Jaffna

# OUR SERVICES

* Planning & Designing
* Building Construction
* Preparation of house plans for Urban Council approval as per your requirement.
* Estimate (B.O.Q.) for housing loans.
* 3D Home Design , home interior Designing and landscaping

1

உங்களது

**கனவு இல்லம் நனவாக**

எங்களை

தொடர்புகொள்ளுங்கள்.

**0776141645**



# பிரகலாத் பவன்

## சைவ உணவகம்



தேவைகளுக்கு ஏற்ப
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுகொள்ள முடியும்

T.P:-0773957583 | 0756273050

நகுலேஸ்வரா வீதி கீரிமலை

# அருண் பல்பொருள் வாணிபம்






அனைத்து விதமான
பலசரக்கு பொருட்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**T.P:-0773957583 | 0756273050**

நகுலேஸ்வரா வீதி கீரிமலை

# லிங்கம் ஸ்ரோர்ஸ்



அனைத்து விதமான பலசரக்கு பொருட்கள்
ஹாட்வெயார் மற்றும் எலக்ரிக்கல் பொருட்களை
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
பிரதான வீதி இளவாலை





# புதிய
# காந்தி கல்வி நிலையம்

**தரம் 3 முதல் 11 வரையான**
**வகுப்புக்கள் நடைபெறுகின்றன.**



**அனுபவம் மிக்க ஆசிரியர் குழுவினால்**
**17 ஆண்டுகளையும் தாண்டிய**
**சிறப்பான ஓர் கல்விச் சேவை**

**பிரதான வீதி இளவாலை**

# SRIRAM HARDWARE & CONSTRUCTION

Nakuleswaram road,karukampanai,
keerimalai
T.P:- 0777279205 , 0777807373

# SRIRAM TRADE CENTER

Ampanai junction,pannalai,
telllippalai.
T.P:- 0772226241 , 0212059702

# குமார் பந்தல் சேவை

மேசைகள்,கதிரைகள், மங்கள நிகழ்வுகளுக்கான
அலங்கரிக்கப்பட்ட பந்தல்கள்,
மேடைகளுடனான மணவறைகள்,
சமயல் பாத்திர வகைகள்

என்பவற்றை *உங்கள் தேவைகளுக்கேற்ப*
*வாடகை முறையில்*
*பெற்றுக்கொள்ளலாம்*

*கல்லூரி வீதி இளவாலை*

# Kopithan Construction

கொல்லங்கலட்டி - இளவாலை



**சகல விதமான கட்டட வேலைகளும்**
**குறித்த காலத்தில்**
**நேர்தியாகவும் அழகாகவும்**
**மிக குறைந்த விலையில்**
**அமைத்து முடித்திட**
**நீங்கள் நாடவேண்டிய**
**ஒரே இடம்.**

தொடர்பு.இல - 0777805329 0763915750



# P.JVV Surveying

**உங்கள் காணிகளை உரிய முறையில்**
**நேர்த்தியாகவும் விரைவாகவும் அளக்கவும்**
**அதற்குரிய வரைபடங்களை சட்டரீதியான**
**அணுகு முறைகளுடன் கூடிய**
**எப்போதும் செல்லுபடியானதுமாக**
**பெற்றுக்கொள்ளவும்**
**இன்றே அழையுங்கள்.**



**தொ.இல:- 0778147223 - 0750416493**

# கிருஸ்ணபகவான் சைவ உணவகம்

**சுத்தமானதாகவும் சுகாதார முறையிலும்**
**தயார் செய்யப்பட்ட சைவ உணவு வகைகள்**





பிட்டு – இடியப்பம் – இட்லி
சோட்டிஸ் வகைகள்
மதிய உணவு

மேலும் உங்களுக்கு வேண்டிய உணவு வகைகளை
ஓடர் செய்தும் பெற்றுக்கொள்ளலாம்.

நகுலேஸ்வரம் ஆலயம் முன்பாக கீரிமலை



# அர்வினா பல்பொருள் வாணிபம்




அனைத்து விதமான
பலசரக்கு பொருட்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**பிரதான வீதி இளவாலை தொடர்பு.இல - 0776030540**

# கோகுலன் அரைக்கும் ஆலையும்
# கோபிதன் பல்பொருள் வாணிபமும்

-பிரதான வீதி இளவாலை-



அனைத்து விதமான
பலசரக்கு பொருட்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளவும்
அரிசி தீட்டுதல் அரிசி தூள் அரைத்துக்கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

தொடர்பு.இல -0777805329 0763915750





# ஜெயா
# வரத்தக நிலையம்



PHOTOCPY
RELOAD
பலசரக்குப் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள்

இவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்று முடிக்க
நீங்கள் நாட ேண்டிய ஒரே இடம்.

பிரதான வீதி இளவாலை

# அறிவகம்

Photo copy
Printing
Laminating
Binding
Typing

Stationaries
Mobile reloads and cards
DVD/CD



மற்றும் பாடசாலை உபகரணங்களையும்
பெற்றுகொள்ள முடியும்.

கல்லூரி வீதி
இளவாலை

தொடர்பு இல:0772487673

# நிரோ வெதுப்பகம்

வீட்டு தேவைகளுக்கும்
மற்றும் விற்பனைக்குமான
பாண் , பணிஸ் வகைகள்
போன்றவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் தரமானதாக
பெற்றுக்கொள்ளலாம்



கல்லூரி வீதி
இளவாலை

# DTH Best Recharge

உங்கள் அபிமான தொலைக்காட்சி அலைவரிசைகளை இல்லங்கள் தோறும் இரசித்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**மேலும் புது இணைப்புக்கள் திருத்த வேலைகள் என்பன இலாபகரமாக செய்து கொடுக்கப்படும்.**




தொடர்பு.இல:-0755268535-0712895118



# NEW MATHS ACADEMY

**1.தரம் 1 முதல் 11 வரையான வகுப்புக்கள் நடை பெறுகின்றன.**

**2.பிரபல ஆசிரியர்களால் தரம் 4,5 ற்கான புலமைப்பிசில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.**

**3.தரம் 9,10,11 வகுப்பிற்கான கடந்தகால பரீட்சை வினாத்தாள் மீட்டல் வகுப்புக்கள்.**



## அனுமதிக்கு முந்துங்கள்

வைத்தியசாலை முன்பாக இளவாலை

தொ.இல:- 0778081120

வாலையூர் வாலிபரின்...

# நேத்திரம்

மயிலங்கூடல் அன்னை வேளாங்கன்னி ஆலயம்



இளவாலை ஆனை விழுந்தான் விக்ன விநாயகர் தேவஸ்தானம்

